# மருதம்




மருதம் 2000 - கலை இரவு

**The best choice is the only choice**

ajb

# ஏ.ஜே.பி. டிரவல்ஸ்

IATA



*Try us first*

**Competitive fares to worldwide destinations**
**2500 FREE travel insurance per ticket**
**Instant ticketing on major airlines**

ஒன்பதாவது ஆண்டில் கால் பதிக்கும்
இதே வேளை, உலகெங்கும் சுற்றி
பறந்துவர உரிய நேரத்தில், உகந்த
ஏற்பாடுகள் செய்து தரப்படும்

AIRLANKA
Air India
AIR CANADA
CATHAY PACIFIC
Canadian Airlines
Delta Air Lines
KLM
SINGAPORE AIRLINES
swissair
US AIRWAYS

**Tel: (416) 412-0244**
(கெனடி & எல்ஸ்மெயர் சந்திப்பில்)
**Fax: (416) 412-0219**

# AJB Travels

**1900 KENNEDY ROAD**
(Kennedy & Ellesmere),
**SCARBOROUGH, ON. MIP 2L8**

# மருதம்

புத்தாயிரம் ஆண்டில் அடியெடுத்து வைத்து புதுநூற்றாண்டில் பாதம் பதிக்கவிருக்கும் மருதம் 2000 தொடர்ந்தும் 21ம் நூற்றாண்டில் பலமலர்களைத் தொடுத்து மாலையாக்க விருக்கிறது.

மருதநிலமக்களின் சிந்தனைகளைத் தேக்கி வளரும் சமுதாயத்துக்கு வழங்கும் நற்பணியில் தனது இரண்டாவது அடியினைப் பதித்திருக்கிறது.

சங்ககாலத் தமிழர்கள் மனித நாகரிகத்தின் படிமுறை வளர்ச்சியினை குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்ற ஐவகை நிலங்களாக எடுத்து ஆராயமுற்பட்டனர். ஐவகை நிலங்களிலும் ஐவகை ஒழுக்கங்களும் வாழ்க்கை முறைகளும் தனித்துவமாக வளர்ச்சியடைந்தவை.

மலையும் மலைசார்ந்த இடமான குறிஞ்சியில் மக்கள் வேட்டையாடியும் காடுபடு திரவியங்களைச் சேகரித்தும் மரவுரிதரித்தும் இறுதியில் சிறுதானியப் பெயர்ச்சிப் பயிர்ச் செய்கைக்குத் தங்களை மாற்றிய சமூகத்தைக் கண்டனர் இரண்டாவது வளர்ச்சிப்படியிற் காடும் காடுசார்ந்த இடமுமான முல்லையில் நாடோடியான அல்லது இருப்பான விலங்கு வேளாண்மையுடன் கூடிய மக்களைக் கண்டனர். அடுத்து மருதம் என்ற வயலும் வயல்சார்ந்த இடத்திலும் இருப்பான பயிர்ச்செய்கையினையும் பயிர்வேளாண்மை நாகரிகத்தினையும் கண்டனர். கடலும் கடல்சார்ந்த இடமுமான நெய்தல் நிலத்தில் கடல்கடந்து தொழிலுக்கும் கல்விக்கும் போகும் மக்களையும் கரையோரங்களில் வாழும் மக்களையும் கொண்ட நகரநாகரிகத்தின் சாயலைக் கண்டனர். பாலை எனப்படும் புதுநிலப்பகுதிகளில் தமது நாகரிகங்களைவிட்டு புதுநாகரிகங்களில் தம்மை இசைவாக்கிப் புலம்பெயரும் மக்களையும் கண்டனர்.

நாங்கள் பாலை என்ற சங்ககாலத்தமிழர் வகுத்த நிலப்பகுதிக்கு வந்து குடியேறியவர்கள். நாங்கள் பிறந்துதவழ்ந்து ஓடிவிளையாடிய எங்கள் மருதநில வாழ்க்கையினையும் அதன்சிறப்புக்களையும் எங்களிடையே பகிர்ந்து கொள்ளவென இருக்கும் ஒரு சாதனம் இது.


நாம் இச்சொத்தினை எங்கள் சந்ததியினரூடாக வளர்த்துச் செல்லுவோம். அவர்களை நல்வழியில் நடத்திச் செல்ல மருதநிலப்பயிர்ச்செய்கை உதாரணமாக விளங்குகிறது.

" ஏரினும் நன்றாம் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

இதனை உழவு என்ற அதிகாரத்திற் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். தனியாக உழுது பதப்படுத்துவதனை விட எருவிடுதல் சிறந்தது. பயிர்வளரக்களைகட்டுதல் அதைவிடச் சிறந்தது. சரியான நேரம்பார்த்து நீர் பாய்ச்சுதல் அதனைவிடச் சிறந்தது. அதற்குமேலாக ஆடுமாடு பூச்சிபுழுக்களிலிருந்து பயிரைக்காப்பது அதைவிட நல்லது. புதியசந்ததியினரைப் பொருந்தா நாகரிக வாழ்க்கைமுறைகளிலிருந்து காப்பாற்ற வேண்டும். வளரும் பயிரை முளையிலேயே கண்டு தெளிந்து வளர்த்தவர்கள் மருதநிலமக்கள். மாடு, மேழி, குழந்தைகள் அவர்களது செல்வங்கள். குழந்தைகளை விதைநெல்போன்று பாதுகாக்க வேண்டியது எமது கடமை. மருதத்தின் இலக்கும் அதுவே.

மருதம் வெளியீட்டுக்குழு
ஜூலை 15, 2000

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8471 5636



# சமர்ப்பணம்

விடுதலைப் போராட்டத்திலும்

அனைத்து வன்செயல்களிலும்

இன்றுவரை

தங்கள் இன்னுயிர்களை ஈந்த

அனைத்து உயிர்களையும்

நினைவு கூருவோம்

# கழக கீதம்

வாழிய உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகம் கனடா
வாழிய வாழிய வாழ்க பல்லாண்டே

உலகு உவந்திடும் உழவர் வாழ் நாடாம்
தமிழீழத்தின் இதயமாய் ஒளிரும்
பலகலை வளர்த்திடும் பாடசாலைகளும்
வீரர்கள் அணி செயும் விளையாட்டுக் கழகங்களும்
தலமதிற் பழைய சிவாலயமும் பொறிக்கடையம்மனும்
திக்குகள் தோறும் விநாயகர் கோயிலும்
பலரும் போற்றிடும் பத்திமா ஆலயமும்
நீடு நிலைத்துப் பெரும்புகழ் பரப்பிட – வாழிய

முந்தியே தொடங்கிய உருத்திபுரம் விளையாட்டுக் கழகமும்
சந்திரோதயாவும் உழவர் ஒன்றியமும் தனித்தனி நடத்திடும் சனசமூகநிலையம்
புத்தியை வளர்க்கும் புத்தகநிலையம் வாசிகசாலைகள் அனைத்தும்
உந்து சக்தியாய் உலகுளோர் போற்றிட உறுதுணை புரிந்திட – வாழிய

தெங்கொடு சென்நெலும் முக்கனி விருஷமும்
எங்கெங்கும் ஆவினம் மாவினம் தன்னொடு
பொங்கிடு நீர் நிலை புகழ்தரு வயல் நிலம்
தங்கிடு உருத்திரபுரப் பதி சிறப்புற – வாழிய

கண்ணியமான கனடா நாட்டிற் கலைகள் பரப்பியே
எண்ணிய செல்வங்கள் அனைத்தும் பெற்று
திண்ணிய ராக விளையாட்டுடனே ஒன்று கூடவும்
மண்ணினிற் சிறந்து ஒற்றுமை வளர்த்திட – வாழிய

# என் பேனாமுனையில் இருந்து..........

இன்று சிறப்புடன் நிகழ்ந்து கொண்டிருக்கும் எமது மருதத்தின் இரண்டாவது கலைகலாசார விழாவிற்கு மருதத்தின் இரண்டாவது கலைகலாசார விழாவிற்கு வருகைதந்திருக்கும் உங்கள் அனைவரையும் நன்றியுடனும் வணக்கத்துடனும் வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே'
என்றான் பாரதி

எமது பிறப்பிடமான தாயகத்தையும் அந்நாட்டின் சிறப்புமிகு பிணைப்புக்களான கலைகலாச்சார விழுமியங்களையும் ஞாபகமூட்டும் சந்தர்ப்பம் இதுவாகும்.

தென்னாபிரிக்கா, பிஜித்தீவுகள், மொறிசியஸ் போன்ற நாடுகளுக்குச் சென்ற நம்மவர்கள் இழந்துவிட்ட கலைகலாச்சாரம் பண்பாடு என்பவற்றை எண்ணிக் கவலைகொள்வதுபோல் ஆகிவிடாது மொழி, கலை பண்பாடுகளை வளர்க்க இதுபோன்ற நிகழ்வுகள் இன்றியமையாததாகும்.

தான் சார்ந்த சமூகத்திற்க ஏதாவது ஒருவகையில் சமூகப்பணிசெய்வதன் மூலம் தம் ஆத்மபசியைத் தீர்த்துக் கொள்ள எத்தனைபேர் முன்வருகிறாகள்....இது ஒரு நிண்ட வினைவாகும். இவ்வகையில் இன்று எத்தனை பேர்தான் பிறந்த நாட்டிற்கும் சமூகத்திற்கும் தம் இனத்திற்கும் நலம் கிடைக்க உழைக்கிறார்கள் என்று நினைத்தால் மிக அரிதென்றே பதில் கிடைக்கும். பொருளாதார அடிப்படையிலான வாழ்க்கை முறையும் நேரமின்மையும் இன்றைய நடைமுறை உலகின் சிக்கலான போக்குகளும் மக்களின் மனநிலையை மாற்றிவிடுகின்றன. இது தொடருமாயின் நம்நாட்டின், நம் இனத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

இளம்சமுதாயம் முதியோருடன் இணைந்து நாட்டுக்காகவும், மொழிக்காகவும் உழைக்க முன்வரவேண்டும். கழகத்தின் வளர்ச்சியிலும் மருதம் நிகழ்ச்சியின் செயற்பாட்டிலும் அக்கறை காட்டும் அனைவர்க்கும் பொதுநிர்வாகசபையினருக்கும் ஊன்றுகோலாய் அமையும் விளம்பரம் தரும் ஸ்தாபனங்களுக்கும் நன்றி கூறுவதோடு எம்மாலான பணிசெய்து நாமும், நாடும்வளர உழைப்போமாக.

நன்றி

நா. குணசேகர்
தலைவர்

# சிந்திப்பதற்காய்.....................

சிறப்புற நடந்து கொண்டிருக்கும் இந்த மருதம் கலை இரவிற்கு வருகை தந்திருக்கும் உங்களை இந்த பக்கத்தில் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

எம்பண்பாட்டு கலாச்சார சாயல்களையும் வரலாற்று மரபுகளையும் அழிந்து விடாது காக்கும் எமது பெரும் முயற்சியில் இரண்டாவது ஆண்டில் இரண்டாவது மருதம் உங்கள் கைகளில் தவழ்கிறது.

நாம் எல்லோரும் பிறந்த தேசத்தின் நற்குடிகள். சந்தர்ப்ப சூழ் நிலைகளால் நாம் மாறிவிடக் கூடாது. உறுதியுடனிருந்து உயர்வாக சேவையாற்றுவோம். இறுதிவரை உழைப்போம்.

நாம் ஒவ்வொருவரும் எண்ணிக் கொண்டிருப்பதனால் ஆகப்போவது ஒன்றுமில்லை என்பது நம் எல்லோருக்கும் தெரியும்

இந்த எண்ணங்கள் செயல்வடிவாக்கப்பட வேண்டும். எல்லோரும் ஒன்றுபட்டு எம் நல்ல சிந்தனைகளுக்கு உயிர் கொடுப்போம்.

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'
நன்றி.

த. குமணன்
செயலாளர்

# உருத்திரபுரம் மகாவித்தியாலய வரலாற்றுக் குறிப்பு

"வன்னி வள நாடு சோறுடைத்து" எனும் வாக்கியத்திற்கு இலக்கணமாக அள்ளித் தரும் நெல் மணிகளால் நிறைந்திருக்கும் வன்னி நாட்டின் ஒரு பகுதியாக கிளிநொச்சி இலங்குகிறது. கனகராயன் கங்கை எனும் பருவமங்கை இரணைமடு எனும் அணைக்கட்டில் தேங்கி கிளிநொச்சி நகருக்கு உயிரானாள் எனும் வரலாறு இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே கிளிநொச்சியின் வரலாறாகும்.

எனினும் இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு முன்னரே இந்நிலத்தில் எம் மூதாதையர்கள் ஆதி திராவிடர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் குஞ்சுப் பரந்தன் பகுதியில் கிடைத்துள்ளது. ஏறக்குறைய கி.மு. 200 ஆண்டுகளை சார்ந்தவை இத்திராவிட முதுமக்கள் ஈமத்தாழி என வரலாற்றாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அண்மையில் பூநகரி பகுதியில் யாழ்/பல்கலைக்கழக வரலாற்றுத்துறை ஆசிரியர் திரு. புஸ்பரட்ணம் அவர்களின் ஆய்வும் அதற்குப் பின்னாக வரலாற்று ஆசிரியர் திரு மேகநாதன் அவர்களால் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக பூநகரி உருத்திரபுரம், அக்கராயன் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இப்பகுதியில் ஏறக்குறைய 12ம் நூற்றாண்டு அளவில் நாகரீகம் மிக்க மனிதக் குடிகள் வாழ்ந்ததற்கான சான்றுகளை உறுதிப்படுத்தியுள்ளன. இவை தொடர்பாக தொல்பொருள் ஆய்வுகள் இன்றும் தொடர்கிறது.

வெளிக்கொண்டு வரப்பட்ட தொல்லியல் ஆய்வுச் சான்றுகளில் ஒன்றான உருத்திரபுரீஸ்வரச் சிவாலயம் 1955ம் ஆண்டில் வேலாயுத சுவாமிகள் என்பவரால் உருத்திரபுரத்தின் மேற்கே அடர்ந்திருந்த காடுகளின் மத்தியில் கண்டுபிடிக்கப்பட்டுப் புனருத்தாரணம் செய்யப்பட்டது. இதனருகே இன்றும் பல்வேறு வகையான தொல்லியல் சான்றுக்கான சிதைவுகள் பரவிக் காணப்படுகின்றன. புராதன குளம் ஒன்றின் அருகே காணப்படும் இச்சிவாலயம் பற்றிய குறிப்புக்கள் 1872ம் ஆண்டு வடபகுதி அரச பிரதிநிதியாக இருந்த சேர் வில்லியம், துவைனம் எனும் ஆங்கிலேய அதிகாரியின் குறிப்புப் பதிவேடுகளில் காணப்படுவதாக இன்றைய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தி. இராசநாயகம் அவர்கள் தெரிவித்துள்ளார். இதேபோன்று 1983ல் இவ்வாலயத்திற்கு வருகை தந்திருந்த யாழ்/ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியர் திரு. இரகுபதி அவர்கள் அகழ்வு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட இவ்வாலய சிவலிங்க ஆவுடையார் சதுரவடிவமாக அமைந்திருந்ததைக் கொண்டு இவ்வாலயம் ஏறக்குறைய 12ம் நூற்றாண்டில் சோழர்களால் ஏற்படுத்தப்பட்டது என்பதை உறுதிசெய்தார். இதே போன்ற ஒரு சிவாலயம் பூநகரி மண்ணித்தலைப் பகுதியில் அமைந்திருந்ததும் ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது. தற்போது அக்கராயன் பகுதியில் காட்டம்மன் கோயிலை அண்டிய பகுதியில் சிதைவுகளில் இருந்து இப்பகுதியிலும் இவ்வாறான ஒரு சிவாலயம் இருந்ததை இதைப்பற்றி ஆராய்ந்த வரலாற்றாசிரியர் திரு மேகநாதன் தெரிவித்துள்ளார். பல்வேறு காரணங்களால் இப்பகுதிகள் மக்களால் கைவிடப்பட்டு மீண்டும் காடாகியது.

இரணைமடுக்குள விஸ்தரிப்பின் கீழ் மீண்டும் மக்கள் குடியேற்றமாக மாறத்தொடங்கிய இப்பகுதியில் வடக்கே கடனீரேரியை அண்டிக் காணப்பட்ட ஒரு சில புராதன கிராமமக்கள் நீங்கலாக 1939ல் கணேசபுரம் முதலாவது விவசாயக்குடியேற்றத்திட்டமாகியது. இதன் பின் 1949ம் ஆண்டு யாழ்ப்பாண அரசசெயலகத்தினால் இதன் காரியாதிகாரி பிரிவுகளிடையே விவசாய உற்பத்திக்காகக் காணி வழங்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, 1950ல் புகழ்வாய்ந்த பொறிக்கடவை கண்ணகை அம்மன் ஆலயத்தைக் கொண்ட புராதன கிராமமான குஞ்சுப்பரந்தனிற்கு தெற்கே பரந்தன் புதியகுடியிருப்பு எனும் பெயரில் 200 பேருக்கு காடழித்துக் காணிகள் வழங்கப்பட்டது. 1953ல் மாதாபுரம் (8ம் வாய்க்கால்) எனும் கிராமமும் 1961ல் சிவநகர் எனும் இடமும்' 1969ல் சக்திபுரம் (எள்ளுக்காடு) எனும் இடமும் இக்கிராமத்தின் விஸ்தரிப்புத் திட்டத்திற்குட்படுத்தப்பட்டு உருத்திரபுரத்துடன் இணைக்கப்பட்டது.

இக்காலத்தில் இப்பகுதியில் குடியேறிய மக்களின் பிள்ளைகளுக்கென உருவாக்கப்பட்ட பாடசாலை கட்டட வேலைகள் முற்றுப் பெறாக்காரணத்தால் கூழாவடிச்சந்திக்கு அருகில் செயற்பட்டு வந்த விவசாயப்பண்ணைக்கு அருகே தற்காலிக கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டு கல்விப்பகுதியினரால் திரு. இ. சிதம்பரப்பிள்ளை என்பவர் அதிபராக நியமிக்கப்பட்டார். இக்கால கட்டத்தில் திரு. கிருஷ்ணபிள்ளை என்பவர் இப்பகுதி குடியேற்றத்திட்ட முகாமையாளராக கடமையாற்றினார் 1950 -05-15ல் 40 பிள்ளைகளுடன் இப்பாடசாலை இரணைமடு பரந்தன் புதியகொலனி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை எனும் பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. 19 நாட்கள் சேவையுடன் திரு. சிதம்பரப்பிள்ளை மன்னார் கோவிற்குளம் பாடசாலைக்கு

மாற்றப்பட 05-06-1950ல் திரு. வே. கதிரவேலு என்பவர் பாடசாலை அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். 12-02-1951ல் இப்பாடசாலை தனக்குரிய நிரந்தரக் கட்டடத்தில் இருந்து செயற்பட தொடங்கியது. திரு. வே. கதிரவேலு 1958வரை இப்பாடசாலையின் அதிபராக இருந்து இப்பாடசாலை வளர்ச்சிக்கு உழைத்ததை இப்பகுதி மக்கள் இன்றும் நன்றியோடு நினைவு கூருகின்றனர்.

காடழிப்பினால் மரங்கள் அற்றுப் போன எமது பாடசாலைச் சுற்றாடலில் பாடசாலைக்கட்டடத்தின் முன்பாக முதலாவதாக நடப்பட்ட வெள்ளைக்கொழும்பான் மாமரம் நம் மண்ணில் தமிழ் வளர்த்துப் புகழ் பெற்ற இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களால் நடப்பட்டதாகும். அதேபோன்று இன்று பெருவிருட்சங்களாக விளங்கும் வேப்பமரங்கள் இரண்டும் திரு. ச. குமாரவேலு, திரு. த. பழனிவேலு எனும் ஆசிரியப் பெருந்தகைகளால் நடப்பட்டது. பின்னான காலத்தில் எமது பாடசாலை சுற்றாடல் காலத்திற்குக் காலம் பல்வேறு அதிபர் ஆசிரியர்களால் மரங்கள் நடப்பட்டு சோலை யாக்கப்பட்டது.

எமது பாடசாலையில் 1962ல் விவசாய ஆய்வுகூடமும், 1967ல் விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைக்கப்பட்டன. கிளிநொச்சி பகுதியில் முதன்முதலில் எமது பாடசாலையிலும் பளைமகாவித்தியாலத்திலும் மட்டுமே விவசாய விஞ்ஞான ஆய்வுகூடங்கள் அமைக்கப்பட்டன. 1954 தொடக்கம் சில காலங்களுக்கு எமது பாடசாலையில் கூட்டுறவுச் சங்கம் சிறப்புற நடாத்தப்பட்டது. பாடசாலையின் முதலாவது விளையாட்டுப் போட்டி 1955இல் அப்போதைய வட்டாரக்கல்வி அதிகாரி திரு. அருமைநாயகம் அவர்களைப் பிரதம விருந்தினராகக் கொண்டு சிறப்புற நடத்தப்பட்டது. அப்போது நாவலர், வள்ளுவர், பாரதி எனும் பெயரிலேயே இல்லங்கள் அமைந்திருந்தன. இவை 1963இலேயே தற்போது உள்ள சேரன், சோழன், பாண்டியன் இல்லங்களாக மாற்றப்பட்டன. இவ்வாண்டிலேயே பாடசாலைக் கொடியும் உருவாக்கப்பட்டது. எமது பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் 1956ல் முதன் முதலில் எஸ்.எஸ்.சி எனப்படும் சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டனர். 1957ல் மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் திரு. வே. பாலசுந்தரம். திரு. தம்பிஐயா, திருமதி மனோன்மணி உட்பட பலர் சிறப்புச்சித்தி எய்தினர். இவர்களுக்கான உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு பின் ஆசிரியர் இன்மையால் ஒருவருடத்துடன் இடைநிறுத்தப்பட்டது. இதேபோன்று 1968ல் ஆரம்பிக்கப்பட்ட எஸ்.எஸ்.சி. எனப்படும் உயர்தர வகுப்பு மாணவர்களில் நால்வர் இப்பரீட்சையில் சித்தியடைந்தனர். பின் ஆசிரியர் இன்மையால் இவ்வகுப்புகள் இடைநிறுத்தப்பட மாணவர்கள் வேறு பாடசாலைகள் மூலம் தோற்றினர். இவர்களுள் திரு. க. விமலதாசன், அமரர் திரு. நடேசபிள்ளை என்பவர்கள் பல்கலைக்கழகம் சென்றனர். இவர்களுள் அமரர் திரு. நடேசபிள்ளை என்பவர் இலங்கை நிர்வாகசேவைப் பரீட்சையில் சித்தி அடைந்து நிர்வாக அதிகாரியாக கடமையாற்றி அமரரானார்.

இதேபோன்ற பல்வேறு காலங்களில் எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வி முதல் சாதாரண தரம்வரை கற்று உயர்தரக் கல்வியை வேறு பாடசாலைகளில் பெற்றவர்கள் பலர் பல்கலைக்கழக அனுமதி பெற்று பட்டதாரிகளாகியுள்ளனர். இவர்களுள் திரு. க. கணேசு, திரு. க. மகேசன் தற்போதைய எமது பாடசாலை அதிபர் திரு. மு. சண்முகராஜா, திரு. ஐயம்பெருமாள், திருமதி. கமலாதேவி, சுரேந்திரா, திருமதி. மீனலோஜினி இதயசிவதாஸ், செல்வி க. மஞ்சுளா, திருமதி சர்வேஸ்வரி, சிவகுமார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இதன் பின் திரு. கா. நாகலிங்கம் அவர்கள் அதிபராக கடமை ஆற்றிய காலத்தில் 1987ல் எமது பாடசாலையில் மீண்டும் உயர்தரக் கலை வர்த்தக வகுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு பாடசாலை தரம் ஒன்று C பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. இத்தொடரில் 1993ல் செல்வி. அன்ரனீற்றா யூலியற் யாக்கோப்பு என்பவரும் 1994ல் செல்வி அ. கலைவாணி என்பவரும் 1995ல் திரு. க. சிவகுமார், செல்வி மு. கயல்விழி, செல்வி. பா. பவானி என்பவர்கள் பல்கலைக்கழகக் கலைப்பீடத்திற்கும் திரு. அ. சிம்சன்போல் என்பவர் சட்டபீடத்திற்கும் தெரிவாகினர். இதன்பின் 1996ல் திரு. செ. பிரதீபன் என்பவர் கலைப்பீடத்திற்கும் செல்வி. கா. சந்திரவதனி என்பவர் முகாமைத்துவக் கற்கைக்கும் தெரிவாகியுள்ளனர்.

இதேபோன்று வவுனியா கல்வியியற் கல்லூரிக்கு செல்வி. ச. சுதர்சினி, செல்வி. க. கலைவாணி, செல்வி. தி. சித்திரலேகா ஆகியோரும் உடற்கல்வித்துறைக்கு எமது பாடசாலையில் இருந்து தெரிவாகி உள்ளனர். இதே போன்று எமது பாடசாலையில் பாடசாலைக் கல்வியை பெற்றுக்கொண்ட செல்வி. நவமாலசேகரி நல்லையா, செல்வி. ஜெயாநாகலிங்கம் ஆகியோர் 1991ல் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரிக்கு சங்கீத டிப்புளோமா நெறிக்கு அனுமதி பெற்றுள்ளனர்.

எமது பாடசாலையில் க. பொ.த. (சாதாரணம்) வரை கல்வி கற்று, உயர்தரம் விஞ்ஞானப் பிரிவு இன்மையால் வேறு பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்று பின்வருவோர் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். திருமதி. லதா மோட்சலிங்கம் விஞ்ஞானமானி பெற்றுள்ளார்.

தற்போது பேராதனை பல் வைத்திய பீடத்தில்

செல்வி. நந்தசுகுமாரி நல்லையா. மிருக வைத்தியத்துறையில் செல்வன் உ. உஷாநந்தன் விஞ்ஞானக் கற்கைக்கு செல்வன் து. திருவருட்செல்வன் செல்வி ஜெயவதனி நாகநாதன் ஆகியோரும் பொறியியற் பீடத்துக்கு செல்வன் து. திருப்பதிக்குமரனும் தெரிவாகியுள்ளனர்.

இதே போன்று திரு. மு. அஞ்சனகுமார், செல்வி தமயந்தி கனகலிங்கம் ஆகியோர் மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியல் டிப்ளோமா பெற்றுள்ளனர்.

1996ல் பரீட்சைக்கு தோற்றிய எமது மாணவன் செல்வன். ப. சுரேந்திரன் வணிக கற்கைக்கு இவ்வாண்டு தெரிவாகியுள்ளார்.

1996ல் இடம்பெற்ற பாரிய இராணுவ நடவடிக்கையான "சத்ஜெய"வுடன் எமது பாடசாலையும் இடம்பெயர்ந்து ஸ்கந்தபுரம் இல-2 பாடசாலை வளாகத்தில் தற்காலிக கொட்டகைகளில் இயங்கத் தொடங்கியுள்ளது. 2000ம் ஆண்டில் பொன்விழாவைச் சந்திக்கும் எமது பாடசாலை விளையாட்டுத் துறையிலும் குறிப்பாக உதைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் என்பவற்றில் பலமுறை முதன்மை நிலை பெற்று சம்பியனாகியது. குறைவான எண்ணிக்கையான பிள்ளைகளுடனும் வசதியீனங்களுடனும் செயற்படும். இன்றைய காலகட்டத்திலும் கடந்த வருடம் (1998) கரைச்சிப் பிரிவு போட்டிகளில் 17வயதுக் கீழ்ப்பிரிவில் வலைப்பந்து அணிமுதலிடத்தையும், 17 வயதுக்குக் கீழ்ப்பிரிவில் உதைப்பந்தாட்ட அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

வளர்ந்து வரும் மாணவசமூகத்தினர்க்கு வழிகாட்டியாக விளங்கும் பாடசாலை தன்னகத்தே கவின்கலைப் பயில்வுக்கு என மன்றம் ஒன்றை கடந்த 1997ம் ஆண்டு விஜயதசமி அன்று அமைத்தபோதும் இசைக்கருவிகள் இன்மை பயிற்றுவதற்கான ஆசிரியர் இன்மை எனும் பல்வேறு காரணிகளால் இடைநிறுத்தப்பட்டது. எதிர்காலத்தில் எமது சொந்த கிராமத்திற்கு திரும்பிய பின் இந்நுண்கலை மன்றம், பாடசாலை விவசாயத் தேவைக்கு எனஒதுக்கப்பட்ட நிலத்தில் ஒரு மாதிரி விவசாயப்பண்ணை என்பன அமைக்கப்பட்டால் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு இவை உறுதுணையாக அமையும்.

உருத்திரபுரத்திற்கு கல்வி ஒளிபரப்பும் எம் வித்தியாலயம் சிறப்புற்று ஓங்க எல்லோரும் சேர்ந்துழைப்போம்.

தொகுப்பு
அ.அன்ரன் அன்பழகன்
ஆசிரியர்
கிளி/உருத்திரபுரம் ம.வி.

நாங்கள் எந்த மலிவு விலைகளையும் சமன் செய்வோம்


Aruna Food

East West Indian and Canadian Groceries

VIDEO CONVERT SYSTEM

அருணா பூட்

3585 KEELE STREET, UNIT 11,
NORTH YORK, ON. M3J 3H5
TEL: (416) 638-9554
FAX: (416) 638-9584



# நினைவுடன் நின்னிடம் நோக்கி



என் பிஞ்சு விரல்களால்
அளைந்து ஒழுகிய
என் தேசத்து மண்ணை
எண்ணி எண்ணியே – என்
நினைவுகள் கழிகின்றன!

அரிச்சுவடிகள் கூட
வெட்டியழித்துப்
புதைக்கப்படும்
இக்காலத்தின் கொடூரத்தில்
இன்று எம் தேசம்

அம்மண்ணை நேசிக்கும்
எம் நெஞ்சம் இங்கே
கணனியிலும் கண்ணீர் வடிக்கிறது
ஆனாலும் நான் இங்கு எதை எதையோ
தொட்டாலும் ஆலடியில்
நான் பிடித்த ஏர் சுகந்தான் எங்கே?

என் மழலை மொழி வீச்சில்
ஓங்கி அலையடித்த
அந்த பள்ளிக்கூட வெளியும்
குளிப்பதற்கு தலைகுத்தித்துரிசும்
அண்ணாவுடன் ஆலமரத்தில் ஏறி
அம்மாவிடம் அடிவாங்கியதும்
இந்த வேப்ப மரத்தின்
தீரமும்.....
இன்னும் "கடதாசிப்பூமரம்"
பூத்தா இருக்கும்?

அகதியாய் நான் இங்கு
அன்னியப் படுத்தலில்
என் மண் மீதான
என் பிரிவு
நீளும் கொடூரம்!
யார் இந்த
சுழலில் என்னைச்
சேர்த்தது?
பூவரச இலை இணுங்கி
தம்பியும் நானும்
பீப்பீக் குழல் ஊர்வலம் போனது
இன்றும் நேற்றும் போல
மறக்க முடியவில்லை!

அன்னியோன்யம் தவிர்ந்த
அன்னியப் படுத்தலில்
எல்லாம் சிதறுப்பட்டு
இன்னும் எத்தனை காலங்கள்
என் "ஆலடி வயலை"ப்
பிரிந்து அலைவது?

சிறுபோக
வயல் விதைப்பில்
ஆலடிக் கிணற்றில் பிழாக்கட்டி
தண்ணீர் குடித்து மகிழ்ந்து விதைப்பதும்

என் பிஞ்சு விரல்கள்
அளைந்து ஒழுகிய – என்
தேசத்து மண்ணை
எப்போது தான் நான்
கண்ணாரக் காண்பதும்....
அள்ளி மகிழ்வதும்.....?
வாழ்ந்து இனிப்பதும்.......?

இரத்தினம் தயானந்தன்
பிரான்ஸ்

# தாய்மொழிக்கல்வியில் இலக்கியங்கள்

இன்று உலக நாடுகளைப் பொறுத்தவரை தாய்மொழிக் கல்விக்கே அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. மொழியே யாவற்றிற்கும் அடிப்படையாக அமைந்திருப்பதாலும், மொழியானது பண்பாட்டுக்காவி, பண்பாட்டுக்கண்ணாடி எனவும் போற்றப்படுவதால், தாய்மொழிக்கல்வியானது இன்றியமையாச் சிறப்புடையதாகின்றது. இத்தகைய தாய்மொழிக் கல்வியை சிறப்பாகக் கற்கத் தூண்டும் தூண்டியாக இலக்கியங்கள் இடம்பெறுவதை நாம் மறந்து விடமுடியாது. ஒரு சமுதாயத்தின் பிரதிபலிப்புக்களை அடுத்த சந்ததிக்கு கையளிக்கும் சான்றேடுதான் இவ்விலக்கியங்கள். இத்தகைய சிறப்புடைய இலக்கியங்கள் தாய்மொழிக் கல்விக்கு ஆற்றும் பணியானது உயர்வானதாகும். இந்த வகையில் எம் தாய்மொழி தமிழ் என்ற அடிப்படையில் இக்கட்டுரையை ஆராய விளைகின்றேன்.

மாணவரின் மொழித்திறன் சரியான முறையில் வளர்க்கப்படுமிடத்து சிந்தனைத்திறனும், சமுதாயத்தை விளங்கிக் கொள்ளும் ஆற்றலும், சமுதாயத்திற்கேற்ப தன்னை தயார்படுத்திக் கொள்ளும் திறனும் இயல்பாகவே ஏற்படும். இத்தனை எழுச்சிக்கும் மொழியானது தொடர்பாடல் கருவியாக செயல்படுவதே காரணமென்றால் மிகையாகாது. இத்தகைய பலசிறப்புக்களைக் கொண்டிருக்கும் தாய்மொழியைக் கற்பிப்பதிலும் சில இடர்பாடுகள் இருப்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவதானிக்கப்பட்ட இடர்பாடுகளில் பிரதானமாக பேச்சுமொழி ஒரு வகையினதாகவும், எழுத்துமொழி இன்னொரு தன்மையுடையதாக இருப்பதும் பிரதேச ரீதியில் வேறுபட்ட மொழிப்பயன்பாடு (மலையகம், முஸ்லீம், மகக்கள் வாழும் பிரதேசம், கொழும்பு) நிலவுவதாலும் மொழியைக் கற்பிக்கும்போது இடர்பாடுகள் ஏற்படுகின்றன. இந்நிலையில் தாய்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர் வேறுபட்ட பிரதேசங்களில் வழங்கிவரும் மொழிநடையை அறிந்திருப்பதும் இன்றியமையாததாகின்றது.

இன்னும் தாய்மொழியைப் பொறுத்தவரையில் மாணவர் மத்தியில் கடினத்தன்மையுடையதென எண்ண வைப்பது இலக்கணமொழியாகும். மொழியை கற்பிக்கின்றபோது செய்யுட்களாக இருக்கும் இலக்கியத்தை விரும்புமளவிற்கு இலக்கணத்தை விரும்பும் தன்மை மிகக் குறைவென்றே கூறலாம். இதற்கான காரணமென்று பார்த்தால்,

1. இலக்கண நூல்கள் எளிமைத் தன்மையற்று பாரம்பரிய நூல்களாக இருப்பது
2. மொழி வரலாற்றில் மாற்றம் ஏற்பட்டிருப்பினும் அவை பற்றிய நூல்கள் எழுதப்படாமை
3. மொழியானது விவரண நோக்கிலன்றி விதிமுறைப்பாங்கில் அமைந்திருப்பது
4. பயன்பாட்டு இலக்கணமின்றி மரபுவழியான மனனத்தன்மையுடையதாக இருப்பது

இத்தகைய காரணங்களால் மொழியானது கடினத்தன்மையுடையதென்ற உணர்வைத் தோற்று விக்கின்றது. இத்தன்மையானது மொழியை பின்தங்கிய நிலைக்குக்கூட கொண்டு சென்று விடக்கூடும். இவ்விடயத்தை கல்விச் சிந்தனையாளர்கள் மனதிற் கொண்டமையால்தான் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் பாடத்திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்ட போது தமிழ்மொழியும் இலகுபடுத்தப்பட்டு, அதாவது இலக்கணத்தினூடாக மொழியறிவைப் போதிக்கும் வகையில் தரம் 6, தரம் 9, பாடநூல்களில் மாற்றம் செய்யப்பட்டு இலக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

இனி இலக்கியங்கள் தாய்மொழிக் கல்விக்கு உதவும் வகையினை நோக்குவது பொருத்தமுடையது. இலக்கியங்கள் கற்றலில்,

1. மொழித்திறனை வளர்த்தல்
2. பண்பாட்டை அறியச் செய்தல்
3. மனதிற்கு மகிழ்ச்சியையும், ஆற்றுப்படுத்துகையையும் தரவல்லது

என்றவாறான பயன்பாட்டை அடையமுடியும்.

ஒரு மொழியின் திறமையையும், செழுமையையும், பண்பாட்டையும் அறிவிப்பதில் இலக்கியங்கள் தலையாய பங்கு வகிக்கின்றன. இலக்கியங்களை கற்றலென்பது வெறும் நெட்டுருவோ அல்லது விளக்கமாகவோ அமையாது இலக்கியத்தை ஆழ்ந்து அனுபவிக்கும் சுவையுணர்வுடையவர்களாக இருக்க வேண்டும். இவ்விடத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடும் கருத்தானது "இலக்கியத்தை க் கற்க வேண்டுமாயின் இலக்கியத்துள் நீ நுழைய வேண்டும் அல்லது இலக்கியம் உனக்குள் நுழைய வேண்டும்" எனும் கருத்து மனங்கொள்ளத்தக்கது. இலக்கியத்தை இரசிக்கும் திறன் மாணவரிடையே ஏற்படும் இடத்துமொழி கற்றலுக்குரிய சிறந்த வெற்றியை அடையலாமென்பது அனுபவவாயிலாகக் கண்ட உண்மையாகும்.

இலக்கியம் என்பது ஏற்னவே நாம் கூறிய ஓர் பண்பாட்டுக்காவி, அத்தகைய காவியை அல்லது கண்ணாடியைக் கொண்டுதான் எமது பண்பாடு கலாச்சாரங்களை அறிந்து கொள்ள முடியும். இன்னும்

இலக்கியங்கள் என்பது வெறும் புனை கதைகளாகவோ அன்றி கற்பனை கலந்த உண்மையாகவோ இருக்கலாம் அது பற்றிய ஆய்வை விடுத்து, அவை எவ்வாறு சமூகத்தை வளம்படுத்துகின்றன என்பதை அறிவதே எம்பணியாகும்.

கல்வியென்பது மனிதனிடத்தில் மறைந்துள்ள ஆற்றல்களை வெளிப்படுத்தும் சாதனமாக இருப்பதுடன் சமுதாயம் விரும்புகின்ற அல்லது காண விளைகின்ற நற்பிரசைகளை உருவாக்கும் உன்னத பணியைச் செய்யவல்லது. இத்தகைய கல்விக்குத் துணைபுரிவதும் நம் தமிழ் இலக்கியங்களாகும். மனிதனிடத்திலுள்ள தீயசுபாவங்களை நல்லனவாக மாற்றும் இன்றியமையாச்சிறப்பு இலக்கியத்திற்குண்டு என துணிந்து கூறலாம்.

மனிதனை மனிதனாக வாழவைப்பதில் இலக்கியங்கள் இனிப்புக்கலந்த மாத்திரை போல விளங்குகின்றன. இலக்கியத்தைப் படைக்கும் புலவன் அறத்தைப் பொருளாக்கியும் அதனை விளக்க வைக்கும் வகையில் கதாபாத்திரங்களையும், அக்கதாபாத்திரங்கள் அவற்றைக் கூறவேண்டிய பாங்கையும் மனதிற்கொண்டு இலக்கியத்தை படைக்கும்போது அது உயர்தர இலக்கியமாக உருப்பெறுகின்றன.

அறத்தை மட்டும் பொருளாகக் கொண்டு அவற்றைக் கூறுமிடத்து அது சில சந்தர்ப்பங்களில் உபதேசமாகவும் மாறிவிடக்கூடும். ஆகையினால் கற்பனை கலந்த அணிச்சேர்க்கைகளைப் பயன்படுத்துமிடத்து, அவை மனக்கிளர்ச்சியையும் இலக்கியத்தைக் கற்கவேண்டுமென்ற ஆவலையும் ஏற்படுத்துவனவாக அமையக்கூடும். இது மொழி கற்றலைத் தூண்டுவதாகவும் அமையும்.

எடுத்துக்காட்டாக"இராமன் வில்லை எடுத்து வளைத்தான் அது உடனே முறிந்தது" என்று கூறுவதை விடுத்து "வில் எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்" என்று கூறுமிடத்து ஓர் நயப்புத்தன்மை ஏற்பட்டு கற்கும் ஆர்வம் ஏற்படுகின்றது.

இராமன் காடாளவேண்டும் பரதன் நாடாள வேண்டுமென்ற கைகேயியின் வேண்டுகையை இராமன் கோசலைக்குத் தெரிவித்தபோது "மும்மையின் நிறைகுணத்தவன் நின்னிலும் நல்லனால் நிறைவிலன்" எனக் கோசலை கூறுகின்றாள். அதாவது இராமனிலும் மும்மடற்கு சிறந்தவன் பரதன். அத்தகையவன் அரசாட்சி செய்வதில் தவறில்லை என அத்தாய் இராமனுக்குக் கூறும் பதில் சிந்தித்து நயக்கத்தக்கதாகும். "அணிசெய் காவியம் ஆயிரங்கற்பினும் ஆழ்ந்திருக்கும் கவியுளங் காண்கிலார்" என்பதுபோல கவிதையின் உட்பொருளை விளங்கி அக்கதாபாத்திரமாக நாம் மாறாவிடின் அக்கவியை இரசிக்க முடியாது. இவ்விதம் இரசிக்காவிட்டால் இலக்கியத்தையும் நாம் கற்கமுடியாது.

கைகேயியின் உத்தரவுப்படி இராமன் காடேக அதனைத்தாங்க முடியாத பரதன் தாயை நிந்தித்து இராமனைத் தேடிப் பின்தொடர்கிறான். இராமனை அழைப்பதற்கு வந்த பரதனைக் காணும் குகன்

"தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னை
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கி
போயினை யென்ற போது புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ"

என்று சிந்திக்கின்றான். இங்கு இராமனிலும் பன்மடங்கு சிறந்தவனாக பரதன் திகழ்கின்றான் எனும் சிந்தனையைக் காணமுடியும். இன்னும் தசரதனிடம் கைகேயிவரம் கேட்டபோது புத்திரசோகத்தால் கைகேயியைப் பார்த்து தசரதன் கூறுகின்றான்

"மண்ணே கொள் மற்றதை மற" என்று. இதில் பரதன் நாடாளட்டும் இராமன் காடு செல்வதை மட்டும் கேட்காதே என்று சாதாரண ஓர் வாழ்வியல் தந்தைக்குரிய கதாபாத்திரமாக தசரதனை சித்திரிப்பதும் இங்கு சிறந்த நயத்துக்குரிய பகுதியாகும்.

இலக்கியங்கள் நற்கருத்துக்களைக் கூறும் அதேவேளையில் மாறுபட்ட சில கருத்துக்களையும் கொண்டிருப்பதும் மனங்கொள்ளத்தக்கது. எடுத்துக்காட்டாக,

"ஆடவர் நகையுற ஆண்மை மாசுற
தாடகை எனும் பெயர்த் தையலாள் படக்
கோடிய வரிசிலை இராமன்"

எனக் கூனியும்

"வாலியைப் படுத்தாயலை மன்னற வேலியைப் படுத்தாய் விறல் வீரனே" என வாலியாலும் இராமன் இழிவு படுத்தப்படுகின்றான். அதாவது இராமன் தாடகை எனும் பெண்ணைக் கொன்றமையால் அவனது ஆண்மை மாசுபட்டதென்று கூனியும், மறைந்து நின்று கொன்றமையால் அறவேலியை அழித்தாய் என வாலியும் இராமனை இழிவுபடுத்துவது இலக்கியத்தின் போக்கினில் தடையை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களாக இருப்பினும், இங்கு நாம் "ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் காண்பதுதான் பொருத்தமேயன்றி பாத்திரங்களின் பேச்சின் போக்கையல்ல எனலாம்.

மரபுவழி இலக்கியங்கள் மொழியில் எத்தகைய தன்மையுடையதாக இருக்கின்றன என்பதற்கு மாதிரி எடுத்துக்காட்டாக கம்பராமாயணத்தின் ஓரிரு விடயங்களைத் தொட்டுக்காட்டியுள்ளேன். இனி நவீன இலக்கியங்கள் எந்தளவிற்கு தாய்மொழியைக் கற்பதற்கு உதவுகின்றன என்பதையும் தொட்டுக்காட்டுவதன் மூலம் இக்கட்டுரை முழுமை பெறக்கூடும் என்பது எனது நம்பிக்கையாகும். இலக்கியங்கள் ஒவ்வொரு காலத்தையும், மக்கள் வாழ்வியலையும் படம்பிடித்துக் காட்டவல்லவை. அந்த வகையில் நவீன இலக்கியத்தின் தன்மைகளை நோக்குமிடத்து அவை யதார்த்த வாழ்வைப் பிரதிபலிப்பனவாக உள்ளன.

எடுத்துக்காட்டாக,
"நில் என்றான் ஓராள்
நிறுத்தென்றான் மற்றோராள்
புல் என்றான் ஓராள்
புலை என்றான் இன்னோராள்
கொல் என்றான் ஓராள்
கொழுத்து என்றான் வேறொராள்"

எனவரும் கவிதையில் 1950, 1960களில் யாழ்ப்பாணத்தில் முனைப்புப் பெற்றிருந்த சாதிக் கொடுமையை சிறுசிறு சொற்களினூடாக நயம்பட விளக்குகின்றார் "மகாகவி" எனும் புனைபெயரையுடைய திரு. உருத்திரமூர்த்தி அவர்கள். இங்கு கதைச் சம்பவத்தை எடுத்துக்கூறுமிடத்து ஓர் ஆவேச உணர்ச்சியையும் நில், நிறுத்து, புல் புலை, கொல், கொழுத்து என எதுகை மோனைகளைக் கையாண்டு கவிதையில் ஓர் விறுவிறுப்பை ஏற்படுத்தி கற்றலில் விருப்பத்தைத் தூண்டுகின்றார்.

இன்னும்......
"வெள்ளைமயிர்,
பாவம் கிழவன் பழுத்த உடல் மீது
சாவின் வெழுப்பு சளியொடு வெற்றிலையின்
காவிநீர் துப்பிக் கடைவாய் துடையாமல்
நிற்கின்றான் மீண்டும் நிமிர்ந்தும் நிமிராமல்
கற்கொண்ட நெஞ்சும்
கனிவுண்டெழுந்து கொண்டு உட்காரவிட்டேன்
உவகையோடு உட்கார்ந்தான்."

எனும் "மற்றவர்க்காய் பட்ட துயரினை மிக எளியசொல் நடையில் நகர்த்திச்செல்வது சுவைத்து இன்புறத்தக்கதாக இருப்பதோடு முதியோருக்கு உதவும் மனப்பாங்கை மாணவரிடையே இலகுவாக உருவாக்குவதில் வெற்றி காணத்தக்கதாக புதிய பாடச்சீர்த்திருத்தங்களும் இடம்பெற்றிருப்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

மலையக மக்களின் அவல வாழ்க்கையை பிரதிபலிக்கும் வகையில்,
"ஆழப் புதைந்த தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த அப்பனின் சிதைமேல்
ஏழை மகனும் ஏறி மிதித்து
இங்கெவர் வாழவோ தன்னுயிர் தருவன்"

எனும் சி.வி. வேலுப்பிள்ளையவர்களின் கவித்துவத் தன்மையானது "வாழ்வே தோட்டம் தோட்டமே வாழ்வு" என்று அறியாமை நிறைந்த மக்களது வாழ்வைப் பிறரறியச் செய்யும் வகையில் அமைந்திருப்பதைக் கொண்டு வாழ்வின் சோகங்களையும், இந்நாட்டின் உயிர் நாடியாக திகழும் மலையக மக்களின் கவனிப்பாரற்ற தன்மைகளையும் மாணவர் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியவராகின்றனர்.

இன்னும் மனிதனது அறியாமைத்தன்மைகளை எடுத்துக்காட்டி மனிதனை சிந்திக்கத் தூண்டும் வகையில்,

"ஆந்தையின் அலறலுக்கும்
அர்த்தம் நீ காணுகின்றாய்
சேர்ந்த ஓர் காகம் கத்த
சிந்தையை இழப்பாய் பூனை
பாய்நதிடிற் பயந்து போவாய்
பல்லியின் நச் சொலிக்கே
மாய்ந்திடு வாய் உனக்கே
இவையெல்லாம் உயர்ந்ததாயின்
மனிதா நீ யார்? இம்மண்ணின் மதிப்புள்ள ஐந்து நீயா?

எனத் தொடரும் அண்ணின் (எம். எஸ்.எம். சாலிஉற) கவிதையில் மிகச்சாதாரண உதாரணங்கள் மூலம் எளிமைப்படுத்தி சொற்களால் கவி படைத்திருக்கும் பாங்கானது மாணவரை சிந்திக்க வைக்கக்கூடியதாகும்.

இன்னும் தாய்மொழிக் கல்வியில் இலக்கியங்களைப் படைத்தவர்கள் வரிசையில் தமிழ் நாட்டு இலக்கிய கர்த்தாக்களும் எளிமைப்படுத்திய இல்கியங்களைப் படைத்து தாய்மொழிக்கு உதவியுள்ளனர். அந்த வகையில் நோக்குமிடத்து சுப்பிரமணிய பாரதியார் முதலிடத்தைப் பெறுகின்றார். எடுத்துக்காட்டாக,
"வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் - அதன்
மானுடர் வேற்றுமையில்லை
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் - இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்"

எனும் பாடல் மூலம் நிறத்தால் வேறுபட்டாலும் மனிதர் என்றவகையில் மக்கள் யாவரும் ஓர் குலம் என்ற தேசிய உணர்வை ஏற்படுத்துகின்றார்.

இன்றைய நிலையில் எமது நாட்டிற்குத் தேவையானதும் இதுவேயென்பதை எளிமைப்படுத்திய சொற்களைக் கொண்டு இலகுவாக மாணவருக்குப் புரியவைக்க முடியும். "காலத்தின் தேவைக்கேற்ப இலக்கியங்கள் முகங்கொடுக்கின்றன." என்பதற்கு பாரதியின் படைப்புக்கள் சான்றாக விளங்குகின்றன.

மேலும் இன்றைய நவீன இலக்கியங்கள் எனும் வகையில் திரைப்படப்பாடல்கள் கூட கவித்துவச் சிறப்புடையதாகவும், தாய்மொழிக் கல்விக்கு உதவும் தன்மையுடையதாகவும் திகழ்கின்றன. இத்தொடர் களையும் தொட்டுக் காட்டுவது பொருத்தமுடையதாகும். உதாரணமாக
"சல சல சல சல ரெட்டைக் கிழவி
தக தக தக தக ரெட்டைக் கிழவி
உண்டெல்லோ தமிழில் உண்டல்லோ
பிரித்து வைத்தால் நியாயம் இல்லை
பிரித்துப் பார்த்தால் பொருளும் இல்லை
ரெண்டல்லோ ரெண்டும் ஒன்றல்லோ"

எனவரும் பாடலில் எளிய முறையில் இலக்கண அறிவை மாணவர் பெறும் வகையில் அமைத்திருப்பதும், இன்னும் இளமைக் காலத்தின் இனிய நினைவுகளை மீட்டிப் பார்ப்பதில் கிடைக்கும் ஆத்மார்த்தமான சுகங்களைப் பிரதிபலிக்கும் வகையில்
"ஏதே ஒரு பாட்டு என்காதில் கேட்கும்"....
எனத் தொடங்கும் பாடலில்,

"அம்மா கைகோர்த்து நடைபழகிய ஞாபகமே
தனியே நடைபழகி நான் தொலைந்தது ஞாபகமே
புத்தகம் நடுவே மயிலிறகை நான்
வளர்த்ததும் ஞாபகமே
கட்ட பொம்மனின் கதையை கேட்ட ஞாபகம்"

எனத் தொடரும் அடிகளை மீண்டும் மீண்டும் இரசித்துச் சுவைக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாறான இலக்கிய ஆக்கங்கள் இரசனையை ஏற்படுத்துவதால் கற்பதில் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றது.

பொதுவாக புராதன இலக்கியங்களாயினும் சரி, நாட்டார் பாடல்களாயினும் சரி, நவீன இலக்கியங் களாயினும்சரி, திரைப்படப் பாடல்களாயினும்சரி எக்காலத்திற் தோன்றுகின்றனவோ அக்காலத்தில் மக்கள் வாழ்க்கை முறையைப் பிரதிபலிப்பதாக இருப்பதால்தான் இலக்கியங்கள் ஆளுமை பெற்ற சமுதாயத்தின் உயிர்த்துடிப்பாக இன்றும் விளங்குகின்றன.

இவ்வகையான இலக்கியங்கள் தாய்மொழியில் அமைந்திருப்பதோடு அவை மனித ஆளுமையை விருத்திசெய்யும் அறிவு, திறன், மனப்பாங்கு, சமூகவிழுமியங்கள் என்பவற்றைப் பெற்றுத் தருவதிற் தாய்மொழிக் கல்விக்குச் சிறப்புறப் பணியாற்றுகின்றன என்பதை இச்சிறுகட்டுரையில் முடிந்தளவிற்கு ஓரளவேனும் தொட்டுக்காட்ட முடிந்துள்ளது. அறிவியல் தேவைக்கு மட்டுமன்றி, அழகியலுணர்விற்காகவும் இலக்கியங்கள் துணையாக நிற்கும். அவ்வாறான இலக்கியங்களுக்குள் நுழைந்து கவித்துவச் சிறப்பைக் கண்டு நம் மொழியாற்றலை விருத்தி செய்ய முயற்சி செய்வோமாக.

திருமதி மீனலோஜனி இதயசிவதாஸ்
வகுதித் தலைவர்
கிளி/உருத்திரபுரம் ம.வி.

Jyothi's
VERANDAH
DINE IN - TAKE -OUT - DELIVERY



நீங்கள் ஒருமுறை
சுவைத்துப்
பாருங்கள் உண்மை
விளங்கும்


21 DUNDAS STREET EAST
MISSISSAUGA, L5A 1V9


TEL: 905 273 4345
FAX: 905 276 5668

# VIEW TECH WINDOWS


## (416) 747-7084 / (416) 747-5749


- **STORM DOORS**
- **FRENCH DOORS**
- **PATIO DOORS**
- **PORCH ENCLOSURES**
- **THERMAL WINDOWS**
- **VINYL WINDOWS**
- **ALUMINIUM WINDOWS**
- **GLASS & SCREEN**













**REPAIRS**

**FREE ESTIMATE**

**ALL WORK GUARANTEED**

**VINYL AND ALUMINIUM REPLACEMENT WINDOWS**

# நினைக்க நினைக்க இனிக்கும்

உருத்திர புரத்தில் நான் உருண்டு புரண்டதும்
தெருவின் ஓரத்தில் நான் மருண்டு சென்றதும்

தென்னை ஓலையில் ஆபரணம் அணிந்ததும்
தெண்டித் தெண்டிச் சைக்கிள் ஓடியதும்

தேங்காய் பொறுக்கக் கள்ளம் பிரட்டியதும்
நுங்கு குடித்துவிட்டு பக்கத்து வளவில் வீசியதும்

வாய்க்காலில் நீச்சல் அடித்ததும்
வாழைக் குலைக்கு ஊசி போட்டதும்

நாவற் பழத்திற்குப் பள்ளிவிட்டு ஓடுவதும்
சேவல் கலைத்து இறைச்சுக்குப் பிடிப்பதும்

வேலியில் பொந்திட்டு மாங்காய் திருடியதும்
தோழியுடன் வருடக்கணக்கில் கோவமாய் இருந்ததும்

விடியவிடிய வாய்பாடு மனப்பாடம் பண்ணியதும்
விடியுமுன் விளக்குடன் விளாம்பழம் பொறுக்கியதும்

சாறிகட்டி சாந்தாரீச்சர் போல் ஒத்திகையிட்டதும்
சந்தையில் தேங்காய்க்காகச் சண்டையிட்டதும்

வண்ணவண்ண மலர்களினால் மாலை கட்டியதும்
வண்டிக்காரரை விசிலடித்து கேலி செய்வதும்

வெள்ளத்தில் வெடி யடித்ததும்
வெள்ளாட்டை அமத்திப் பால் கறந்ததும்

புளியமரத்தைத் தாண்டும் பொழுது நமசிவாய
உச்சரித்ததும்
புக்கைக்காகக் கோயிலுக்குச் செல்வதும்

பூவரசம் இலையில் பீப்பீ ஊதியதும்
பூமரத்தில் மாற்றினங்கள் ஒட்டுவதும்

நினைத்தால் நெஞ்சைப் பிளக்கின்றன.
மறக்க நினைத்தாலும் மறையாதவை
ஏட்டில் எழுதமுடியாத எண்ணிக்கைகள்

மாடி வீட்டில் வாழ்ந்தாலும் . . .
ஏசி றூமில் குளிர் காய்ந்தாலும் . . .
காரில் காலணியுடன் சென்றாலும் . . .
நரம்பில்லா நாக்கால் ஆங்கிலம் பேசினாலும்


ஓலைக் குடிசையின் குளிர்மை வருமா. . .
பாதணியில்லாமற் தரையில் நடக்கும் பாக்கியம்
வருமா .
செந்தமிழ் பேசும் சொர்க்கம் தான் வருமா. . .

வேதனையிலும் இனிக்கும்
கசப்பிலும் பிடிக்கும்

நினைவுகள். . . .

நினைத்தாலே இனிக்கும்!

செல்வி துசிதா பத்மநாதன்



தமிழர் நிர்வாகத்தின் கீழ்

# SCARBOROUGH FINE CARS

**BAD CREDIT - NO PROBLEM**


**TELL US WHICH**

**YEAR MAKE MODEL**

**OF THE CAR**

**YOU WANT!**

**(2000'S & OLDER)**



**AND**

**WE WILL GET YOU APPROVED**

**WITH OUR OWN FINANCING**

**ALL YOU HAVE TO DO IS "PROMISE TO PAY"**

Scarborough Fine Car's morto is "Just because you have bad credit does not mean you have to drive an old beat up car"

# SCARBOROUGH FINE CARS

**FREE OIL CHANGES FOR 3YRS**

**2116 LAWRENCE AVENUE EAST**

(Between Birchmount and Warden)

**SCARBOROUGH**

**416-285-0909**

**OPEN 7 DAYS A WEEK**

MON - THUR 9:00 TO 9:00

FRI - 9:00 TO 6:00

SAT - 9:00 TO 6:00

SUN - 9:00 TO 4:00

# வட அமெரிக்க விவசாயமும் எமது கிராமமும்

கணேசு கைலாயநாதன்

மே மாதத்தில் கனடாவில் இருந்து இதனை நான் எழுதும்பொழுது எமது கிராமம் பற்றிய நினைவுகள் விரிகின்றன.

இவ்வருடம் காலபோகம் விதைத்தவர்கள் அறுவடை முடித்திருப்பார்கள். நெல்மணிகளும் மற்றத்தானியங்களும் வீடுகளை நிறைத்திருக்கும். வைக்கோல்வாசமும், அடிக்கட்டைகளோடு கூடிய புதிய தளிர்களை மேய்வதற்காக வயல்வெளிகளை நிறைத்திருக்கும் கால்நடைகளும், சிறுநீரோடைபோல் குறைவான நீரோட்டத்துடன் எமது வாய்க்கால்களும் இடப்பெயர்வின்பின் சொந்த இடங்களுக்குத் திரும்பும் மகிழ்ச்சி நிறைமுகங்களோடு எமது கிராமத்தவர்களுமாய் திரைப்படம் போலவே மனதினில் ஓடுகின்றது. இதேமனநிலைதான் இங்குள்ள எமது கிராமத்தவர் அனைவருக்கும் இருக்குமென்பதில் ஐயமில்லை.

கனடாவில் வாழும் நாம் இயந்திரமயமானதும், முற்றிலும் நமது கிராமவாழ்க்கைக்கு மாறுபட்டது மானதொரு வாழ்க்கையை வாழ்கின்றோம். ஆனாலும் எமது கிராமம் பட்டுள்ள துகிலுரி நிலையைப் பார்க்கும்போது நாம் எவ்வளவு வளங்களுடன் வாழ்கின்றோம் என்பதனையும் எண்ணிப் பார்ப்போம்.

தற்சமயம் கிடைக்கும் செய்திகளின்படி எம்மவர்கள் மீளவும் குடியேறினாலும் புதியதாய்தான் அனைத்தையும் தொடங்க வேண்டியவர்களாகவுள்ளனர். எவ்வளவு கஸ்டமான நிலை. அனைத்து வழிகளிலும் எதிர்காலம் கேள்விக்குறிதானே. இவ்வாறான நிலையில் நமது பங்களிப்பு என்ன? அவரவர் தமது உறவினர்களுக்கு உதவினாலும் பொதுவான உதவிகள் ஏதாவது செய்ய வாய்ப்புள்ளதா? செய்ய நாம் தான் தயாரா? இப்படிப்பல கேள்விகள் உள்ளன. ஒருசிலவற்றிற்காயினும் விடைகாண நாம் முயற்சி செய்ய வேண்டும்.

எனது தொழில் ரீதியாக நான் கனடிய, ஐக்கிய அமெரிக்கப்பெருந்தெருக்களில் பயணம் செய்யும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றுள்ளேன். அவ்வாறான சந்தர்ப்பங்களின் விவசாய நிலங்களிற்கூடாகவும் பயணம் செய்துள்ளேன். சில வழிமுறைகள் எமக்கும் உதவக் கூடியதாகவும் நாம் இதுவரை கடைப்பிடிக்காதனவாகவும் என் கண்களையும் மனத்தையும் உறுத்தியதால் அவற்றில் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

வடஅமெரிக்க விவசாயம் முழுக்க முழுக்க இயந்திரமயமானதுதான். அந்தக்காரணம் ஒன்றினால் மட்டும் நமக்கு உதவாது என்ற முடிவுக்கும் வரமுடியாது. நம்நாட்டில் எருதுகளைப் பயன்படுத்துதல் போல் குதிரைகள் மூலம் வேலைகள் செய்வதும் கிராமங்களில் காணலாம்.

### நிலத்தைப் பண்படுத்துதல்:

எந்தப்பயிருக்கும் ஏற்றவாறு நிலத்தைப் பண்படுத்த பலவிதமான உபகரணங்கள் உள்ளன. இவற்றில் நம் சூழலுக்கு ஒத்துவரக் கூடியவையுமுள்ளன. அவற்றைநாம் தெரிவுசெய்து கொள்ளலாம். தோட்டப் பயிர்செய்கைக்கு மண்வெட்டியின் உதவியோடு பெரும் கூலிச் செலவுகளோடு செய்யும் வேலையை விரைவா கவும் அதேபோல் நேர்த்தியாகவும் செய்து கொள்ள வசதியுள்ளது. இதனை அங்கு அறிமுகப்படுத்தலாம்.

### தானியங்களைப் பயிரிடுதல்:

வரிசைமுறையில் தானியங்களைப் பயிரிடவும், நாற்றுநடவும் இலங்கையில் ஓரிருவர் முயற்சியால் சில உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் பரந்த அளவில் அறிமுகமோ, பாவனையோ நடக்கவில்லை. இங்கு இயந்திரங்கள் மூலமாகவும், குதிரைகள் இழுக்கக்கூடிய பொறிகளாலும் ஒருநாளில் பரந்த பிரதேசங்கள் பயிரிடப்படுகின்றன. நாம் நெல் விதைத்த வயலில் தானியங்களின் மேல் விழுந்துள்ள மண் ஏற்றத்தாழ்வாக இருக்கும். ஆனால் இங்கு ஒரே சீராக இருக்க இங்குள்ள உபகரணங்கள் உதவுகின்றன.

இயந்திரங்களின் உதவியுடன் புகையிலை போன்ற கன்றுவகைகளைக்கூட இலகுவாகவும் விரைவாகவும் நட்டுக்கொள்ள வசதியுள்ளது. குதிரையால் இந்த வேலையைச் செய்ய மேலதிகமாக ஒரே ஒருவரின் உதவிமட்டுமே பயன்படுத்துகின்றனர்.

### களைகட்டுதல்:

மேட்டுக்காணிப்பயிர்ச்செய்கைக்கு எம் ஊரில் களைநாசினி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் இங்கு நீர்ப்பாசனமுறை இல்லாமல் இருந்தும் நேர்த்தியாகக் களைகளைக் கட்டுப்படுத்துகிறார்கள். இதனை விவசாயம் சம்பந்தப்பட்ட அறிஞர்களைக் கொண்டு நமது சூழலுக்கு ஏற்றவாறு கண்டுபிடிக்க வேண்டும்.

நீர்ப்பாசனக் காணிகளைப் பொறுத்தவரை, களைகட்ட வேண்டுமென்று தீர்மானித்து ஆளும் விசிறியும் பிடித்து கஸ்டப்பட்டு முடித்தாலும் தண்ணீர் ஒழுங்கான நேரத்தில் மூன்றாம் நாள் விட்டேயாக வேண்டும். இல்லையானால் பலனளிக்காது. நீர்ப்பாசனம் கூட ஒரேசீராக எல்லோராலும்

பெற்றுவிடமுடியாது.

இங்கு இயந்திரங்கள் மூலம் பரந்த பிரதேசத்திற்கு விரைவாகத் தெளிக்கின்றார்கள். கிருமிநாசினிக்கும் இது பொருந்தும். இது எவ்வாறு எமக்கும் பொருந்தும் என்று பார்ப்போம்.

இவ்வாறான பெரிய இயந்திரங்கள் இல்லாவிடினும் சிறிய அளவில் உழவுயந்திரம் போன்று உருவாக்கிக் கொள்ளலாம். ஒரு வாய்க்காலில் உள்ள கமங்களுக்கு ஓரிரு நாட்களுக்குள் களை நாசினியைத் தெளித்து அதேபோல் மூன்றாம்நாள் நீரும் பாய்ச்ச ஒழுங்கு செய்யலாம். ஒரே வாய்க்காலில் ஒரு காணி அடிபட்டிருக்க மறுகாணி அடிபடாதிருக்கும் நிலைமாறுவதால் நோய்களைக் கட்டுப்படுத்துவது மிகவும் பயனளிக்கும். இதற்கு எல்லாத் துறையினரது ஒத்துழைப்பும் தேவைதான். ஆனால் அவ்வாறு நடைமுறைப்படுத்துவது நல்லது என்பது தீர்மானிக்கப் பட்டால் நடைமுறைச் சாத்தியம்தான்.

பயிர்செய்கைக்குழு போன்று அல்லது உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகத்தின் ஓர்கிளை இவ்வாறு இயந்திரங்களுக்கான முதலீடுகளை இங்கு திரட்டித் தேவையான இயந்திரங்களையும் வாங்கி அங்குள்ள நம்மவர்களை எல்லாம் விவசாயச் சங்கமாக இணைத்து சேவைகள் ஒரேசீராகக் கிடைக்கவழி செய்யலாம். அதற்காக முதலீடு செய்பவர்களுக்கும் வருமானம் கிடைக்குமாற்போலவும் திட்டமிடலாம்.

அவ்வாறான ஒரு அமைப்பு, நீர்ப்பாசன வசதிக் கேற்றவாறு ஒவ்வொரு வாய்க்காலகளிலுமுள்ள காணிகளை வரிசைக கிரமப்படி அடுத்தடுத்துச் செய்யுமானால, நிலத்தைப் பண்படுத்தல், விதைத்தல், களைகட்டுதல், கிருமிநாசினி தெளித்தல் அநவடை என்று ஒவ்வொரு வாய்க்கால் காணிகளுக்கும் செய்து காணிக்காரர்களிடம் செலவுகளுக்கு அறவிட்டுக் கொள்ளலாம். இப்படி நடக்குமானால் சீரான விவசாயமும், காலத்தே பயிர் செய்தலும், நல்ல பெறுபேறுகளும் பெறலாம் என்பது என் எண்ணம்.

இவையாவற்றுக்கும் இங்குள்ள சில இயந்திரங்களும் உபகரணங்களும் சாலச்சிறந்தனவை யாகவுள்ளன.

உதாரணமாக எமது பிரதான வாய்க்கால் உடனடியாக மணல் அள்ளப்பட வேண்டுமென்று எண்ணினால், அல்லது ஓரிடத்தில் கழிவாறு மண் நிரம்பியுள்ளதென்றால் மனித சக்தியுடன் செய்ய எவ்வளவு நாள் தேவை? இந்தச் சுணக்கம் நன்மையைவிட தீமையையே கூடுதல் விளைவாக்கும். சிலவேலைகளை நினைத்த மாத்திரத்தில் செய்து முடிக்க முக்கியமான சில இயந்திரங்கள் இன்றியமையாதவைதான்.

இவ்விதத்தில், விதைப்பு, மருந்துகள் தெளித்தல், அறுவடை இவையாவும் இயந்திரங்களின் உதவிபெற்று சிறப்புறச் செய்து நற்பலனும் பெறலாம். அதற்கு எமக்குகந்த ஏராளமான உபகரணங்கள் இங்கு பெறலாம்.

**அறுவடை:**

எல்லாச் சிரமங்களையும் தாண்டி விளைந்துவிட்ட விளைச்சலை சிந்தாமல் சிதறாமல் கொண்டுபோய்ச் சேர்க்க எத்தனை கஸ்டம், ஆண்டாண்டு காலமாக கிழக்கிலங்கையிலிருந்து கூலியாட்கள் எமது பிரதேசத்திற்கு வந்துதானே உதவுகிறார்கள். அப்படியும் முழுமையான தேவை நிறைவேறுகின்றதா?

சற்றுமழை பெய்தால் அனைத்தும் உதவாததாகிவிடும். உதவிகள் ஒழுங்காகக் கிடைத்தாலும், வெட்டும்போதும், கட்டும்போதும் சுமந்து சென்று சூட்டடிக்குக் கொண்டு போகும் போதும், வைக்கோல் எடுக்கும்போதும் எவ்வளவு தானியங்கள் எம்மால் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் வீணாகின்றன. இவ்வளவும் கையில் கிடைக்க வேண்டிய பொருளல்லவா?

இங்கு கோதுமை, சோளன், கடுகு போன்ற தானியங்களானும்சரி நிலக்கடலை, உருளைக்கிழங்கு, போன்ற நிலத்தடி விளைச்சல் ஆயினும் உழுந்து, பயறு, சோயா, தக்காளி இவ்வாறான விளைச்சலானாலும் சரி ஒருவீதம் கூட வீணாகாமல் அறுவடை செய்கிறார்கள். என்ன சிரமப்பட்டாலும் இந்த உபகரணங்கள் எமக்குக் கிடைக்குமானால் எமது வறிய நாட்டில் எவ்வளவு வருமானம் கிடைக்கும். இயந்திரமயம் என்று ஒதுக்காமல் நன்மை தீமைகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நன்மைகளைப் பெறுவதற்கு, எமதுநாடு, காலநிலை, எங்கள் வயல்களின் அமைப்பு இவையெல்லாவற்றிற்கும் உகந்ததாக சிறிய இயந்திரங்களை வடிவமைக்கும் முயற்சிகளை நாம்தான் செய்ய வேண்டும்.

நம்நாட்டில் விவசாயத்துறையில் கடமையாற்றி அனுபவம் உள்ள பலர் இலைமறைகாயாக வாழ்கிறார்கள். அவர்களை ஒன்றிணைத்து குழுவாக்கி, அந்தக்குழு இங்குள்ள அறிஞர்களையும் கலந்து பாரியதிட்டமாக வரைந்து, தேவையான உபகரணங்களை வடிவமைக்கலாம். இதற்கான முதலீடுகள் பெறுவதில் சிரமம் இருக்காது என்றே எண்ணுகின்றேன்.

வடிவமைப்பு பூர்த்தியானால் வடஅமெரிக் காவைவிட இந்தியாவில் தமிழ்நாட்டிலேயே மலிவான உற்பத்திச் செலவுடன் உருவாக்கிக் கொள்ளலாம்.

அனைவரும் சிந்தித்து ஆவனசெய்து புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கப்போகும் எமது கிராம மக்களுக்கு எம்மாலான உதவியைச் செய்து கிராமத்தை வளப்படுத்துவோம். கிராமங்கள் வளம்பெற நாடுதானாகவே வளம்பெறும்.

இன்னும் இதுபோன்ற அநுபவங்களைப்பெற ஒவ்வொருவரும் பலவழிகளில் உதவலாம். தமக்குத் தெரிந்த விவசாயக் குடும்பங்களுடன் வருடத்தில் சிலநாட்கள் தங்கி, நாம் அனுபவித்தவற்றை ஒலி, ஒளி நாடாக்களில் பதிவுசெய்து ஆக்கக் குழுவினருக்கு உதவலாம்.

ஓரிரு வருடத்திற்கு ஒருமுறையாவது எமது சங்கம் மூலம் உல்லாசப்பயணம்போல் ஒழுங்கு செய்து விவசாயக்கண்காட்சி விசாய உபகரணங்களின் அருங்காட்சியகம் போன்றவற்றைப் பார்வையிட்டு அதன்மூலம் மேலும் சிறப்பாகத் திட்டமிடலாம்.

எனது சிறிய அறிவுக்கெட்டிய சிலவற்றை மட்டும் இங்கு உங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளேன். இத்துறைசார்ந்த அறிஞர்கள் மேலும் தகவல்களை வைத்திருக்கக்கூடும். அவர்களை இனம்கண்டு இத்திட்டங்களுக்கு உருக்கொடுப்போமானால் நிச்சயம் பலன் கிடைக்கும்.


உருத்திரபுரம் அபிவிருத்திக்கழகத்தின் உருத்திரபுரக்கிளை மூலம் இச்சேவைகள் நடப்பதனை மனதில் உருவகப்படுத்தி இப்போதைய என் ஆவலுக்கு வடிகாலாக்கிக் கொள்கிறேன்.

“என்று நுகர்வோம் எம்மண்ணின் சுகந்தத்தை”




MR 1 HOUR PHOTO

* PHOTO FINISHING
* PASSPORT PHOTOS
* CUSTOM FRAMING
* CAMERAS REPAIR
* ALBUMS & GIFT ITEMS



1997 FINCH AVE. WEST, DOWNSVIEW, ONT. M3N 2V3.


TEL: (416) 746-0006

# THARSANAS SUPERMARKET

Sri Lankan, East Indian, Canadian Food Items, Fresh Fish, Fresh Meat, Vegetable, Video, Audio & Video Transfer

இலங்கை இந்திய, கனடிய உணவுப் பொருட்கள், உடன் கடலுணவுகள், இறைச்சி வகைகள் என்பவற்றை தரமாகவும், மலிவாகவும், பெற்றுக் கொள்ளலாம்

- VIDEO
- AUDIO GIFTS
- CLOTHING
- EVER SILVER



தமிழ், மலையாள, இந்தி வீடியோ பிரதிகளுக்கு நாடுங்கள்

எவர் சில்வர் பாத்திரங்கள் விற்பனைக்குண்டு

**உங்கள் சகல தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்**

# தர்ஷனாஸ் சுப்பர் மார்க்கட்

3415 FIELDGATE DRIVE
(Dixie & Bloor)
MISSISSAUGA, ONT.
TEL:
(905) 625-8152

29 DUNDAS ST. EAST
Hy-10 & Dundas
MISSISSAUGA, ONT.
TEL:
(905) 270-7576

2700 KIPLING AVENUE
Kipling & Steeles
REXDALE, ONT.
TEL:
(905) 745-3317


Fax: (905) 270-7838
Video Tel: (416) 745-3955

# நாள்தோறும் நம் பள்ளியில்...

எட்டு ஆனதும் – மணி
தட்டிவிடவே
எழுப்பிய ஓசையில்
எழுந்து நிற்கும் – மாணவர்கள்
கட்டை, நெட்டை பார்த்து
கட்டிக்கொண்ட – அணி
வெள்ளையுடை என்றும்
கொள்ளையிடும் மனதை....
எறும்புக்கூட்டம் போன்ற –அணியில்
குறும்பு செய்வோர்க்கும் குறைவில்லை
குறும்புக்கார வல்லுனனுக்கு – அங்கு
கொடுத்த பதவி மொனிற்றர்
கறுத்த, வெள்ளை கொழும்பான் கீழ்
அணிவகுத்து நிற்க....
வானத்துச் சந்திரன் போல்
வந்து நிற்பார் அதிபர்
அவர் தொட்டு நகரும் முகில் கூட்டம் போல்
அனைத்து ஆசான்களும் புடைசூழ
ஆரம்பமாகும் கடவுள் வாழ்த்து...
துடுக்குத்தனம் செய்வோர் முக(ம்)வரி
முழங்காலில் நிற்கையில் முகாரி பாடும் – ஏனையோர்
அசட்டுச் சிரிப்பும், துவட்டுப் பார்வையும் – அவர்களை
பூமி பார்க்கத் தூண்டும்....
அங்கு வழக்கம் – மாலையில்
ஆடவர் துதிபாடுவது..
காளைகள் என்றாலே – கஸ்டம்தான்
கட்டுக்கடங்குவது....
எடுத்த மூச்சு விடுவதற்குள்
படித்து முடிப்பார் கடவுள் வாழ்த்து – பாடசாலை
முடிக்கும் மணி அடிப்பதற்குள் – அதிபர்
பிடித்தனுப்புவார் ஒருவரை – மறுபடியும்
படித்துவிட்டு தன்னிடத்தில் – பின்பு
பள்ளி விட்டுப் போகும்படி – பெண்கள்
மிடுக்குப் பார்வை – அவர்களை
கடுப்புக்குள்ளாக்கும் – எனினும்
சொல்வாக்கும், செயலும் – என்றும்
மேன்மையோங்கும் கலைப்பள்ளி – எங்கள்
உருத்திரபுர மகாவித்தியாலயம்!!

பேரம்பலம் கோமளா

# URANAUS AUTO SALES



RE BUILDING TRANSMISSIONS,
ENGINES AND REPAIRING
ALL TYPES OF VEHICLES

தொடர்புகளுக்கு: மணி

**TEL: (416) 746-0258**
**(416) 745-1267 Res**
**(416) 740-5556**

# URANAUS AUTO SALES

**141 OAKDALE ROAD, NORTH YORK, ONT.**

# உருத்திரபுரமும் அதன் சேவை நிலையங்களும்

அ. கணபதிப்பிள்ளை B.A. (Hons). M.A
முன்னாள் விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்

## பின்னணி நிலமும் வளமும்

உருத்திரபுரம் குடியேற்றத்திட்டமானது 1949ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதன் பின்பாக சுமார் கால்நூற்றாண்டுக்கு மேலாக, சூழவுள்ள பகுதிகளில் பல்வேறு வகையான குடியேற்றங்கள் உருவாக்கம் பெற்றன. இவை வளர்ந்து வரும் சனத்தொகையினதும், நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து வந்தவர்களினதும், நலத் தேவையினைப் பூர்த்தி செய்து வந்தன.

உருத்திரபுரம் குடியேற்றம் உருவாக்கம்பெற்றதனால் ஏற்பட்ட செழுமையும் அரசாங்க, உலகநாடுகள் வழங்கிய உதவிகளின் வருகையிலும் மக்கள் வாழ்க்கையில் அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களைத் தோற்றுவித்தன.

இவ்வளர்ச்சி ஏற்கனவே யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் ஏனைய நகரப் பகுதிகளிலும் தோற்றுவிக்கப்பட்ட சேவைநிறுவனங்களின் கிளைகள் இங்கும் தோற்றம் பெறக் காரணமாயின. அதுவுமற்றிப் புதிதாகச் சேவை நிறுவனங்களைத் தோற்றுவிப்பதற்கு ஏற்றவாறு பொருளாதாரப் பின்னணியை வழங்கத்தக்க மூலவளர்த்தினையும் இப்பகுதி கொண்டிருந்ததனால் ஆரம்பகாலங்களில் கிளிநொச்சியைவிட முக்கியத்துவம் பெற்ற பகுதியாக உருத்திரபுரம் பகுதியே விளங்கியது. 1950களின் ஆரம்பத்தில் கிளிநொச்சியைச் சூழவுள்ள பகுதிகளில் போக்குவரத்து வசதிகள், சனத்தொகையில் இளம்வயதினரின் எண்ணிக்கை, விரிவான நெல்வேளாண்மை வளம் என்பன ஒருங்கே பெற்றிருந்தது உருத்திரபுரமாகும். எனவே உருத்திரபுரம் சேவை நிலையங்களின் ஈர்ப்புப்பிரதேசமாகக் காணப்பட்டதில் வியக்கத்தக்க அம்சம் எதுவுமிருக்கவில்லை.

புதிய நிலங்களிலிருந்து பெறப்பட்ட பயிர் வேளாண்மையும் அவற்றிற்குத் தேவையான உள்ளீடுகள் பெறப்படுவதிலும், உற்பத்தி சந்தைப்படுத்தப் படுவதிலும் கண்டிவீதியில் ஒரு சந்தையின் உருவாக்கம் தேவைப்பட்டது. இதுவே கிளிநொச்சியில் சந்தைகளும் விவசாய விநியோக நிலையங்களும் தோன்றக் காரணமாயிருந்ததுடன் கிளிநொச்சி ஒருபட்டினமாக வளர்ச்சியடைவதற்கும் உதவியாக இருந்தது. இத்தகைய விவசாயப் பின்னணி நிலத்தில் இங்கு தொடங்கப்பட்ட சேவைநிலையங்களுக்குத் தேவையான நிலமும் ஏனைய துணைஉதவி வளங்களும் இலகுவில் கிடைக்கப்பெற்றன.

## சேவை நிலையங்களின் அமைவிடங்கள்

உருத்திரபுரத்தின் பெரும்பாலான சேவைநிலையங்கள் யாவும் பிரதான நீர்ப்பாய்ச்சல் வாய்க்காலுக்கு அருகாகச் செல்லும் உயர்த்தப்பட்ட வீதிக்கு மிக அண்மையிலேயே அமைந்திருந்தன. இந்தப் போக்குவரத்து வீதியே உருத்திரபுரத்தினையும் கிளிநொச்சியில் உள்ள பிரதான கண்டிவீதியினையும் இணைக்கின்ற சுமார் ஆறுமைல் நீளமான வீதியாகும். கிளிநொச்சியிலிருந்து உருத்திரபுரம் வரை இவ்வீதியால் செல்லுகின்ற ஒருவர் இச்சேவைநிலையங்களை அவதானித்துக் கொண்டு செல்லலாம்.

## சேவை நிலையங்களின் பகுப்பு

சேவை நிலையங்களை வகைப்படுத்தலுக்குட்படுத்தி நோக்குவது இலகுவும் தெளிவுமாயுள்ளதால் பின்வருமாறு பாகுபடுத்தலாம். கல்விநிறுவனங்கள், சமய நிறுவனங்கள், சமூகசேவைநிறுவனங்கள், குடியிருப்பாளர் விவசாயிகள் ஆகியொருக்கான சேவைநிறுவனங்கள்.

கல்வி நிறுவனங்கள்: உருத்திரபுரம் பகுதியில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி (கிளிநொச்சி இந்துமகாவித்தியாலயம்) உருத்திரபுரம் பத்திமா மகாவித்தியாலயம் உருத்திரபுரம்மகாவித்தியாலயம், சிவநகர் தமிழ்க்கலவன் பாடசாலை, ஆகிய அரசாங்கக் கல்வி நிறுவனங்கள் முக்கியம் பெறுகின்றன.

இந்து பரிபாலனசபை குடியேற்றத்திட்டங்களில் தொடங்கிய பாடசாலைகளில் கிளிநொச்சி இந்துக்கல்லூரியே முதலில் தொடங்கப்பட்டதாகும். ஆறாம்வாய்க்கால் ஆலடிச்சந்திக்கு அருகாமையில் தொடங்கப்பெற்று பின்னர் உருத்திரபுரத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. ஏழாம் வாய்க்காலில் ஜெயந்திநகரின் வடஎல்லையில் அமைந்துள்ள இக்கல்விநிலையம் கணேசபுரம் ஜெயந்திநகர் 8ம்வாய்க்கால் பகுதிகளிலுள்ள மாணவர்களின் கல்வித் தேவையினைப் பூர்த்திசெய்தது. திரு. கா. நாகலிங்கம் அதிபராக இருந்து தொடங்கப்படட இந்தப் பாடசாலை கிளிநொச்சி மாவட்டத்தில் பெரிய இந்துக்கல்லூரியாக இன்று மிளிர்கின்றது. அமரர் வே. கதிரவேலு அவர்களால் வார்தா கல்விமுறை இப்பாடசாலையில் அறிமுகப்படுத்தப்பட்டபொழுது இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர்கள் கலந்து சமயபேதமற்றுக் கல்விகற்கின்ற வாய்ப்பினையும் இது வழங்கியது. அத்துடன் செய்முறைக்கல்வி காந்திய, ஆச்சார்யவினோபாவேயின் கொள்கைகளை அடியொற்றிய கல்வி முறைக்கும் வித்திடப்பட்டது.

எட்டாம் வாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த பாத்திமா பாடசாலை 8ம் வாய்க்கால் 10ம் வாய்க்கால்

ஜெயந்திநகரில் உள்ள கிறீஸ்தவப்பிள்ளைகளுக்கு ஒருவரப்பிரசாதமாக அமைந்தது. பெரும்பாலும் கத்தோலிக்க கன்னியாஸ்திரிகளினால் கற்பித்தலுக் குட்பட்ட இப்பாடசாலையில் இந்துசமயத்தினரும் சிறுபிள்ளைகளைப் படிக்க அனுப்புவதும் குறிப்பிடத்தக்கது.

உருத்திரபுரம் மகாவித்தியாலயம் 1949ல் குடியேற்றத்திட்டம் தொடங்கப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்டது. சிறப்பான விவசாயகூட வசதிகளைப் பெற்று கிளிநொச்சிப்பகுதியில் சிறப்பான பாடசாலையாக இருந்தது. கிளிநொச்சிப் பகுதியில் இதுவே முதல் மகாவித்தியாலயமாயிருந்ததால் ஏனைய மகாவித்தியாலயங்களுடனான பொதுநிகழ்ச்சிகளுக்குப் பளை மகாவித்தியாலயம் போன்றவற்றுடன் வவுனியா இணையவேண்டி ஏற்பட்டது. அத்துடன் முதன்முதலில் கிளிநொச்சியைச் சுற்றிய பிரதேசங்களில் க.பொ.த.ப. உயர்தரக் கல்வி வாய்ப்பினை வழங்கியதும் இந்த மகாவித்தியாலயமாகும்.

சிவநகரில் உள்ள ஆரம்பபாடசாலை உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தின் ஆரம்பபாடசாலையின் இடநெருக்கடியினைக் குறைப்பதாகவும் சூழவுள்ள சிறுவர் சிறுமியர்களுக்கு கல்விவசதி கொடுக்கும் பாடசாலையாகவும் இருந்தது.

### சமயநிறுவனங்கள்

மகாதேவஆசிரமம்: சமயநிறுவனங்களில் ஜெயந்திநகரில் உள்ள மகாதேவ ஆசிரமம் முக்கியமானது. இந்து சமயத்துறவாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டமைந்தது இந்த ஆசிரமம் ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகளின் தலைமையில் பலதுறவிகள் இந்த ஆசிரமத்தில் இருந்தனர். குருகுலம், இந்துமகாவித்தியாலயம் சிவாலயம் போன்றவற்றில் இந்துசமயவளர்ச்சியில் இத்துறவிகளின் பங்களிப்பு மிகப் போற்றத்தக்கதொன்றாகும்.

### கோவில்களும் தேவாலயங்களும்

உருத்திரபுரம் சிவாலயம் வரலாற்றுப் பழமை வாய்ந்தது. உருத்திரபுரம் குளத்திற்கு அருகாமையிருந்த உருத்திரபுரம் சிவாலயம் இன்னமும் வெளியுலகுக்கு உருத்திரபுரத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு நிற்கிறது. இது சிவாலயத்தின் அருகாக ஆரம்பத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சிறுமடாலயம் ஸ்ரீமத் வேலாயுத சுவாமிகளினால் ஸ்தாபிக்கப்பட்டது. அவர் தனது துறவற வாழ்க்கையினை இக்காடடர்ந்த சிவாலயத்தில் பிள்ளையார் முருகன் ஆகிய தெய்வங்களைப் பூஜித்து இறைவனடி எய்தினார்.

உருத்திரபுரத்தின் வடக்காகப் பொறிக்கடவை அம்மனும் ஜெயந்திநகரில் கண்ணகை அம்மனும் உருத்திரபுரத்தின் காவல் தெய்வங்களாக இருக்கின்றன இடையே பிள்ளையார் முருகன் ஆலயங்களும் மாதா கோவில்களும் காணப்படுகின்றன. உருத்திரபுரத்தில் ஆரம்பகாலங்களில் அவதானிக்கப்பட்ட ஒருவிடயம் சிறுதெய்வவழிபாடு. இது தொடர்ந்து இரண்டாவது தலைமுறையினரிடையேயும் முக்கியம் பெற்றது. மைபோடுதல் குறிசொல்லுதல் கலையாடுதல் போன்றவற்றில் நம்பிக்கையுள்ள மக்கள் நெடுந்தீவுகளிலிருந்து உருத்திரபுரத்திற்கு வந்து போயிருந்தனர். இத்தகைய சிறுகோவில்களில் சிவநகர் அமரர் கோவிலாக்கி பத்தாம் வாய்க்கால் அமரர் வேலுப்பிள்ளை 9ம் வாய்க்காலில் திரு வைததிலிங்கம் எள்ளுட்காட்டில் சக்திகோவில் எட்டாம் வாய்க்காலில் அமரர் சுந்தரம் அமரர் அப்புத்துரை போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

### சமூக சேவைநிலையங்கள்
### அகில இலங்கை காந்திய சேவாசங்கம்

இது 8ம் வாய்க்காலில் அமைந்திருந்தது. இதன் துணைப்பகுதி கோணாவிலில் காணப்பட்டது. திரு. எஸ். வேலாயுதபிள்ளை அவர்கள் முன்னின்று உழைத்த இந்த சங்கத்தில் நூற்றுக்கணக்கான வறிய அனாதைச்சிறுவர்களும் ஆதரவற்ற சிறுவர்களும் உணவு உடை உறையுள் கல்வி என்பவற்றைப் பெற்றனர். பொருளாதாரச் சிக்கல் காரணமாக பராமரிக்கத்தக்க பிள்ளைகளின் எண்ணிக்கையினைக் குறைக்க வேண்டி ஏற்பட்டது.

### குருகுலம்

அமரர் வே. கதிரவேலு (அப்பு) அவர்களின் உழைப்பின் விளைவாக உருவாக்கப்பெற்றது குருகுலம். இலங்கையிலேயே புதியதொரு கூட்டுக்குடும்ப அமைப்பில் இயங்கியதும் வறிய அனாதை ஆண்பெண் இருபாலாருக்கும் கல்வி வசதியையும் தொழில் வாய்ப்பினையும் கொடுக்கும் முகமாக உருவாக்கப் பட்டது. இக்குருகுலம் இது இந்து மகாவித் தியாலயத்தின் ஒரு பிரிவு போன்றியங்கியமை இதன் திறமையினை இலங்கை முழுவதிலும் அறியச் செய்தது. குருகுலவாசத்தில் தங்களை ஈடுபடுத்தியவர்களும் தங்கள் பிள்ளைகளை இக்குருகுலத்திற்கு அனுப்பிக் கல்வி கற்கச் செய்தனர்.

இக்குருகுலத்தினைப் பரந்த அளவில் அறிமுகப்படுத்தும் முயற்சியில் வெற்றிகிடைத் திருந்தாலும் அப்புவின் மறைவும் செ. நடராஜா ஆசிரியரின் மறைவும் அதில் ஈடுபாடு கொண்ட பலரின் இடப்பெயர்வுகளும் இதன் வளர்ச்சியில் ஒரு பின்னடைவினை ஏற்படுத்தியிருக்கிறது.

### கிறிஸ்தவ மடங்கள்

இளைஞர் நகரம் எனப்பெயர் பெற்ற பிறதர் மடம்

கிளிநொச்சியில் தொழில்நுட்பக்கல்வியினை வழங்குகின்ற தொரு நிலையமாக உருவாக்கப்பட்டது. இங்கு தொழில்நுட்பக் கல்வியினைப் பெற்ற மாணவர்கள் தொழில்நுட்பத்தில் முன்னணியிற் திகழ்வதைக் காணமுடிகிறது. முரசுமோட்டையில் நவஜீவனம் கிளிநொச்சியில் கருணாநிலையம் போன்று உருத்திர புரத்தில் ஃபொய்ஸ்ரவுணும் பத்திமா கன்னியாஸ்திரி மடமும் முக்கியம் பெறுகின்றன. இங்கு கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் வதிவிடவசதி பெற்றுக் கல்விகளைப் பெற்றுக் கொண்டனர்.

ஜெயந்திநகர் பிறதர் மடத்தில் ஆண்பிள்ளைகளும் 8ம் வாய்க்கால் சிஸ்ரர் மடத்தில் பெண்பிள்ளைகளும் ஆதரவுபெற்று கல்வியினை வளர்த்துக் கொண்டனர்.

### அரசசேவை நிறுவனங்களும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களும்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் ஐக்கியநாணய சங்கங்களும் விவாக, மரண அந்திய காலச்சங்கங்களும் தோற்றம் பெற்றிருந்தாலும் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் உருத்திரபுரத்தில் வளர்ச்சிபெற்றுக் காணப்படுகிறது. அரச விவசாய நிறுவனங்களும், இளைஞர் விவசாயக் கழகங்களும் முக்கிய மானவையாகக் காணப்பட்டன.

உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம், உழவர் ஒன்றியம் எட்டாம் வாய்க்கால் விளையாட்டுக்கழகம் ஜெயந்திநகர் விளையாட்டுக்கழகம் என்பன உருத்திரபுரத்தில் காணப்பட்ட பிறசேவை வழங்கு நிறுனங்களாகும். இந்நிறுவனங்கள் பெரும்பாலும் இளைஞர்களின் ஆதரவினால் தொடக்கப் பட்டவைகளாகும்.

கிராமஅபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் பெற்றார் ஆசிரியர் சங்கங்கள் பழையமாணவர் சங்கங்கள் என ஒரு சிறிய ஊரில் இவ்வளவு தொகையான சேவைநிலையங்களா என்று எண்ணுமளவுக்கு சேவைநிலையங்களின் வளர்ச்சி காணப்பட்டது.

இச்சேவை நிலையங்களின் வளர்ச்சியில் உள்ளூர் வாசிகள் பங்குபற்றத் தொடங்கியதும் இவற்றின் முக்கியத்துவம் உருத்திரபுரம் மக்களிடையே பிரபல்யம் பெற்றிருந்தன.


# TRAFFIC TICKET SPECIALISTS



**TRAFFIC TICKET பெற்றீர்களா?**
**குற்ற, குடிவரவுப் பிரச்சினைகளா?**
**உடனே அழையுங்கள்**

# பீற்றர் ஜோசப்

**Tel (416) 537-7737 Fax: (416) 537-9035**


# SINDY FINANCIAL

## துரித பணமாற்றுச் சேவையின் முன்னோடிகள்

**பதினொரு வருட நம்பிக்கையாளர்கள்**

## இலங்கையின் எல்லாப் பாகத்திலும் ஒரே நாணய மாற்று விகிதம்

- கொழும்பு
- மன்னார்
- திருமலை
- யாழ்ப்பாணம்
- வவுனியா
- திருச்சி



- சென்னை
- திண்டுக்கல்
- மலேசியா
- பாங்கொங்
- ஐரோப்பிய நாடுகள்

# சின்டி பைனான்சியல்

**2425 EGLINTON AVE. EAST, UNIT 7**

**(Shankar Plaza)**

**Scarborough, Ontario**

**TEL: (416) 288-0277 FAX: (416) 297-9111**

சுவிசில் எமது தொடர்புகளுக்கு:

**Asian Enterprize 0411-291-4652 Sri Sai Enterprize 0911-240-0555**

# தமிழ்த் தாயின் குழந்தைகள்

ஈழத் தாயே!
நீ பெருமைக்குரியவள் அம்மா.....

நீ பெற்ற குழந்தைகள் – இன்று
உன்னை மீட்க . . .
கடமையை மதித்து
உறவை நேசித்து
இளமையை இழந்து
போற்கள மாடுகிறார்களே. . . .

நீ பெருமைக்குரியவள் அம்மா....

உடல், உயிர், ஆவி
அனைத்தையும் அற்பணித்து
உலகுமிக்க சாதனை புரிந்து
உன் மடியிலே ஈழக்கனவுடன் உறங்குகிறார்களே...

நீ பெருமைக்குரியவள் அம்மா...

தாயே!
அன்று நீ ஊட்டிய பால்
இன்று உனக்கு அபிசேகம்!
ஆம்! குருதி அபிசேகம் தாயே!

நீ பெருமைக்குரியவள் அம்மா...

தாயே, உனக்கொரு உருவமில்லை!
ஆனால்....

நான் உன்னைத் தினமும் காண்கிறேன்
ஒவ்வொரு மாவீரன் குருதியில் – அவர்களுக்கு
நீ ஊட்டிய பாலைக் காண்கிறேன்
புலிகளின் பெரும் படையில் – உன்
வீரத்தைக் காண்கிறேன்

அவர்கள் அணிந்திருக்கும் நஞ்சுமாலை – உன்
கழுத்தில் தொங்கும் மஞ்சள்க் கயிறு
அவர்கள் துப்பாக்கியால் இருந்து வரும் ஒலி – உன்
கால்ச் சிலம்பில் இருந்து வரும் ஒலி
சீருடையணிந்த போரளி – உன்
கட்டழகு மேனி

நீ பெருமைக்குரியவள் அம்மா...

நீ உறங்குமிடம் மாவிரன் கல்லறை
அதுவே எனக்கு ஆலயம்
தாயே, ஒவ்வொரு மாவீரனின் கல்லறைகளும்
உன் பெயர் சொல்லும்,
உன் புகழ் அறியும்,
உன் வரலாறு கூறும்

அம்மா என்று வீழ்ந்து முத்தமிட்டபோதும்
மார்பில் கட்டியணைத்து தாலாட்டுப் பாடுகிறாயே!

நீ பெருமைக்குரியவள் அம்மா...

செல்வி. குமுதா
பத்மநாதன்

# எமது ஊரின் எழில் வதனம்

**செல்வி மனோகரசீலன் கோபிகா (வயது 13)**
**பிரான்ஸ்**

எம் உருத்திரபுர மண் கிராமமயமாக்கப்பட்டு வந்த காலத்தில் இருந்து கண்ணிமைக்கும் பொழுதெல்லாம் கண்ணிற்கு விருந்தாக காட்சியழிக்கும் நெற்காணிகளே ஓர் தனியழகு. இதுமட்டுமா? உச்சி வெய்யில் வேளையிற் கூட அடடா! தகிக்கிறதே வெப்பம் என்று எவரேனும் செப்பிடார்கள்.காரணம் இதுதான் என்றுமே வற்றாது குளிர்மையுடன் நீர்நிறைந்து நிற்கும் குளமும் கால்வாய்களுமே தவிர என்றுமே சுகமான தென்றலையும் வேறுபல பயன்களையும் ஈன்கின்ற பயன்தரு மரங்கள் வீதியின் ஓரத்திலும் பலர் வீட்டு வேலியிலும் வானளாவ உயர்ந்து நிற்கும் கற்பகதரு, வேம்பு, புளி, ஏன் முக்கனிகளான மா, வாழை, பலா அத்தனையும் குறைவின்றி நிறைந்திருக்கும் எமதூரின் இயற்கை எழில் காண்பவர்கள் மனதைக் கவர்ந்திழுப்பதில் வியப்பொன்றுமில்லையே.

காலநீரோட்டத்தில் ஆண்டுகள் கரைந்தோடின. நாகரீகத்தின் ஏணிப்படியில் அயற்கிராமங்களும், நகரங்களும் அடிமேல் அடிவைத்து நகர்கின்ற வேளைகளில் எங்கள் கிராமம் மட்டும் விதிவிலக்கா என்ன? வறுமைக்கும் துன்பத்திற்கும் துணைபோகாது வியர்வை சிந்தி உழைத்து வாழப் பழகியவர்களை சுமந்து நிற்கும் மண்ணல்லவா எங்கள் மண் பாரிய அளவினிலான தொழில்கள் எதுவும் இல்லாவிடினும், விவசாயம், பண்ணைகள், வீட்டுத்தோட்டம், கூடவே இயற்கை அன்னை படைப்பில் வளர்கின்ற மரங்களின் வளங்களையும் பயன்படுத்தி தமது உணவுத் தேவையையும், இன்னும் பல தேவைகளையும் பூர்த்தி செய்கின்றார்கள் என்றால் மிகையாகாது.

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற உண்மை வாக்கிற்கு இணங்கவோ என்னவோ தெய்வக்களை வீசபல கோயில்கள் கட்டப்பட்டு உருத்திரபுர பதிவாழ் மக்களால் பூசிக்கப்பட்டு வருகின்றது. இங்குள்ள ஆலயங்களில் ஒன்றான பழமை பொருந்திய சிவன் ஆலயம் எமதூரின் அதிசிறப்புப் பொருந்திய அம்சமாகத் திகழ்கின்றது. ஈச்சரங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்ற உருத்திரபுரீஸ்வரம் எங்கள் கிராமத்திற் தான் அமைந்துள்ளது என்று கூறுகின்றபோது அதனாற் கிடைக்கின்ற பெருமையை எல்லாம்வல்ல அந்தச் சிவனும் சக்தியும் எங்களுக்கு அளித்த வரப்பிரசாதமாகவே உருத்திரபுரவாழ் மக்கள் நாம் கருதுகின்றோம்.

ஓர் சமுதாயக் கோட்டைக்குச் சரித்திரக் கதவுகளாகத் திகழும் மாணவர் சமுதாயம் எங்கள் கிராமத்திற் பலம் வாய்ந்த அடித்தளத்துடன் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. தம்மை உருக்கி நல்வழி காட்டும் ஆசான்களின்கீழ் மாணவர் சமுதாயம் நற்கல்வி பயின்று தற்போதைய நவீன உலகிற் தாயக மண்ணிலும் வளர்ச்சி அடைந்து வருகின்ற அயல்நகரங்களுக்கு இணையாகப் பல்கலைக் கழகத்திற் பலதுறைகளிலும், பலர் வெளிநாடுகளிலும் உயர்கல்வியைத் தொடர்ந்து கற்றுச் சாதனைகள் பல படைத்து உருத்திரபுரக்கிராம மண்ணில் அறிஞர்கள். சான்றோர்கள், சாதனையாளர்கள் நாமும் உள்ளோம் என்பதை எட்டுத் திக்கும் எதிரொலிக் கின்றார்கள்.

எதிர் காலத்தில் எங்கள் உருத்திரபுரக் கிராமம் ஒரு தலை சிறந்த நகராக உயரும் என்று திடமாக நம்புவோம். ஒரு சிறந்த கிராமமாகவோ அல்லது நகரமாகவோ எமது உருத்திரபுர மண் மாறும் போது எங்கள் மண்ணில் பல சான்றோர்களும், கலைஞர்களும், சாதனையாளர்களும் இப்படிப் பல துறையிலும் எங்கள் கிராமத்தவர்களும் எங்கள் மண்ணின் அழகை மெருகூட்டுவார்கள்

இந்த வேளை எமதூரின் எழில் வதனம் "தங்கக் கிண்ணத்தில் சூரிய ஒளிபட்டு பிரகாசிப்பதைப்போல்" எமதூரின் வதனமும் எட்டுத் திக்கும் தக தகவென ஜொலிக்கும்

உலகெங்கும் புலம் பெயர்ந்து வாழும் உருத்திரபுர மக்கள் நாம் எம் ஊரின் அருமைகளையும், சிறப்புக்களையும் எடுத்து வந்து முழங்குவதே புலம் பெயர்ந்து வாழும் மானிடர்கள் நாம் எங்கள் கிராமத்திற்கு செய்யும் கைமாறாகும்..

உதவிக்கரம் நீட்டுவோம் நாம் புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து மீண்டும் பூக்கழனியாய் மாற்றிடுவோம் எங்கள் எழிலான உருத்திரபுரமண்ணை.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" ........

# நிஜங்கள்



நிழல்களை துரத்தும்
என்பயணம் இன்னும்
முடியவே இல்லை
தொடரமுடியாதபடி
மிகக் களைப்பு எனக்கு—
கண்ணைச் சிமிட்டி
அழைக்கின்ற நட்சத்திரமாய்
என் முன்னே
நிழலைக் கொடுத்த நிஜங்கள்
கால்களை இடறி
கீழே விழவைத்து
கைகொட்டி நகைக்கும்
கைகள் மண்ணை
தட்டித் துடைக்கும்
முகத்தில் மட்டுமல்ல
மீசையிலும்கூட —
என்னை இடறி
கீழே விழவைக்கும்
குதிரைகளை விட்டுவிட்டு
என்னைச் சுமக்கும்
கழுதையைத் தேடுகிறேன்

அன்ரன் அன்பழகன்
உருத்திரபுரம் தமிழீழம்

# உருத்திரபுரம் புனர்வாழ்வும் உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகமும்

கா. நாகலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்)

உருத்திரபுரம் கிராமம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே சிறப்போடு வளர்ச்சியுற்ற கிராமமாகும். இங்குள்ள சிவாலயத்தின் சற்சதுரவடிவ ஆவுடையார் கல்லு இராசஇராச சோழர் காலத்தையது என்பதை உறுதிப்படுத்துகின்றது. காலத்துக்குக் காலம் ஏற்பட்ட அந்நியர் படையெடுப்பினால் அழிவுற்று வந்துள்ளது. இரணைமடுக்குளத்தின் இரண்டாவது குடியேற்றமாக 1949ம் ஆண்டு இக்கிராமம் மறுசீரமைக்கப்பட்டது. கிளிநொச்சிமாவட்டத்தின் சகலவசதிகளும் கொண்ட முதல் மகாவித்தியாலயம் இங்கே அமைக்கப்பட்டது என்பதை நினைக்கும்போது இப்பகுதியின் சிறப்பை அறிந்து கொள்ள முடியும். அரசியல், கூட்டுறவு அரசினர் உத்தியோகம், விளையாட்டு, சமூக சேவை ஆகிய துறைகளில் இங்குள்ளோர் முதன்மை பெற்றனர். இத்தகைய வளர்ச்சி இலங்கையரசின் இனஅழிப்பின் காரணமாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. ஒரு சிலர் ஆசிய ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயரத் தொடங்கினர். இலங்கையரசின் படையெடுப்பின் காரணமாக 1996ல் உள்நாட்டிலேயே அகதிகளாக வெளியேறினர். உடமைகள் அழிந்தன நாடு காடாகியது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் விடாமுயற்சியால் 1998ல் மீட்கப்பட்டது. எனினும் பரந்தன் ஆனையிறவுப் படைமுகாம்களில் இருந்து ஏவப்பட்ட எறிகணைகளுக்குப் பயந்து குடியேறவில்லை. 2000ம் ஆண்டில் ஏற்பட்ட யுத்தம் ஆனையிறவையும் அதனைச் சார்ந்த இடங்களையும் மீட்டமையால் உருத்திரபுரம் கிராம மக்கள் குடியேறித் தமது வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர். எனினும் அடிப்படைத் தேவைகள் எதுவும் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

இந்நிலையில் மேற்குலக நாடுகளில் வாழ்ந்து வரும் ஊர்மக்கள் தம்நாட்டின் வளர்ச்சியிற் பங்கு கொள்ள வேண்டியது ஒவ்வொருவரதும் தார்மீகக் கடமையாகும். கல்வி, கலை, கலாசாரம், சமயம், சுகாதாரம், புனர்வாழ்வு, விளையாட்டு ஆகிய துறைகள் வளர்ச்சியுற்று நாடு சிறந்தோங்க ஒன்றுபட்டு உழைக்க வேண்டியது முக்கியமானதாகும்.

### கல்வி

5ம் ஆண்டு புலமைப்பரீட்சையிற் சித்தியடையும் மாணவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதற்கு வசதியற்றவர் களாயின் மாதந்தோறும் ஒரு சிறுதொகைப்பணம் கிடைக்கத்தக்கவகையில் நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு அறக்கட்டளையை ஆரம்பித்து நடைமுறைப் படுத்தலாம். வறுமை நிலைக்குத் தக அவர்களுக்குக் கொடுக்கப்படும் தொகை வித்தியாசப்படலாம்.

இதேபோன்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவர் களுக்கும் தனியான கணக்கிற் சேமிப்பதன் மூலம் உதவலாம். இவற்றுடன் முன்பள்ளிகள் அமைத்தும் பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகளில் மிகமுக்கிய மான சிலவற்றையாவது செய்தும் கொடுக்கலாம்.

பாடசாலைகள் தோறும் நடனம், நாடகம், சங்கீதம், சித்திரம் போன்ற பாடங்கள் படிப்பிக்கப்படும். இவற்றை ஊக்கப்படுத்துவதன் மூலம் மாணவரிடையே நல்ல பலனை எதிர்பார்க்க முடியும். இத்துடன் வயது வந்தவர்களும் பங்குகொள்ளக்கூடிய வகையில் கலைக்கழகங்களை ஊக்கப்படுத்தி மாதாந்தம் பௌர்ணமி அல்லது வேறுதினங்களிற் யாவரும்பங்கு கொள்ளக் கூடிய பொதுவான இடத்திற் பொதுமக்களை உற்சாகப்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகளை நடாத்த ஒழுங்கு செய்யலாம்.

### சுகாதாரம்

வைத்தியசாலைகளின் வளர்ச்சியில் அக்கறை காட்டப்பட வேண்டும். கூடிய வரையில் மிகமுக்கிய மாகத் தேவைப்படும் மருந்துகளை அரசாங்கமூலம் பெறக்கூடியதாக வைத்தியசாலை அபிவிருத்திச்சபை ஆக்கப்பட்டு அதன் மூலம் ஏற்ற உதவிகள் செய்யப்படலாம். இத்துடன் குடிநீர்மலகூடம் என்பன ஒவ்வொருவருக்கும் கிடைக்க உதவவேண்டும். வசதி குறைந்தவர்களின் வீடுகளிற் சிரமதான மூலம் மலகூடம் ஆக்கப்படலாம். இதற்கான அடிப்படைத் தேவைகளை உதவலாம். ஒரு சுகாதார சேவையாளரை நிரந்தர வேதனத்தில் அமர்த்திவீடுகள் தோறும் சென்று சுகநலம் பற்றிப் பிரசாரம் செய்யக்கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

### புனர்வாழ்வு

மக்கள் தமது இல்லங்களைப் புனரமைப்பதில் வசதிக்கேற்க உதவலாம். விவசாயம், கைத்தொழில், கால்நடைவளர்ப்புப் போன்ற சுயதேவைப்பூர்த்தியை ஒவ்வொருவரும் நடைமுறைப்படுத்த மக்களின் இயல்பு நிலையை ஆராய்ந்து அவர்களுக்கு உதவுவதன் மூலம் சிறந்த சேவையைப் புரியமுடியும். கொடுக்கும்

பணத்தில் வருமானமாகக் கிடைக்கக்கூடியதில் மிகக் குறைவான ஒரு தொகையை மாதாந்தம் அவர்களிட மிருந்து பெறுவதன் மூலம் அப்பணத்தினை வளர்த்துப்பலரும் பயனடையச் செய்யலாம். உதாரணமாக ஐயாயிரம் ரூபாவுக்கு ஒரு பசுமாடோ வண்டிமாடோ கால்நடைகளோ வாங்கிக் கொடுத்து அதன் மூலம் வரும் வருமானத்தில்மாதம் ஐம்பது ரூபா பெறுவது கஷ்டமாய் இராது. இலவசம் என்பதில் உள்ள கவலையீனமும் இருக்காது.

### விதவைகள், ஆதரவற்றோர்

கிராமத்தில் உள்ள இவர்களை இனங்கண்டு அவர்களது சூழலை ஆராய்ந்து முன்னுரிமை அடிப்படையில் முன்கூறிய வகையிற் சுயதேவைப்பூர்த்தியை எட்ட பல முயற்சிகளையும் அறிமுகப்படுத்தலாம்.

### வீதிகள்

கிராமத்தின் வீதிகள் கிராமத்தின் தெற்குப் புறத்தில் அமைந்துள்ள வெள்ளவாய்க்கால் என்பன அரசின் உதவியுடன் திருத்தப்பட வேண்டும். வருடத்தில் ஒரு வீதியைச் சிரமதான மூலம் சீர்செய்ய முயற்சிக்கலாம்.

### விளையாட்டு

இங்கு மூனறு விளையாட்டுக்கழகங்கள் சிறப்புற இயங்குகின்றன. அவற்றின் வளர்ச்சிக்கு உதவுவதுடன் மூன்று கழகங்களிலும் சிறந்த வீரர்களை ஒன்றிணைத்து கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னணிக்கழகம் என்ற பெயரை எட்டமுயற்சிக்கலாம்.

### சமயம்

மேலே கூறப்பட்ட சகல முயற்சிகளுக்கும் அரசாங்கம் ஒரு பகுதி உதவியைச் செய்ய முடியும். ஆயின் சமயம், சம்பந்தமான ஆலயம் சம்பந்தமான முயற்சிகளுக்கு அரசின் உதவியை எதிர்பார்க்க முடியாது. எனவே ஆலயவளர்ச்சிக்கும் மக்கள் பங்களிப்பது முக்கியமானதாகும்.

இத்துடன் பொதுநிகழ்ச்சிகளை நடத்துவதற்கு வசதியாக பொதுமண்டபமென்று அமைப்பது சிறப்புடையது மாவித்தியாலத்துக்குச் சொந்தமாக முன்புறமாகவுள்ள காணியில் விளையாட்டரங்கொன்றை அமைப்பதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி விளையாட்டு, கலைநிகழ்ச்சிகளைப் பார்வையிட வசதி செய்ய முடியும்.

இத்தனை வேலைகளையும் செய்வதற்கு உருத்திரபுரத்திலுள்ள சகல மக்களையும் பிரதிநிதித் துவப் படுத்தக்கூடிய சமூக சேவை நிறுவனமாக உருத்திரபுரம் அபிவிருத்திக்கழகம் ஒன்று அங்கு உருவாக்கப்படவேண்டும். இக்கழகம் குறைந்தது மாதமொரு சிரமதானமாவது பலரும் பங்குபற்றக் கூடியதாகச் செய்யப்பட வேண்டும். கனடிய கழகமும் உருத்திரபுரம் கழகமும் ஒன்றிணைந்து முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்து அவற்றைப் பரிசீலனை செய்து செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதுடன் அவற்றின் வளர்ச்சிப் படிமுறைகளையும் கண்காணித்து வளர்ச்சி அறிக்கைகள் தயாரித்து அதன் வளர்ச்சியை அறிந்து கொள்ள முடியும். தேவைப்படின் ஒரு இணைப் பாளரையும் நியமித்துக் கொள்ளலாம்.

இத்தனையும் ஒரு குறுகிய காலத்திட்டமாய் அமையாது நீண்டகாலத்திட்டமாக நடைமுறைப்படுத்த வேண்டியது முக்கியமாகும்.

உருத்திரபுரம் அபிவிருத்திக்கழகங்கள் கனடா இங்கிலாந்து ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் ஆக்கப்பட வேண்டும். அனைத்தும் ஒன்றிணைக்கப் பட்டுச் செயற்படின் அபிவிருத்திப்பணி இலகுவாகும். தேவைப்படின் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு செயற்திட்டங்களைப் பொறுப்பேற்று நடைமுறைப் படுத்தலாம்.

இத்துணை செயற்பாடுகள் சிறப்புற நல்ல நிர்வாகங்கள் அமைய வேண்டியது முக்கியமாகும். நாடு சிறந்திட நற்பணி தொடர்ந்திட நாமெலாம் ஒன்றிணைவோம்.


**உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகம் (பிரான்ஸ்)**

**செய்திகளையும் ஆக்கங்களையும் கீழ்வரும்**
**தொடர்வலை முகவரியில் நீங்கள் பார்க்கலாம்**
http:/uruthirapuram.ifrance.com

# களத்திலிருந்து ஓர் கடிதம்



இடிந்து போன நகரத்தின்
சந்துகளிலே எதிரியின்
வருகைக்காய் காத்து
இருக்கிறேன்
எரிந்து விட்ட எமது
காடுகளில் ஒளிவதற்கு
இடம் இன்றி
நரிகளும் இப்போது
என்னோடு - இருளில்
தத்தைகள் தத்தி
சிறு சத்தமென்றாலும்
எதிரியோ என எண்ணி
ஒரு கணம்.....
நேற்றிலிருந்து
குண்டடிபட்ட எனது
இடது காலும்
சற்று வலிக்கத் தொடங்கியிருக்கிறது
இத்தனைக்கும் இடையில் - அன்பே
இப்போதெல்லாம்
எனக்கு
உன் நினைவுகளை
இரை மீட்க
நேரமில்லை....

குமணன் த.

சிறுகதை

# தன்வினை தன்னைச் சுடும்.....

பேரம்பலம் கோமளா

உனக்கு ஆக்களைப்பாத்து எடைபோடவே தெரியாது. பக்கத்து வீட்டு புவனா தண்ணி கிள்ளப்போன இடத்தில் வசந்தாவுக்குக் கதை தொடுத்தாள். அடுத்தவர்களைப் பற்றிக் கதைப்பதில் ஆர்வமில்லாத பெண்கள் அரிதிலும் அரிது. இருந்தாலும் ஊர்க்கதை கதைத்தாற் தனக்கு அந்நிலை வந்துவிடுமோ என்றொரு மனப்பயம் வசந்தாவுக்கு. கடவுள் பக்தி கொண்டவள். முடிந்த வரை கதை வளராமல் இருக்கவே முயற்சிப்பாள். புவனாவுக்கு மற்றவர்களைப் பற்றிக் கதைக்காவிட்டால் தூங்கவே மாட்டாள். இப்ப நான் ஆற்ற எடையைப் பார்க்க வேணும்..... கொஞ்சம் வக்கிரமாவே கேட்டாள் வசந்தா. பின்வீட்டு ராசாத்தியைப் பத்தித்தான். என்னா மினுமினுப்பும் பாவனையும். பெயருக்கேத்தமாதிரி ராசாத்திமாதிரித்தான் இருக்கிறாள்.....ம்...ஆனா அவரைப்பாத்தா இண்டைக்கோ, நாளைக்கோ மாதிரி இருக்கிறார். புன்னகை மலர்ந்த முகத்துடன் கூறினாள் புவனா. பிள்ளையைக் கனடாவுக்கு அனுப்பியதில் அந்த மனுஷனுக்குத்தான் கவலை. அவவுக்கு துண்டாக இல்லை. இருந்தா இப்படி குளுகுளுப்பா இருப்பாவா? கேள்வியோடு வசந்தா முகத்தை நோக்கினாள் புவனா.



வசந்தாவோ, கிணத்தடியில் புதுசா வைத்த கறிவேப்பிலைக்கண்டுக்கு உரம்போடக் கொத்திக் கொண்டிருந்தாள். அவளின் உணர்வை புரிந்து கொண்ட மாதிரி புவனா, கதையை நிறுத்திக் கொண்டாள். இப்பதான் அவளுக்கு நின்மதியா வீட்டுவேலை செய்ய மனம் நாடும். வசந்தாவுக்கு ராசாத்தியின் வீட்டு விவகாரம் அத்துபடி. நீண்டவருட பழக்கமும் கூட. ராசத்தி மணம்முடித்த வருஷத்திலிருந்து ஏழாண்டுகள் கடந்து பிறந்த முகுந்தன் வளர்ந்து இருபத்திரெண்டு வயதாகும்வரை அக்குடும்பத்துடன் நன்கு பழகியவள். இருவீட்டுக்கும் அந்த வடலியுடன்கூடிய பின்வேலிதான் தடையாக இருந்தது. இந்த வேலியை எடுத்துட்டா, நாம எட்டிக் கதைக்க வேண்டியதில்லையென்று வசந்தாவும், ராசத்தியும் அடிக்கடி பேசிக்கொள்வார்கள். உணவை ஊட்டி வளர்த்தாளோ என்னவோ, ராசத்தி பாசத்தையும் அன்பையும் ஊட்டி, ஊட்டி வளர்ந்தவன் தான் முகுந்தன். நான் அப்பா - அம்மா பிள்ளையென்று இருவரையும் பிரித்துப் பார்க்காமல் சிறுவயதிலிருந்தே கூறுவான். அவனின் அந்த அணுகுமுறையைப் பார்த்தே ராசாத்தியும் - நாகேந்திரமும் உவகை கொள்வர். தங்கள் மனம் வேதனைப்படக்கூடாதென்று இந்த சிறுவயதிலேயே இப்படியொரு சிந்தனையென்று நாகேந்திரர் அடிக்கடி என்வீட்டுக் காரருடன் கூறுவார். ஆண்டவன் காலம் சென்று தந்தாலும், மனசுக்கு நிறைவாயும், கவர்ச்சியாகவும் அந்த எள்ளுக்காட்டு முருகன் மாதிரியே பிறந்திருக்கிறான். நாகேந்திரர் கண்கலங்க பேசுவதும், உணர்ச்சி வசப்படுவதையும் பார்த்து ராசாத்தி தேம்பியே அழுதிடுவாள். இவர்களின் சந்தோஷத்தில் மட்டுமில்லாது, துக்கத்திலும் பங்கெடுத்துக்கொண்டவள் வசந்தா. ஒரு பிள்ளை யென்றாலும் ஒழுக்கமான வனாகவே வளர்ந்தான் முகுந்தன். படிப்புத்துறை மட்டுமன்றி விளையாட்டிலும் மிகவும் ஆர்வத்துடன் துலங்கினான். இலங்கைத் தமிழனுக்கு நேரும் தேசியத் தொந்தரவு இவனுக்கு விதிவிலக்கல்ல. அதிகாலையில் நடக்கும் ரோந்தில் அவனையும் இழுத்துச் செல்வர். அந்த சிங்களக் காடையர். அப்போதெல்லாம் ராசாத்தியும் - நாகேந்திரரும் படும் துயரத்தை விளக்க இயலாது.

பல தடவைகளின்பின்பு, நாகேந்திரர் ஒரு திட்டமுடன் பேச்சை ஆரம்பித்தார் ராசாத்தியிடம். ராசாத்தி .... முகியை இங்கு வைச்சிருக்க எனக்குப் பயமா இருக்கு. அவளும் அதை ஆமோதித்தாற்போல் மௌனம் சாதித்தாள். என்ர தங்கச்சி குடும்பம் கனடாவிலிருப்பது உனக்குத் தெரியும் தானே....? பெடியளும் படிச்சு நல்ல நிலைமையிலிருக்கு தாம். இவனையும் அங்கு அனுப்பினா உதவியும் உண்டு. அதோட படிப்பையும் தொடரலாம். நீ எனன் சொல்லுற என்று பேச்சை முடித்தார். ராசாத்தி மூச்சே நின்றுபோகும் போலுணர்ந்தாள். வயசு போனா புத்தி மத்திமம் எண்டுறது உண்மைதான். ஒற்றைக் கண்ணுச்சி போடுற குண்டை விட நீங்க போடுற குண்டுதான் பெரிசு. பொரிஞ்சு கொட்டினாள் ராசாத்தி. தனது இருபத்தியேழு வருட திருமணவாழ்வில் நாகேந்திரர் சந்திக்காத ஒரு முகபாவனை, கொதிப்பு எல்லாமே வெளிப்பட்டது ராசாத்தியிடம். பல மணிநேரம் தன் கணவன் கூற்று நடந்துவிடுமோ என்றெண்ணியே அழுது கொண்டாள். பெண்களுக்கேயுள்ள சுபாவம் தானேயென்று ஒதுக்கிவிட முடியாதளவு அவள் அழுது துன்பப்பட்டாள். நாகேந்திரர் மட்டும் மகன் பிரிவில் சந்தோஷப்பட்டு விடுவாரா.? வீட்டுத் தலைவன் என்ற வகையிலும், மகனின் உயிரையும், எதிர்காலத்தையும் கருத்தில் வைத்தே இந்தப் பேச்சைத் தொடக்கினார். அவர்கூட தினமும் மனம் புழுங்கி, சரியாக உண்ணாமல், மிகவும்

தளர்ந்து காணப்பட்டார். பல இரவுகள் இருவரும் பேசி, நாகேந்திரரின் முன்னுரை முடிவுக்கு வந்தது. எதையும் நம் வாழ்க்கையில் விட்டுக்கொடுக்காமல், எந்த திருப்பமும் காண முடியாதென்று ராசாத்தியும் மனதைத் தேற்றினாள். மறுநாள் முகுந்தனிடம் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர். கூடவே வசந்தாவின் வீட்டுக்காரரும் இருந்தார். அவர்களின் பேச்சில் தீர்மானம் முற்றுப்பெற்றுவிட்டதை அவன் உணராமல் இல்லை. இருந்தாலும் அவன் உதடுகள் அம்மா ஓமாமா...... என்று முணுமுணுத்தது. நாகேந்திரர் அதை எதிர்பார்க்காம லில்லை. அவளையே கேள். எங்களுக்கும் வயசாச்சு. எத்தனை நாள் நாங்கள் உன்னை பிடிச்சுக்கொண்டு போக காம்புகளுக்குத் திரியுறது. அதுவும் எப்ப என்ன நடக்குமோ! மாணிக்கப்பிள்ளையாரே நீ தான் எல்லாரையும் காவல் காக்க வேணும் என்று வேண்டிக் கொண்டார். பெற்றோரின் பாசவற்புறுத்தலால் தலையசைத்தான் முகுந்தன். எல்லோரும் ஆச்சரியப்படும்படியாக எல்லா ஒழுங்குகளும் ஒரு மாதத்திற்குள்ளேயே நடந்தேறியது. வழக்கமாக, சிலர் இவை முந்தியே திட்டம்போட்டு அலுவல் பாத்தாச்சு, யாருக்கும் சொல்லாமல். ஒரு பிள்ளையென்றும் பார்க்காமல் அனுப்பினம். இப்படி எத்தனையோ பழிச்சொற்கள் வசந்தாவின் காதுக்கு வந்தது. அவளால் எத்தனை பேருக்கு விளக்கம் கூறஇயலும். மகளை, முகுந்தனுக்குச் செய்யத்தான் இப்படி நகமும் சதையுமாக பழகிறா என்று சிலர் அவளையும் வஞ்சித்து அவர்களின் நட்பைக் கூறுபோட்டனர். எல்லாவற்றையும் தனக்குள்ளே போட்டுக்கொண்டாளேயொளிய ராசாத்தி குடும்பத்துடன் பழகுவதில் எந்த மாற்றத்தையும் காட்டவில்லை. முகுந்தன் விடைபெறும் நாளும் வந்தது. பயணம் போகையில், அழக்கூடாதென்று கிளிப்பிள்ளைக்கு கூறுவதுபோல் சொல்லி வைத்திருந்தாள் வசந்தா ராசாத்தியிடம். ராசாத்திக்கு அது தெரியாமலல்ல. முகுந்தனை சில நபர்கள் வந்து அறிமுகப்படுத்தி அழைத்துக் காண்டு போக, நாகேந்திரரும் - ராசாத்தியும் அவனைத் தழுவிக்கொண்டனர். பார்த்துக்கொண்டு நின்ற வசந்தாவும், வீட்டுக்காரரும் கண்கலங்கியே விட்டனர். ராசாத்தயின் நிலை சொல்லவா வேண்டும். இருபத்திரண்டு வயதையடையும் கட்டிளம்காளை முகுந்தன். அவனின் காந்தக்கண்களே கொவ்வைப்பழம் போலாகிவிட்டது. வந்தவர்கள் அவசரப்படுத்தவே, நாகேந்திரர் தொண்டையை செருமி தன்னை ஒரு நிலைப்படுத்திவிட்டு, ராசாத்தியை அணைத்துக் கொண்டார். மோட்டார் சைக்கிளில் அவன் புறப்பட, ஒவ்வொருவரும்ஒவ்வொரு பக்கமாக உட்கார்ந்தனர். முகுந்தன் வெளிக்கிட்ட நாளிலிருந்து ராசாத்தி சரியாகத் தன்னைக் கவனித்துக் கொள்ளமாமல் நோய்வாய்ப் பட்டாள். உடல் பருத்துத் தோற்றமளித்தாள். அதைத்தான் புவனா குளுகுளுப்பென்று கதைத்துக் கொண்டாள். முகுந்தன் புறப்பட்டு நான்கு மாதங்களின் பின்பு தான் ராசாத்திக்கு மறுபடியொரு அதிர்ச்சி வந்தது. நாகேந்திரர் மூர்ச்சையாகிவிட்டார் சிலநிமிடம். துடித்துப்போன ராசாத்தி, அங்கு தற்சமயம் வைத்தியம் பார்க்கும் அந்த பனை ஓலையிலான சிறுகுடிசைக்கு ஓடினாள். காட் அற்றாக்காக (Heart Attack) இருக்கலாம் என்று டொக்டரும் ஊகித்துக் கூறினார். ரெஸ்ட் (test) பண்ண என்ன இருக்குது? ஐஸ்பிறினே பத்து ரூபாய். இந்த இலட்சணத்தில் சந்திரிகாவோட சந்தையிலிருந்து என்னத்தை ஈழத்தில் எதிர்பார்ப்பது. நாகேந்திரருக்காவது அறுபது வயதாகிறது. பச்சிளம் குழந்தைகளும், வாலிபப் பிள்ளைகளும் மருந்தின்றி போதிய மருத்துவ வசதியின்றி உயிர் நீர்ப்பதை ஒரு சில மணிநேரத்துக்குள்ளேயே காணக்கூடியதாயிற்று. சிலமணிநேரத்தின் பின் நாகேந்திரரும் உயிர்துறந்து விட்டார். வசந்தா அங்கு நடப்பவற்றை காட்டியே ராசாத்தியை திடப்படுத்திக் கொள்ளச் சொன்னாள். ஆஸ்பத்திரியில் பார்க்கும்போது அதை ஏற்றுக் கொண்டாலும், தனிமையில் வீட்டில் இருக்கும்போது துயரத்தில் ஆழ்ந்தாள். தனிமையென்ற ஆட்கொல்லி தன்னைவிட்டுப் போகும் நாளையேங்கிக் காக்கலானாள். முகுந்தன் தான் ராசாத்தியின் வாழ்க்கையென்றாயிற்று. ஒரு வருஷம் ஓடி ஒழிந்தது. தாய்க்கும் மகனுக்குமிடையில் பாசம் பரிமாறுவதில் முதற்பங்கு தபாற்காரனுக்குத்தான். ராசாத்தியோ தன்னைக் கவனிப்பதைக் குறைத்துக்கொள்ள, நோய்களும் அவளைக்கட்டிக்கொண்டன. உயர் இரத்த அழுத்தம் (High blood pressure) சுகர் (Sugar) என்றெல்லாம் பெயர்கள் சூட்டப்பட்டாலும் ஐஸ்பிறின் மட்டுமே வாங்க முடிந்தது. நோய், பிணியால் அவதிப்படுபவர்களுக்கு சிகிச்சையளிக்க மருந்தின்றி வைத்தியர்களும் மனவேதனைப்பட்டனர். இந்நிலையில் தான் முகுந்தன் தாயை கொழும்பு வரும்படியும் தான் ஸ்பொன்ஷர் செய்வதாயும் கடிதம் போட்டான். ராசாத்தியும் அதன்படியே நடந்தாள். அவனுடன் கூடவே இருக்க வேண்டுமென்பது தான் அவளது ஆசையும்கூட. அதன்படியே அவளும் கனடா வந்து மகனுடன் தனது வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் கூறி, ஓரளவு மனதைப் பலப்படுத்திக்கொண்டாள். புதுநாகரிகத்தின் மத்தியிலும் அவள் துல்லியமாகவே தெரிந்தாள். முகுந்தனும் படிப்பினை முடித்து நல்ல வேலை செய்துகொண்டிருந்தான். அவனுடன் செல்லும் போதெல்லாம்அவனின் கௌரவம் பாதிக்காதவாறு தோற்றமளித்தாள். அவளுக்கே அது ஆச்சரியமாக இருந்தது. பெண்பிள்ளையென்றால் அப்படி உடு, இப்படி நட என்று சொல்லுவார்கள். அதனாலோ என்னவோ அவள் எப்படியோ இந்த புது நாகரிக பாவனைகளுக்கேற்ப தன்னைப்பழக்கப்படுத்திக் கொண்டாள். முகுந்தனுக்கும் தாயின் வரவு பெரும் உதவியாகவே இருந்தது. சமையல்தொட்டு, உடுப்பு அயன் பண்ணும்வரை அவளே கவனித்தாள். இலங்கையிலும் அவள் இதை அவனுக்குச் செய்தாள். ஆனால் முகுந்தன் அதை உணர்ந்ததே

இப்போதுதான். அவன் மிகவும் சந்தோஷமாக காணப்பட்டான். வழக்கம்போல் தாயின் கடமையென்று தொடங்கி அவனைக் கல்யாணம் பண்ண சரிசொல்ல வைத்தாள். மணமகள் எல்லாம் வேறுயாருமல்ல. நாகேந்திரரின் தங்கை மகள் சபேர்னா தான். ஒண்டுக்க ஒண்டு பிற்காலத்தில் நம்மையும் பார்க்கும், சுயநலம் என்று யோசிக்காதே. முகுந்தனோடும் ஒத்துப்போகும், எல்லாம் ஒரே இரத்தம் தானே. அடிச்சாலும், புடிச்சாலும் விட்டுப்பிரியாதுகள். அதுகளுக்குப் பிடிச்சுக்கொண்டா செய்யலாம் என்று யோசிக்கிறேன். நீ என்ன சொல்லுற என்று கேட்க, ராசாத்தி வழக்கம்போல முடிவை எடுத்துவிட்டு பிறகு என்ன என்னட்ட கேக்கிறது என்று தனக்கும் மகனின் வாழ்வில் உரிமையுண்டு என்றெண்ணி செல்லமாய்க் கோபித்தாள். அவளுக்கும் அவரின் கருத்தில் விருப்பம் இருந்தது. எண்ணிப்பார்த்தபோது கண்கலங்கினாள் ராசாத்தி. இதையெல்லாம் கண்டுகளிக்க அவர் இல்லையே என்று வருந்தினாலும், அவரின் ஆசையை தன்னால் நிறைவேற்ற முடிந்ததையொட்டி சந்தோஷப்பட்டாள். கலியாணமும் இனிதே நடந்தது. முகுந்தன் வேண்டாமென்றொதுக்க எந்தப் பெண்ணும் முன்வராள். அவன் கண்ணே கதைபேசும். கதைக்கும்போது அசையும் உதடுகள் கவி பாடவே வைக்கும். முத்துப்பற்கள் தெரிய சிரிக்கும் சிரிப்புக்கு அழகு இயற்கையானதா அல்லது அந்த கருமைநிற கட்டான மீசையா என்பதே ஒரு குழப்பம். மொத்தத்தில் படித்த, பண்பான, அழகான ஒரு வாலிபன் தான் முகுந்தன். அவனின் மனைவியும் அவனுக்கு ஈடாகவே தென்பட்டாள். மகன்-மருமகள்-மாமி யாருக்கும் அறிமுகமே தேவையில்லை. எல்லோருமே ஒருவரையொருவர் நன்கறிந்தவர்கள். ராசாத்தி தான் வழக்கமாகச் செய்யும் பணிவிடைகளை செய்துவந்தாள். இருந்தாலும் மகனுக்குத்தன் மருமகள் செய்தால்தான் இன்பம் தரும் என்பதையும் புரிந்திருந்தாள். ஆனால் அவளாகச் செய்யும்வரை அமைதியாக இருந்தாள். சில மாதங்கள் கடந்தன. சிறுபிள்ளை, சிலசமயம் தெரியாமலிருக்கலாம் என்றெண்ணி, அவளுக்கு ஆர்வம் ஊட்டும் வகையில் தன் மகனுக்கு அந்த உணவு பிடிக்கும் என்றும், அதை உனக்குச் செய்யத் தெரிந்தால் செய்து கொடு என்றும் நண்பிபோலப்பேசுவாள். சபேர்னாவும் முகத்தில் எந்த சஞ்சலமும் காட்டிக் கொள்ளாமல் ஆமோதிப்பாள். இவ்வாறு ஆரம்பித்து, சில தினங்களின் பின்பு முகுந்தன் மிகவம் சோர்வாயும், சோகமாயும் இருந்தான். சேயின் மனதை தாயைவிட யாரால் உணரமுடியும். இருப்பினும் குடும்பம் என்றாகிவிட்டதென்றெண்ணி தனக்குள்ளேயே அடக்கிக்கொண்டாள். திடீரென்று ஒருநாள் நீங்க இன்னும் ஓம் சொல்லவில்லை. நான் எத்தனை நாளாகக் கேட்கிறேன். இண்டைக்கு முடிவுசொல்ல வேணும் என்று கத்திக்கூறிய சபேர்னாவின் குரல் அடுத்த அறையில் படுத்திருந்த ராசாத்தியின் காதில் விழுந்தது. அதைவிட நான் செத்துப்போகலாமென்று தளதளத்த குரலில் முகுந்தனிடமிருந்து பதில் வந்தது. ராசாத்திக்கோ தூக்கிவாரிப்போட்டது. எப்போதும் சிங்கக் குரல்போல் பேசுபவனுக்கு என்னாச்சு? அவள் எத்தனையோ கற்பனைகளைக் கட்டிக்கொண்டு, தான் கேட்டவையெல்லாம் பொய்யென்று தன்னையே தேற்றிக்கொண்டாள். இப்போதெல்லாம் தினமும் இரவென்றால் சபேர்னாவின் அதே சொற்பொழிவு ஆரம்பமாகும். ஆனால் முகுந்தன் எதுவும் பேசமாட்டான். அவன் மிகவும் நொந்து காணப்பட்டான்.

ஒருநாள் சபேர்னா கேட்டாள் மாமி நாங்க ஒவருநாளும் சண்டை போடுறம், நீங்க ஏன் என்று கேட்கவே மாட்டீங்களா? அது உங்கள் குடும்ப விவகாரம். ஏதும் உதவி வேணுமெண்டாக் கேளுங்கள். முடிந்தால் செய்யுறன் என்றாள் ராசாத்தி. நானும் வேலைக்குப் போகலாம் என்றெண்ணியுள்ளேன். அதனால.... என்று இழுத்தாள். ராசாத்தியோ அவளின் வார்த்தைக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். எனக்குத் தெரிந்த பிள்ளையின் அம்மா, அப்பாவும் இருக்கினம். கனதூரம் இல்லை. உதவி தேவைப்பட்டால் நாங்க வருவம். இப்பதான் இருபத்திநான்கு மணித்தியால ரேடியோ நூறு இருக்குது. பொழுதுபோக எடுத்து அலட்டலாம் என்று அடுக்கிக்கொண்டே போனாள். ராசாத்திக்கு என்னவென்று புரியவேயில்லை. அவளுக்கும் அனுபவம் குறைவு. தாயும், பிள்ளையும் என்றேயிருந்தும் பழகிவிட்டவள். எதைப்பற்றி சொல்லுற என்று தெளிவாகச் சொல்லுபிள்ளை என்று விசாரித்தாள் ராசாத்தி. அதுதான் நேர்சிங்கோம் (Nursing Home) அங்கபோய் பதிஞ்சா அவங்களே உங்களைப் பாப்பாங்கள். ஒரு வேலையும் செய்யத் தேவையில்லை. காசும் கவர்மண்ட் தரும். இவருக்கும் ஒரு செலவும் வராது. நீங்க லக்கி மாமி. சிலோனில இருந்திருந்தா இதெல்லாம் கிடைக்குமா? என்று தொடர்ந்தாள் சபேர்னா. பாவம் ராசாத்தி, நேர்சிங்கோமா? எல்லாரும் அங்கதானா போறது? கனக்க தமிழர்கள் இருக்கினமா ...? எப்பபோய், எப்ப திரும்பறது..? உங்களுக்கும் கஸ்டம் தானே. மாத்தி மாத்தி என்ன ஏத்தி இறக்க.... வேலையால வந்து.... எதுக்கும் வடிவா யோசித்து சொல்லு பிள்ளையென்று முடித்தாள் ராசாத்தி. ஓதோ முணுமுணுத்த சபேர்னா, நாங்க வந்து போறதா..? அது நீங்க புதுசா தங்கப்போற இடம். உங்கடவீடு. நீங்க வரச்சொன்னா வாறம். இல்லாட்டி அதுவும் தேவையில்லை என்று ஒரு சிமிட்டலுடன் சொன்னாள். ஒருசிலநிமிஷம் நிலைதடுமாறி அமர்ந்துவிட்டாள் ராசாத்தி. பின்பு தளதளத்த குரலில் தம்பி முகி என்ன சொன்னான் என்றாள். அவர் வாய் திறவார். ஆனால் என்விருப்பத்துக்குத் தடை சொல்ல மாட்டார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு. என்ன நான் உங்களை சிலோனுக்கா போகச் சொல்லுறன். இங்க பக்கத்தில இருக்கிற பிளேஸ் தானே என்று எத்தனையோ கூறினாள். ராசாத்தியோ எதையும் கேட்கும் மனநிலையிலில்லை.

எங்கிருந்து அவளுக்கு அமைதியாயிருக்கும் சுபாவம் வந்ததோ தெரியாது. பொறுமையாக இருந்தாள். உன் விருப்பப்படியே செய் புள்ள என்று அவள் முகம் நோக்கிச் சொன்னாள் ராசாத்தி. சபேர்னாவின் முகமோ அன்று மலர்ந்த தாமரைபோல் மலர்ந்து, சிவந்து, சந்தோஷத்தில் மிதந்தது. தான் மனம் நொந்தால், அது தன் மகனைப் பாதிக்குமென்றெண்ணி, வழமைக்கு மாறாக ஸ்ரீராமஜெயம் எழுதினாள் ராசாத்தி. முகுந்தனின் பதிலை எதிர்பாராமலேயே சபேர்னா எல்லா ஏற்பாடுகளையும் தன் தோழி சகானா மூலமாக முடித்துக் கொண்டாள். சகானாவின் பெற்றோரும் நேர்சிங்கோமில் தான் என்று அவளை அறிமுகம் வேறு செய்து வைத்தாள் ராசாத்திக்கு. ராசாத்தி பிரிந்துபோகும்நாள் நெருங்கவே, அவள் நடைப்பிணமாகத்திரியும் தன்மகனிடம் மனம்விட்டுப் பேசினாள். நேர்சிங் கோமிற்குப் போவதால், தனக்கு எந்த மனக் கஸ்டமுமில்லையென்று பல விளக்கங்கள் கூறினாள். அவனுடைய வாழ்க்கையில் ஈடுபாடாகவும், சந்தோஷமாகவும் இருக்க வேண்டிக்கொண்டாள். முகுந்தனோ, தாயின் மடியில் தலையை வைத்து தேம்பித் தேம்பி அழுதான். சபேர்னாவை அதட்டியோ, அடித்தோ தன் தாயை தன்னுடன் வைத்திருப்பது அவனுக்கு முடியாததல்ல. சபேர்னாவோ எதையும் சிந்திக்காமல் எடுத்தெறிந்து கதைக்க நடக்க பழகிக்கொண்டவள். கனடிய சட்டங்களையும், நாகரிக மோகங்களையும் மெய்சிலிர்க்கப் பேசுபவள். தான் கோபப்பட்டால் தன்னுடைய குடும்ப கௌரவத்திற்கு மாசுபட வைப்பாள் என்பதை நன்குணர்ந்திருந்தான். தான்விட்டுக்கொடுத்தே அவளைத் திருத்த வேண்டுமென்று நம்பினான். என்றாலும் அவள் இப்படி இராட்சசியாக நடந்து கொள்வான் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. தான் ஆடாவிட்டாலும், தன் தசையாடும் என்பதை பொய்யாக்கியே விட்டாள். முகுந்தனின் புலம்பலைக்கேட்டு ராசாத்தியும் அழுதேவிட்டாள். ஆனால் அவனைத் தட்டிக்கொடுத்து, தைரியமாய் இரு என்று ஆறுதல் கூறினாள் ராசாத்தி.

ராசாத்தியின் வாழ்க்கை நேர்சிங்கோமில் ஆரம்பமானது. ஆங்கிலம் ஒருசொல்லும் அறியாதவள். அனாதையாக ஒரு அறைக்குள் முடக்கப்பட்டாள். மூன்று வேளையும் உணவு உண்ணும்போது மட்டும் வாயைத் திறப்பாள். அதுவும் அவளைப்பார்க்கவென்று இருப்பவர்களின் கட்டாயத்திற்காகவே. தன் மனதில் இருப்பதைக் கொட்டித்தீர்க்க ஒரு வசந்தா கிடைப்பாளா என்று தவித்தாள். ஒவ்வொருவர் முகத்தையும் ஏங்கி, ஏறிட்டுப்பார்ப்பாள். சரியாக உணவு உண்ணாமல் எப் போதும் தனிமையிலிருந்து யோசித்துக்கொண்டிருப்பாள். எல்லோரும் அவளை டீப்பிறஸ்ட் வுமன் (depressed woan) என்று அடையாளம் வைத்தனர். தனிமையை தவிர்க்க அவளை கையெழுத்து இட்டபின்பு வெளியே போய்வர அனுமதித்தனர். சில தினங்களாக சிறிது தூரம் நடந்து ஒரு கோயிலைச் சென்றடைவாள். கோவில் முன்வாசலிலே நின்று ஒவ்வொருவர் முகத்தையும் நோக்கி புன்முறுவல் செய்தாள். யாராவது தன்னுடன் பேசமாட்டார்களா என்று துடித்தாள். இளவட்டங்களெல்லாம் இது யாரு லூசு, வாசலில் நின்று சிரிப்பு வேற என்று முணுமுணுத்துச் சென்றனர். வயதானவர்கள் எல்லோரும் அவசரம் அவசரமாக பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பின்னே வயதுக்கு மீறிய வேகத்துடன் கார்களை நோக்கி நடந்தனர். தினமும் இவ்வாறு ஏமாற்றத்துடன் திரும்பும் ராசாத்தி கணவனை நினைத்தே கரையலானாள். வசந்தாவின் நட்பை எண்ணியே ஏங்கினாள். ஒரு புனிதத்தாயின் எண்ணங்கள், கனவுகள், கற்பனைகளெல்லாம் நாலு சுவருக்குள்ளே அடக்கப்பட்டு கல்லறையாகிக் கொண்டிருந்தது. சபேர்னா அதிர்ச்சியில் அப்படியே அசையாமல் நின்றாள். ஏன் கதைக்காமல் இருக்கிற, கூப்பிட்டுக் குடு என்ற வயதானதொரு அம்மாவின் குரல்மட்டும் ரெலிபோன் வழியே வந்தது. சபேர்னாவின் அம்மா, விசாலாட்சிதான் அது. தங்கையின் திருமணம் நடந்தபின்புதான், தான் திருமணம் செய்வேன் என்று கூறி அதை நிரூபித்தவன் ஜெகன். சபோர்னாவின் மூத்த அண்ணன். இரண்டு திருமணமும் ஒருமாத வித்தியாசத்தில் நடந்தது. தாலிகட்டாவிடடாலும் பறவாயில்லை, திருமணம் நடக்க வேண்டுமென்று பெண்வீட்டார் ஆசைப்பட்டனர். விசாலாட்சியும் சம்மதித்து, கணவன் இல்லையென்ற குறைதெரியாமல் சிறப்பாகதிருமணம் நடத்தி வைத்தாள். ஆனால் அவள் எதிர்பார்த்ததிற்கு எதிர்மாறாக மருமகள் தன்வீட்டாரின் சொற்கேட்டு நடக்க ஆரம்பித்து விட்டாள். விசாலாட்சியும் நேர்சிங்கோமிலிருந்துதான் யாரோடையோ உதவியுடன் மகளுக்கு போன் பண்ணியிருந்தாள். தனிமையில், தமிழரேயில்லாத இடத்தில் என்னக் கொண்டு வந்து விட்டாச்சு. ராசாத்தியோட கதைச்சா, மனசுக்கு ஆறுதலா இருக்குமெண்டுதான் போன் பண்ணினான். அவளைக் கூப்பிட்டுக்குடு புள்ள என்று கூறியதுதான் சபேர்னாவின் அதிர்ச்சிக்குக் காரணம். வெட்கிப்போன சபேர்னா நடந்தவற்றை கூறினாள். விசாலாட்சி மகளை சபித்தேவிட்டாள். அவளுடன் பேசுவதையும், பார்ப்பதையும் அறவே துண்டித்தாள். பிறந்தவீட்டின் அன்பு இல்லாமலும், கணவனின் பாசம் இல்லாமலும் அவள் வேதனைப்பட்டாள். தன் தாயை நினைக்கும்போதெல்லாம், தன் மாமியாருக்கு செய்த கொடுமையையும் நினைவுகூர்ந்தாள். தான் செய்த பாவம்தான் தன் தாய்க்கு நடந்தவற்றுக்கும் காரணமென்று உணர்ந்தாள். தினமும் அதையெண்ணி வெம்பினாள். கடவுளிடமும் கருணைமனு ஒப்பித்தாள். முகுந்தனிடம் மன்றாடி, மாமியை அழைத்துவர சம்மதம் வாங்கினாள். ராசாதியும் எல்லாவற்றையும்மறந்து, சந்தோஷமாக அவர்களுடன் வந்து, விசாலாட்சியை வீட்டுக்கு அழைத்துவர முழுமூச்சாயச் செயற்பட்டு வெற்றி பெற்றாள். இரண்டு தாய்மாரும், இரண்டு வீட்டுக்கும் வழிகாட்டியாகச் செயற்பட்டனர்.

# வாழிய இலைக்கஞ்சி



காலம் காலமாய் பொன் விளைந்த பூமி
வாடிக்கிடக்கிங்கே சில ஆண்டுகளாய்
செல்வந்த தேசமிது
பட்டினியால் வாடித் தவிக்கிதிங்கே!

பாவப்பட்ட ஜென்மங்களாய்
எங்கள் தமிழினம் தவிக்கின்றது
காலமிது இருபத்தோராம் நூற்றாண்டை முன்னோக்கி
நாமிங்கே பல நூற்றாண்டு பின்னோக்கி!

வான் வெளி ஆய்வுகளும்
தொலை நோக்கிப் பார்வைகளும்
இன்ரநெற்றுடன் கணனிகளும் பல அங்கே
எழுத்தில் மட்டும் அறிந்தவராய் நாமிங்கே!

பசியும் பட்டினியும் சீரழிவுக் கோலங்களும்
நாளும் நடக்குதிங்கே எம்மிடத்தில்
அலுவலுக்காய் நடந்து போனவர் மூர்ச்சித்து
வீழ்ந்து போயினர் பட்டினியால் உண்மையிது

வேலையில்லைத் தொழிலில்லை பெற்றவர்க்கு
சம்பளம் தன்னும் கூடவில்லை
பசித்த வயிற்றிற்கிங்கே ஒரு வாய்க்குக் கஞ்சியில்லை
தனி ஒருவனுக்குணவில்லையெனில் ஜெகத்தை அழித்திடு என்றான் அன்றவன்

சின்னஞ்சிறுகுடிசைகள் அடுக்கடுக்காய் அடிப்படை வசதியின்றி
பள்ளிக்குப் போகும் பாலகர் இங்கே
தவியாய் தவித்திங்கே அழிந்திடுவார் பசியாலே
போவதென்ன பள்ளி போயென்ன அங்கே?

எதியோப்பியாவின் சிறார்கள் போலிங்கு வன்னியின் பாலகர்
பசியுடன் படிக்கவா போகின்றார்!
மயக்கமுடன் துவண்டிடுவார் எங்கள் மழலைகள்
முன்னிரவு காலையதில் பட்டினியாம் – பரிதாபம்!

கதைப்பதற்கும் சக்தியின்றி வாடுகையில்
பள்ளிப்பாலகர்க்கு வந்ததிங்கு நற்செய்தி
சத்துணவாம் இலைக்கஞ்சி வந்ததிங்கே
மகிழ்வுடனே வந்திட்டார் எம் மழலைகள்

பட்டாம் பூச்சிக் கூட்டங்களாய்
மழலைகள் பறந்தது பள்ளிக்கு – இல்லை
இனிக்கஞ்சி என்றவர்க்கு இனித்தது
இலைக்கஞ்சி, பருகிநின்றார் புதுத்தென்புடனே!

காபோவைதரேற்றுடன் புரதமும் கசந்திடாமல்
விற்றமின்களும், காலம் முழுவதும் கவலையின்றி வாழ
சத்துணவாம் இலைக்கஞ்சி அளித்ததிங்கே
பற்றுடனே பள்ளிக்கு வந்திட்டார் பாலகரும்

முன்னோர்கள் பலமுடனே வாழ்வதற்கு பச்சிலையும் காரணமாம்
நாகரிகம் இல்லையென ஒதுக்கிவிட்டார் புதியவர்கள்
புதுமைப் பொலிவுடனே மீண்டுமிங்கே பச்சிலைகள்
பழமை மாறாமல் புகுந்ததிங்கே கஞ்சியுடன்

பொன்னாங்காணி முருங்கையுடன் அகத்தியிலை
வயலோரம் செலவின்றி பெற்றிடும் வல்லாரை
என்னைப்பார் எனப்படர்ந்திருக்கும் முசுட்டையிலை
கலந்திங்கே வழங்கிவந்தார் சத்துணவாம் இலைக்கஞ்சி

ஜீவாகாரமாய் ஜீவனுக்கு ஆதரவாய்
வந்ததிங்கே இலைக்கஞ்சி நான்முந்தி
நீ முந்தி எனவருந்தி சத்துக்கள் பலபெற்று மழலைகள் வாழ
வழிசமைத்த இலைக்கஞ்சியே வாழ்க நீ!
உன் பணி தொடரட்டும்!
நம் சிறார்கள் வாழட்டும்!

ந. குணேந்திரராஜா
ஆசிரியர்
கிளி/உருத்திரபுரம் ம.வி.



# குளத்தடி மரநிழல்

அவளும் நானும் அருகருகே இருந்தோம். அப்போதுகூட அவள் அங்கலாய்ப்பு எனக்குத் தெரியவில்லை. அரிவரியில் ஒன்றாய்ப் படித்தோம். நினைவிருக்கிறதா என்ற போதுதான் அண்ணார்ந்தேன். அழகாகத்தான் இருந்தாள். அரிவரியில் பார்த்ததுபோல்! மனதுக்குள் ஒரு மௌனநடை போட்டேன். யாரிவள் என்று. சிந்தித்தபோதுதான் தெரிந்தது இவள் சந்திவிட்டுச் சுந்தரியக்காவின் மகள் என்று. பழைய நினைவுப்புத்தகம் புரழத் தொடங்கியது.

மாங்காய்புடுங்குவதற்காய் நானும் இந்துவும் மரம் ஏறும்போது வாத்தியார் நாரிமுறிப்பேன் இறங்கவும் என்றதும். குண்டுசியில் கொழுக்கி செய்து கூழாவடி வண்டில் நின்றுமீன் பித்ததுவும், பள்ளிக்குச் செல்லாமல் படம்பார்க்கத் திரிந்துவிட்டு கள்ளிமுள் காலில் குற்றியதாய் கதைகட்டியதும் பற்றிமாபாடசாலையில் பட்டிமன்ற வேளையில் வாத்தி கட்டியவேட்டி கழன்றகதை சொல்லி நாலுகம்பு என் முதுகில் நல்லதழும்பாச்சு. (மீண்டும் என் கண்ணுக்குள்அவள்)

ஆறாம் வாய்க்கால் அறுவடைக்கு சோளம்சோறு பொங்கச்சொன்ன சுந்தரியக்காவின் மகள் சிந்தியாவா இவள் என்றபோது இனம்தெரியாத தீரிப்பு எனக்குள்.

சின்னஞ்சிறுவராக இருவரும் மணல்வீடு கட்டியது என் நினைவில் எங்கே போச்சு. ஒகோ..... வெளிநாட்டுக் கலாச்சாரத்தில் வெளிறிப்போனது இவள் மட்டுமல்ல அந்த சீர் அரவணைத்துவந்த பண்பாடும் தான்!
தேசங்கள் மாறலாம் தினசரி எம் தேடல்கள் மாறலாம்.
மாறும் எமைவிட்டு அந்த மண்வாசனைக் கோலங்கள்.

பாசங்களும் பழங்கள்ளும் பழஞ்சோற்ரு உறுண்டையும் இப்போ வந்த புதுநேசங்கள் தந்திடுமா?
கருவாடு சுட்டு-வயற் களமேட்டில் வத்து பலவுறவோடு சேர்ந்த விருந்தோம்பல் பண்பாடு இப்போ திசைமாறிப்போச்சு வெளிநாடுதனில் பொட்டும் பிறையும் புதுவித பட்டுப்புடவையும் பாவாடைத் தாவணியும் இங்கேவிட்டுப்போன பாரம்பரியம் நைய்க்கும் றிம்பிள்டனும் தான் நாகரீகமாய்ப்போச்சு.

இவளும் அப்படியே! இஞ்சியளவு துண்டில் வஞ்சிதனை இளுத்துக்கட்டியிருந்தாள் - உடை மாற்றப் பஞ்சியோயென்னவோ.

குஞ்சியப்பு கொட்டிலிலே கூழ் குடித்து-சாக்குக் கட்டிலிலே படுத்தசுகமிங்கு பஞ்சுமெத்தயிலே வந்திடுமா?
பாமடிச்சந்தியிலே ஓவசியர் சந்தையிலே வைத்து சாராயம் குடித்ததென - ஒரு தீராயம் கட்டியதால் நான் நாராகக் கிழிபட்டது.
நினைவாற்றிலே ஓடியது

நேருஜி தர்மநாயகம் (சுரேஸ்)

# கனகாம்பிகை நகை மாளிகை

சகல ஓடர் களும் திருத்த வேலைகளும் விசேட
விலைச் சலுகையில் செய்து கொடுக்கப்படும்.

சிங்கப்பூர் புதிய டிசைன் நகைகள் அனைத்தும்
நகரில் வேறு எங்கும் பெறமுடியாத மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
குறித்த நேரத்தில் உங்கள் எண்ணங்களுக்கு ஏற்றவாறு
நகைகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.



- 22கரட் அசல் தங்க ஆபரணங்கள்
- வைரக்கற்கள் (பவளம் முத்து)
- மாணிக்கக் கற்கள்
- காது குத்துதல்
- Lucky Stones
- நவரத்தின மோதிரங்கள்
- பரிசுப் பொருட்கள்
- தாலிக்கொடி
- Birth Stones
- Finest Quality 22K Gold and Diamond Jewellers

## *Kanagaambikai Gold House*

**3160 Eglinton Ave. East, Unit 3, Scarborough, ON. MIJ 2H3**

**Tel: (416) 269-7198**



# அன்பு ரெக்ஸ்

சிறுவர் முதல் பெரியோர் வரை நவநாகரிக,
விதம் விதமான ரெடிமேட் ஆடைத்
தேர்வுகளை ஒரே இடத்தில் பெற்றுக்
கொள்ளவும், அத்துடன் சகல விதமான
சாறி வகைகள், சாறி பிளவுஸ் மற்றும்
அலங்கார ஆடம்பரப் பொருட்கள்
யாவற்றிற்கும் நாட வேண்டிய இடம்



# ANBU TEX

**3246 EGLINTON AVENUE EAST, SCARBOROUGH**
**(Eglinton & Markham)**

**TEL: (416) 269-5684 FAX: (416) 269-0887**

# பொங்கியெழுவோம் புதுவழி சமைப்போம்

முழுமதி நிலவாம் இத்தினத்திலேயே
முழு அவலங்களையும் கூறிவிடுகிறேன்
இடப்பெயர்வால் நாம் பட்ட துன்பமும்
இனத்தைப் பிரிந்து ஏங்கிய ஏக்கமும்
கவி புனைந்தே கூறிவிடுகிறேன்


வண்டிற்கு மலர் இடம் கொடுக்க
பனிக்கு இலை இடம் கொடுக்க
மழைக்கு நிலம் இடம் கொடுக்க
மனிதனுக்கு யாருமில்லையே இடம்கொடுக்க
இவையெல்லாம் இடப்பெயர்வால் தானே

அண்மையில் கூட, அறிந்தோம் ஓர்செய்தி
ஐந்து பிள்ளைகளும் அவர் தம் தந்தையும்
இடம்பெயர்ந்து செல்கையில், நடுவில் காட்டிடையே
மூன்று நாள் உணவின்றி மூர்ச்சையாயினர்
இவையெல்லாம் நடந்தது எதனால்?
சொந்தமண் இழந்து போனதாற் தானே!

இவைமட்டுமல்ல இன்னும் பல அவலங்கள்
பள்ளிச்சீருடையிலே பாலியல் வல்லுறவு
வெளியில் செல்வோர் வீடு திரும்புவதில்லை
எல்லாம் இங்கே இன்னும் தொடர்கிறது

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
ஒற்றுமையாக ஒருங்கே சேர்ந்து
தேடிக் கண்டடைவோம் – விடிவை
அல்லது போனால் அகதி வாழ்வே,

செல்வி பிரேமிளா ஆறுமுகம்
தரம் 13 கலைப்பிரிவு
கிளி / உருத்திரபுரம் ம.வி




# A.B.C
## DRIVING SCHOOL

# TEL: (416) 678-1687

தொடர்புகளுக்கு:
தவபாலன் நடராஜா (தவா)

WE SERVING IN ETOBICOKE, NORTH YORK, REXDALE

## Special! Special !!

**10 HOURS IN CAR LESSONS**
**+ G1 ROAD TEST**

**ONLY**
# $239

IN CAR
LESSON
60 MINUTE
# $20

5 LESSONS
AND ROAD
TEST G1
ONLY
# $139

**WE SPECIALIZE IN BOOKING G1, G2 ROAD REST**
**FREE PICK -UP AND DROP OFF**

# உருத்திரபுர வரலாறு

செல்வி துசிதா பத்மநாதன்

உருத்திரபுரம் ஓர் அழகிய கிராமமாகும். இது தமிழீழத்தில் வன்னிப்பிரதேசம் என்றழைக்கப்படும் பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைத்துள்ளது. உருத்திரபுரத்தின் வரலாற்றை நாம் முழுமையாக அறிய வேண்டுமேயானால் ஈழத்தின் வரலாற்றை தெரிந்து கொள்வதன் மூலமே அறிந்து கொள்ளலாம்.

பண்டைய ஈழத்தில் திராவிட இனத்தைச் சேர்ந்த இயக்கர், நாகர் எனும் இரு இன மக்களே வாழ்ந்து வந்துள்ளனர் என்றும், பின்னாளில், இயக்கர் சிங்களவர் என்றும், நாக இனத்தவர் தமிழர் என்றும் இனங்கொள்ளப்பட்டது என ஈழ வரலாற்றை அறியத் துணைபுரிகின்ற சான்றுகள் நிறுவியுள்ளன.

பண்டைக்காலத்தில் இலங்கையின் வடபகுதியில் இருந்த அரசானது நாகதீபம்(யாழ்பாண இராட்சியம்) என்றழைக்கப்பட்டு வந்துள்ளது. நாகதீப அரசானது பூநகரி(நல்லூர்), கந்தரோடை, சிங்கைநகர், நல்லூர் ஆகிய இடங்களிற் காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டு வந்தது, யாழ் அரசுக்குக் கீழ்ப்பட்டு வன்னிமைகள் (சிற்றரசுகள்) இருந்துள்ளன.

பண்டைய காலத்தில் இப்பிரதேசமானது, வன்னி என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளது. வன்னி என்றால் வெப்பம், சூடு, எனப் பல பொருள்கள் உள. ஈழத்தில் வெப்பமான பிரதேசதம் வன்னி என்றழைக்கப்பட்டது. அப்பிரதேசத்தை ஆண்ட சிற்றசுகள் வன்னிமைகள் என்றழைக்கப்பட்டது. தமிழீழத்தில் 29 வன்னிமைகள் இருந்தன. இவ்வன்னிமைகள் யாதும் யாழரசுக்குக் கீழ்ப்பட்டே இயங்கி வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்நாளில் வன்னிப்பிரதேசம், பெரும் நகராகவும், நாகரிகமடைந்த மக்களைக் கொண்ட நகராகவும், இப்பிரதேசம் நீர்பாசன நாகரிகத்தில் உலகிலேயே அந்நாளில் சிறந்து விளங்கியது. அத்துடன் பலம் பொருந்திய படைகளைக் கொண்ட அரசாகவுமே இருந்து வந்துள்ளமையைச் சிங்கள வரலாற்று நூலான மகாவம்சம் மற்றும் வெளிநாட்டார் குறிப்புகள் மூலமிருந்தும் அறிய முடிகிறது. கி.மு 1ஆம் நூற்றாண்டில் வன்னியில் "500 கிராமங்களில் 5 இலட்சம் மக்கள் வசித்தனர்" என பெரிப்ளுஸ் என்னும் கிரேக்கக் கடற் பயணிகளின் குறிப்பிலிருந்து அறிய முடிகிறது. கோட்டையரசு, யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயர் கைகளில் வீழ்ந்த பின்னும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரைக்கும் பண்டாரவன்னியனின் பிரதேசம் வீழ்ச்சியுறாமலே இருந்தது. இறுதி வரைக்கும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயருடன் போராடி அவர்களைப் பல முறைகள் தோக்கடிக்க வைத்த பெருமை வன்னி மண்ணுக்கே உரியது. உலகிலேயே இறுதித் தமிழ் மன்னன் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் ஆவான். இது தமிழர் வரலாற்றில் முக்கிய இடமாகும். இவைகள் யாவும் வன்னிமைகளின் பலத்தையும், அவர்களின் சுயாட்சியையும் வெளிப்படுத்துகின்றது.

அப்படியானால், இன்றைய வன்னிப்பிரதேசத்தில் பெரும்பகுதி காடாக இருப்பதன் காரணம் என்ன? என்ற கேள்வி பலருக்கும் எழுந்திருக்கலாம். இன்று வன்னிப்பிரதேசத்தில் உள்ள காடுகள் யாவும் காலம் காலமாக இருந்தவையல்ல. அக்காடுகளில் உள்ள பெரும்பான்மையான மரங்கள் கிட்டத்தட்ட நாநூறு ஆண்டுகள் பழமை பொருந்தியனவாக உள்ளதைக் காணமுடிகிறது. நானூறு ஆண்டுகளுக்கு முன் பெரும் நகராகவே விளங்கியுள்ளது. வன்னிப்பிரதேசத்தில் காலம் காலமாக அந்நியப்படையெடுப்புகளாலும், இலங்கைத் தீவில் இருந்த அரசுகளுக்கிடையில் ஏற்பட்ட பூசல்களாலும் தொடர்ந்து போர் நடந்து வந்துள்ளமையை ஈழவரலாறு கூறுகிறது. இன்றுபோல் அன்றும் போர் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து சென்றமையால் மக்கள் குடியிருந்த இடங்கள் யாவும் காடாகியது. இதை வரலாற்றுச் சான்றுகளான பல நூல்களும், அகழ்வாராய்வுகளின் போது கிடைக்கப்பெற்ற கட்டிடச் சிதைவுகளும் ஆதாரங்களாகக் காட்டுகின்றன.

பதினைந்தாம் நூற்றாண்டில், நாகதீப அரசான பரராசசேகரனார் அரசபடிக்கட்டில் இருந்த வேளையில் அவரின் பட்டத்து இராணிக்குப் பிறக்காத மகனான சங்கிலி (1 ஆம் சங்கிலி) பட்டத்து இராணிக்குப் பிறந்த மூன்று புத்திரர்களில் இருவரைக் கொலை செய்துவிட்டு அரச படிக்கட்டில் ஏறினான். சங்கிலியின் கொடூரமான செயல்களைக் கண்ட பரராசசேகரனார் வன்னிக்குச் சென்று ஒழித்திருந்தார் என்றும், அங்கு அவர் ஓர் சிவன் கோவிலைக்கட்டி வழிபட்டுவந்தார் என்றும், அக்கோயில் உருத்திரபுரீச்சுவரர் என்று அழைக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது. அதனாலேயே அக்கிராம் பின்னாளில் உருத்திரபுரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்ததாகவும் கருதுவர்.

ஐரோப்பியர் வருகையின் பின் சிதறடிக்கப்பட்டுக் காடாக இருந்த உருத்திரபுரத்தில் 1948 இன் பின் அதாவது இலங்கை சுதந்திரத்தின் பின், இலங்கை அரசால் மீண்டும் குடியேற்றங்கள் செய்யப்பட்டன.

இக்குடியேற்றத்தின் போது, ஒவ்வொருவருக்கும் வீடும், வயற் காணியும் வழங்கப்பட்டது. இத்திட்டம் குடியேற்றத் திட்டம் எனப்பட்டது.

இக்கிராமம் "வாய்க்கால்" (divison) என்ற பிரிபுகளில் பிரிக்கப்பட்டுள்ளது. உருத்திரபுரம் ஒரு கூட்டுக் கிராமமாகும். ஒரு கிராமத்தில் பலவூர் மக்கள் உயர்வு தாழ்வின்றிக் கூட்டுக் குடும்பமாக வாழும் ஒரு கிராமமாகும்.



# லூர்ட்ஸ்

## EAST & WEST INDIAN STORE

✸ அன்பான உபசரிப்பு ✸ துரிதமான சேவை
✸ அத்தனையும் தரம் மிகுந்த பொருட்கள்

**IMPORTERS, DISTRIBUTERS & RETAILERS OF**

- East & West Indian Groceries
- Fresh Fish & Meat
- Fresh Vegetables & Fruits
- Frozen Food



- அன்றாட தேவைகளுக்கான பலசரக்குப் பொருட்களும்
- இலங்கை, இந்திய, மேற்கிந்திய உணவுப் பொருட்கள்
- உடன் மீன், இறைச்சி வகைகள், உடன் பழ வகைகள், குளிரூட்டப்பட்ட உணவுப் பொருட்கள்
- இன்னும் பல பல.....

போதிய வாகனத் தரிப்பு வசதிகள் உண்டு

# LOURDES

**195-199 Markham Road, Scarborough, ON. M1J 3C3**

**TEL: (416) 266-5025**

# நீண்டதொரு வாழ்க்கைப் பயணமும் நெஞ்சைவிட்டகலா நினைவுகளும்

அ. கணபதிப்பிள்ளை B.A. (Hons). M.A

சொந்த மண்ணைவிட்டு எத்தனையோ இனிய நினைவுகளைத் தாங்கிக் கொண்டு வந்துசேர்ந்த குடியேற்ற வாசிகள் தான் உருத்திரபுரத்தின் குடியேற்ற வாசிகள். இலங்கையின் வடமாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட குடியானவர்களே அதிக அளவில் உருத்திரபுரத்துக்கு வந்தார்கள். அதேவேளை உருத்திரபுரம் வீடமைப்புத்திட்டத்தில் தொழிலாளி களாயிருந்தவர்களும் வீடுகளுக்கு விண்ணப்பித் திருந்ததனால் அத்திட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட குடியானவரில் சில சிங்களவர்களும் இடம் பெற்றிருந் தனர். யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சில கட்டிடது தொழிலாளர்களுக்கும் வீடுகள் கிடைக்கப்பெற்றன.

1949ம் ஆண்டில் முதன்முதலில் பத்தாம் வாய்க்கால் வீடுகளே குடியேற்ற வாசிகளுக்கு வழங்கப்பட்டன. அதன்பின்பாக 1952ம் ஆண்டில் 8ம் வாய்க்காலும் உருத்திரபுரம் குடிமத்திப்பகுதியும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

உருத்திரபுரத்தில் ஆரம்பகுடியேற்றவாசிகளாக வந்து சேர்ந்த இளைஞர்களை நேர்காணலின் மூலம் பெறப்பட்ட தரவுகளை ஆதாரமாகக் கொண்டு இந்த நினைவுகள் வெளிவருகின்றன. இவையாவும் நேர்காணலின் தொகுப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

### காணித்துண்டுகளும் குடியேற்றவாசிகளும்

உருத்திரபுரம் குடியேற்றவாசிகளுக்கு 7ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. அதில் 4ஏக்கர் வயல்நிலமும் 3ஏக்கர் மேட்டுநிலமுமாகும். உருத்திரபுரம் குடியேற்றத்திட்டம் தொடங்கப்படுவதற்கு முன்பாகக் கணேசபுரம் குடியேற்றத் திட்டம் தொடங்கப்பட்டிருந்தது. அத்திட்டத்தில் 5 ஏக்கர் வயல்நிலமும் 2 ஏக்கர் மேட்டுநிலமும் வழங்கியிருந்தனர்.

2ஏக்கர் மேட்டுநிலத்தில் தென்னை பழமரவகைகள் என்பவற்றினை ஒன்றாக நட்டதன் காரணமாக தோட்டம் செய்வதற்கு என நிலம் இல்லாமை அவதானிக்கப்பட்டது. எனவே அடுத்ததாக ஏற்படுத்தப்பட்ட உருத்திரபுரத்தில் 3 ஏக்கர் மேட்டுநிலம் வழங்கப்பட்டது. இதில் வீடு, பழமரவகை 1 ஏக்கரிலும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 54தென்னம்பிள்ளைகள் 1 ஏக்கரிலும் நடப்பட்டதுபோக மிகுதி 1ஏக்கர் தோட்டத்திற்கு என ஒதுக்கப்பட்டிருந்தது. உருத்திரபுரம் தொடங்கப்பட்டபொழுது வடக்குப் பகுதியினை வீட்டுநிலமாகவும் தெற்குப் பகுதியினை வயல்நிலமாகவும் மாற்றுகின்றதொரு அபிப்பிராயம் திட்டமிடலாளர்களிடையே இருந்தது என்றும் அடர்ந்த காடான தெற்குப்பகுதி கூடிய பசளையுடைய நிலமாகவும் உப்புச்செறிவு குறைந்த நிலமாகவும் இருக்கும் எனவும் கருதித்திட்டங்கள் செய்யப்பட்டன. ஆயினும் திட்டமிட்ட வருடத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் விளைவாக வடக்குப்பகுதி வெள்ளத்துள் மூடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்ததனால் அத்திட்டம் கைவிடப்பட்டு இன்று பிரதான வாய்க்காலின் தெற்குப்பகுதி மேட்டுநிலப்பயிர்ச்செய்கைக்கும் வீடமைப்புக்கும் எனவும் வடக்குப் பகுதி வயல்நிலத்துக்கும் எனவும் ஒதுக்கப்பட்டது.

முன்னர் திட்டமிட்டபடி பாமடிக்கு வடக்காகவும் 9ம் வாய்க்காலின் முன்பகுதியிலும் இருந்த வீடுகளும் மேட்டு நிலங்களும் வயல் நிலங்களுக்கு அருகாக அமைந்திருந்தன. அவற்றுள் வயல்களுக்கு அருகாக அமைந்த மேட்டு நிலங்களுக்கு வயல்களிலிருந்து நீர்ப்பாய்ச்சும் வசதியும் சாத்தியமாயிருந்தாலும் அவ்விதம் வழங்கப்படவில்லை. அதேபோல் சிவன்கோவில் வீதியின் வடக்காக இருந்த வயல்நிலங்களுக்கு வடக்காகவும் வீடுகளுடன் அமைந்த மேட்டுநிலங்கள் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

பிரதான வாய்க்காலுக்கு வடக்குப்புறமாக இருந்த மேட்டுநிலங்கள் வயல்நிலங்களை அருகாகவோ மிக அண்மையாகவோ கொண்டிருந்தன. அவற்றைச் சாவகச்சேரியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட குடியேற்றவாசிகளுக்கு வழங்கப்பட்டமை குறித்துப் பலரிடையே எதிர்ப்புகள் நிலவின. இது குமாரசாமி என்பவர் தனது அரசியற் பலத்தினைத்தக்கவைக்க எடுத்த முயற்சி எனச் சிலர் குறிப்பிடுவர். 9ம் வாய்க்காலும் அதனையண்டியபகுதிகளிலும் உள்ளநிலங்கள் யாழ்ப்பாண உபநகரக்குடியானவர் களுக்கு வழங்கப்பட்டிருந்தது என்றும் குறிப்பிடுவர்.

குடியானவர் குடியேற்றப்பட்ட பொழுது ஒத்துழைப்பு, கூட்டுறவு, தனிமையினை உணராமை போன்ற காரணங்களைக் கருத்திலெடுத்து ஒரு (D.R.O.) டி,ஆர்.ஓ பகுதியிலிருந்து குடியேறியவர்களை ஒன்றாகக் குடியேற்றும் வழக்கத்தினைக் கடைப்பிடித்தனர். இதனால் வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி, நெடுந்தீவு ஆகிய பகுதிகளிலிருந்து குடியேறியோர் ஒன்றாகவும் குடியமர்த்தப்பட்டனர். மறுபுறமாக யாழ்ப்பாணத் திலிருந்து குடியேறியவர்களில் சிலர் தீவுப்பகுதிகளைச் சேர்ந்தவர்களாயுமிருந்தனர். அத்துடன் சிலர் பொதுவாக கலந்தும் குடியேற்றப்பட்டனர். 1958ம் ஆண்டு இனக்கலவரம்வரை உருத்திரபுரத்திலிருந்த சிங்களக் கட்டிடத் தொழிலாளர் குடியேற்றவாசிகள் குடும்பத்தினர் இனக்கலவரத்தின் விளைவாகக் குடிபெயர்ந்துவிட்டனர். அக்காணிகள் பின்னர் வேறுசிலருக்கு வழங்கப்பட்டன.

காணிக் கச்சேரிமுறையிற் பெரிய குடும்ப அளவினை உடையோர் விவசாயம் செய்யும் ஆற்றல் உள்ளவர்களும் விவசாயத்திற்கான ஆர்வம் உள்ளவர்களும் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆரம்பகால அரச உதவிகள்

குடியேற்றத் திட்டங்களுக்கான திட்டங்கள் இடப்பட்டபொழுது குடியேற்றவாசிகளுக்கு வீடு அமைத்துக் கொடுப்பது என்றும் ஐந்து வீடுகளுக்கு ஒரு பொதுக்கிணறு அமைத்துக்கொடுப்பது என்பதும் காடுவெட்டி, கட்டைபிடுங்கி வயல்களைக் கொடுப்ப தென்பதும் வழக்கமாய்க் கொள்ளப்பட்டது.

அதேவேளை விவசாயம் செய்வதற்கு விதை நெல், வேலி, மாடு, கலப்பை போன்றனவும் இலவசமாக வழங்கப்பட்டதுடன் கூட்டாகச் சேர்ந்து கூட்டுறவு முறைமூலம் பயிர்ச்செய்கை நடவடிக்கை மேற்கொள்ளு வதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். ஒரு பயிர்ச்செய்கைமுடியும் வரையிலும் அவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் உணவுப்பொருட்களும் வழங்கப்பட்டிருந்தன.

இவ்வுணவுப் பொருட்களையோ பணத்தையோ இலவசமாகக் கொடுப்பதற்குப் பதிலாகச் சகாய வேலை என்ற முறையில் வழங்கினார்கள். சகாயவேலையில் கம்பிக்கட்டை வெட்டுதல் கட்டைபிடுங்குதல் போன்றன இடம்பெற்றன. வயற்காணியிற் கட்டை வெட்டப்படும் பொழுதிற் கட்டைகளை ஆணிவேருடன் பலர் வெட்டிவிடுவதற்குப்பதில் மரத்தை நிலமட்டத்துடன் தறித்துவிடுவார்கள். இதற்காக வயற்காணிகளைக் காணிச்சொந்தக்காரர்களுக்குப் பிரித்துக்கொடுத்ததன் பின்னர் அவர்களையும் சகாய வேலைகளில் இணைந்து கட்டைகளைப் பிடுங்கி விட்டதால் அவரவர் தமது காணிகளில் வேலை ஒழுங்காக நடைபெறுவதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

மக்கள் உடனடியாக வந்து குடியேற வீடுகள் கட்டிமுடிக்கப்படாதவேளைகளில் வாடிகள் அமைத்து அதில் தங்க வைத்தனர். 8ம் பத்தாம் வாய்க்காலுக் கிடையிலிருந்த பாம் என்று கூறப்படும் வெளிப்பகுதியில் பலவாடிகள் அமைக்கப்பட்டிருந்தன. வீடுகள் கட்டி முடிக்கப்பட்டதும் படிப்படியாக மக்கள் குடியேற்றங்கள் இடம்பெற்றன.

குடியானவர்கள் பெரிய குடும்பம் உறவினர் நண்பர்களுடன் குடியேறியிருந்ததனால் கூட்டுறவு முறையில் வேலைகளைச் செய்தனர். அதுவுமன்றி தாங்கள் அடியேற்றப்பகுதியில் வந்து காணிகளைப் பெற்றுக்கொண்டதன் பின்பாக சில நண்பர்களையோ தொழிலாளர்களையோ சொந்தக் கிராமங்களிலிருந்து வரவழைத்து உதவிக்கு வைத்துக் கொண்டனர். அவர்களுக்கு நெல் போன்றன வழங்கப்பட்டிருந்தன. அதேவேளை பின்னர் ஆரம்பிக்கப்பட்ட வட்டக்கச்சி இராமநாதபுரம் முரசுமோட்டை அக்கராயன்குளம் அம்பலப் பெருமாள்குளம் போன்ற அயல் குடியேற்றத் திட்டங்களுக்கு அவர்கள் சென்று வாழக்கூடிய அனுபவத்தினையும் அவர்கள் பெற்றிருந்தனர்.

### விவசாய ஒழுங்கு

ஆரம்பகாலங்களில் விதைநெல் உழவுமாடு என்பவை வழங்கப்பட்டிருந்ததனால் விவசாயம் இலகுவானது போலத் தோன்றினாலும் யாழ்ப்பாணக்குடாநாட்டிலும் சரி தீவுப்பகுதியிலும் சரி இந்தளவு பெரிய நிலப்பரப்பிம் பயிர்ச்செய்கையிலீடுபட்டிராத விவசாயிகளே இங்கு குடியேறியதால் ஆரம்பகால விவசாயம் சிறந்த பலனைக் கொடுக்கவில்லை.

ஒரு காணியுட் பல புற்றுக்கள் இருந்தமையும் காணி சமனானதாயில்லாததாலும் ஒருபகுதியில் மாத்திரமே நீர்தேங்கியிருந்தது. நீர்தேங்காத மற்றப்பகுதிகளில் தொட்டாவாடி அதிகம் காணப்பட்டது. இது பரவி நீர்ப்பகுதிகளிலும் காணப்பட்டது. அதிகநீரினால் பயிர் அழிந்துவிடுவதும் பிட்டியான பகுதியில் தொட்டாவாடியின் தாக்கம் இருந்தமை யினாலும் பயிர்வளர்ச்சி கதிர் என்பன பாதிக்கப் பட்டிருந்தது. அருவி வெட்டும் பொழுது கதிர்களே பிடங்க வேண்டிய நிலையிருந்தது. இக்காரணங் களினால் மொத்த உற்பத்தித்திறன் ஏக்கருக்கு 5-6 புசல்களுக்குமேல் விளைவது மிகவும் அபூர்வமான தாகவே இருந்தது.

மேட்டுநிலங்களிலும்கூட தொட்டாச்சிணுங்கியின் தாக்கம் இருந்தது. மேட்டுநிலங்களில் வரகு, சாமை போன்ற சிறுதானியங்களில் சிலர் அக்கறை செலுத்தினர். மேட்டுநிலங்கள் குடும்பப்பண்ணைகளாக இருந்ததனால் அவற்றில் கிடைத்த விளைவே குடும்பத்தின் உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்யத்தக்கதாக அமைந்திருந்தது. உருத்திரபுரத்தின் தோட்டச் செய்கையில் சிறிய அளவிற் தான் குடியானவர் ஈடுபட்டனர். மரவள்ளி வத்தாளை போன்ற கிழங்குவகை கூடியபலனைக் கொடுத்திருந்தாலும் காட்டுப்பன்றியினால் அழிவு, வீட்டுமிருகங்களான ஆடு மாடுகளினால் ஏற்படுத்தப்படும் அழிவு என்பன முக்கியம் பெற்றது.

உருத்திரபுரத்தில் சிலர் உருளைக்கிழங்கு நிலக்கடலை போன்ற பரீட்சாத்தப் பயிர்வகைகளைச் செய்து பலன் பெற்றிருந்தனர்.

ஆரம்பகால மரக்கறித் தேவையினைச் சுண்டங்காய் வட்டுக்காய் என்பன பூர்த்திசெய்தன. "சுண்டங்காய் காப்பணம் சுமைகூலி முக்காற்பணம் என்று" சிலர் யாழ்ப்பாணத்திற்கும் சுண்டங்காய் பிடுங்கி ஏற்றுமதி செய்தனர்.

### கல்வி வளர்ச்சியும் பாடசாலைகளும்

உருத்திரபுரம் குடியேற்றத்திட்டம் தொடங்கப்பட்ட காலப்பகுதியில் 1950ல் உருத்திரபுரம் மகாவித்தியாலயம் தொடங்கப்பட்டது. போதிய உபகரணங்கள் தேவையான

அளவு ஆசிரியர்கள் இல்லாதநிலையில் பாடசாலைக்கு ஒரு அதிபர் பாடசாலையினைப் பொறுப்பேற்று நடாத்தவென வந்திருந்தார். இரவுநேரங்களில் மந்தைகளின் தரிப்பிடமாகவிருந்த இப்பாடசாலையில் பலபணிகள் செய்யவேண்டியிருந்தது. அப்பொழுது முதன்முதலில் மாணாக்கர்களாக இருந்தவர்களில் பாலசுந்தரம் ஆசிரியர் தம்பியையா அவர்களும் பின்னர் சிறியவர்களாக இருந்தவர்களும் ஆகும். கரவெட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை அதிபர் 15 நாட்கள் பள்ளிக்கூடத்தினை உருவாக்கம் செய்வதில் முக்கிய பங்கினை எடுத்துக்கொண்டார். அப்பொழுது மன்னார் மாவட்டத்தில் அதிபராயிருந்த வே. கதிரவேலு அவர்கள் உருத்திரபுரத்துக்கு மாற்றலாகி வருவதெனவும் உருத்திரபுர பாடசாலை அதிபர் மன்னாருக்கு மாற்றலாகிப் போவதெனவும் அறிவிப்பு விடப்பட்டிருந்தது. அதிபர் பாடசாலையினைவிட்டு மாற்றலாகிப்போகும் முன்பாக பாடசாலைப்பதிவேட்டில் "கறையான் புற்றெடுக்கப் பாம்பு வந்து குடிகொண்டதுபோல் புதிய தலைமையாசிரியரது வருகை அமைந்துவிட்டது என்று எழுதியிருந்தார்.

திரு. வே. கதிரவேலு ஆசிரியர் உருத்திரபுரம் வந்தபொழுது பல மாணவர்களை வலிந்து அழைக்க வேண்டி ஏற்பட்டது. பிள்ளைகளைப் படசாலைக்கு அனுப்பு வதனாற் குடும்பத்தில் ஒருவேலையாள் குறைகின்றார் என்ற கருத்துப் பலமாக இருந்ததனால் முதலாம் தலைமுறை இளைஞர்களிடையே கல்வி என்பது அவ்வளவு தூரம் அக்கறையுடன் இடம்பெற்றதாயிருக்க வில்லை. அதேநேரம் அப்பு அவர்கள் நெடுந்தீவு அனலைதீவு எழுவைதீவு ஆகியவற்றிற்குச் சொந்தமான வராயும், அவரது கல்விச் சிந்தனைகளினால் யாழ் மாவட்ட மக்களின் அபிமானத்தைப் பெற்றவராயிருந்த தனாலும் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தின் ஆரம்பகற்பித்தல் நடவடிக்கைகளிற் கவனம் செலுத்த முடிந்தது. இருப்பினும் பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பவிரும்பாத பெற்றோர் ஆசிரியர்களைக் குறை கூறத் தவறவில்லை. அக்காலத்தில் 14 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்பி வைக்கிறார்களா என்பதைப் பார்வையிட்டுப் பெற்றோரில் வழக்குப் போடுவது என (A/O) வரவுக் கங்காணிப்பாளர் ஒருவர் நியமிக்கப் பட்டிருந்தார்.

கிளிநொச்சியில் வாழ்ந்த பெருங்கமக்காரர்களும் அரசாங்க ஊழியர்களும் கொண்டதான கரைச்சிச் சைவவித்தியா அபிவிருத்திச்சங்கம் கிளிநொச்சியிலும் பாடசாலைகளை அமைக்க வேண்டும் என முயற்சியினை மேற்கொண்டது. இதனை நடைமுறைப் படுத்திய மூலகர்த்தா சின்னநல்லதம்பி என அழைக்கப்பட்ட கிளிநொச்சி வைத்தியசாலை மருந்து கலவையாளர் ஆவர். இவரே திருநெறிக்கழகத்தின்ஆரம்பகர்த்தாவும் ஆவர். பழைய கொலனியை மையமாகக் கொண்டு செந்திரேசா கலவன் பாடசாலை முன்னரே ஸ்தாபிக்கப் பட்டிருந்தது. அதேவேளை அதற்கு அருகாக ஒரு இந்துப்பாடசாலை அமைக்கவென காணிவாங்கப் பட்டிருந்தாலும் இரண்டு மதப்பாடசாலகளுக்கிடையிலான தூரம் இரண்டு மைல்களாக இருக்க வேண்டுமென்ற அப்போதைய அரசாங்க விதியின்பிரகாரம் அதனை மேற்குநோக்கி இடம்பெயர்ந்த வேண்டி ஏற்பட்டது.

திரு என். நல்லதம்பி, அ. சிவசுந்தரம், கே. குலசிங்கம் என்பவர் உட்பட 12 பேர் இணைந்தசபை தலைக்கு 1001ரூபாவினைப் போட்டுச் சபையினைப்பதிவு செய்தனர். அத்துடன் பாடசாலை அமைக்கவும் முயற்சித்தனர். அதற்குத் தேவையான தலைமையாசிரியர் உருத்திரபுரத் தினைச் சேர்ந்தவராயிருக்கும் ஒருவர் இருப்பது சிறப்பெனக் கருதினர். அப்பொழுது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையினை முடித்துவிட்டுத் திரும்பியிருந்த திரு. கா. நாகலிங்கம் என்பவரை அணுகினர். அவரும்தான் அரசாங்கத்தில் சேரவிண்ணப் பித்திருந்தாலும் சிலகாலம் தலைமையாசிரியராக இருப்பதென சம்மதித்ததன்பேரில் 6ம் வாய்க்கால் சந்திக்குக் கிழக்குப்புறமாக ஏ.வி குலசிங்கம் அவர்கள் காணியின் மூலையில் ஒரு கொட்டில் பாடசாலை அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு 3ம் வாய்க்கால் கணெசபுரம் 5ம்வாய்க்கால், 8ம் வாய்க்கால் 10ம் வாய்க்கால் 6ம் 7ம் வாய்க்கால் பகுதியிலிருந்த கமக்காரர்களின் பிள்ளைகள் வந்து கல்வி கற்கத் தொடங்கினர்.

இவ்வளர்ச்சியின் காரணமாக டாக்டர் கனகரத்தினம் அவர்களிடத்தில் விலைக்கு வாங்கப்பட்ட 2 ஏக்கர் நிலத்தில் பாடசாலைக்கான அத்திவாரம் போடப்பட்டது. அதேநேரம் 7ம்வாய்க்காலில் 55ஏக்கர் நிலத்தினை பாடசாலைக்கு வழங்க அரசு சம்மதம் தெரிவித்ததன் பேரில் அத்திவாரம் போடப்பட்டுக் கட்டிடம் கட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதனை எதிர்க்கும் ஒசிலர் இரவுவேளைகளில் கற்களை எறிந்து பயமுறுத்தினர். இதனால் குணம், மந்துவில் கந்தையா, தில்லையம்பலம் ஆகியோர் துவக்குகளுடன் காவல்புரிந்தனர்.

பாடசாலையினை அப்போதைய பிரதமர் கௌரவ கொத்தலாவலை வந்து திறந்து வைத்தார். சின்னக்கண்டு கடையும் அதற்கு எதிராக வந்தமைந்தது. ஜெயந்திநகர் தொடங்கப்பட்டபொழுது அதிபர் கா. நாகலிங்கம் ஆசிரியர்களான, இராசம்மா நடராஜா, ஞானலட்சுமி விசுவலிங்கம் ஆகியோருக்கு பாடசாலையின் அருகாக 1 ஏக்கர் வீதம் நிலம் வழங்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. அதேவேளை உருத்திரபுரத்தைச் சேர்ந்த இரண்டாம் தலைமுறை யினருக்கும் இப்பகுதிகளிற் காணிகள் வழங்கப் பட்டதனால் ஜெயந்திநகர் குட்டிஉருத்திரபுரமாகக் காட்சியளித்தது.

8ம் வாய்க்காலிற் பத்திமா பாடசாலை சாமி கமத்தினுள் தொடங்கப்பட்டிருந்தது. அதேவேளை

வெற்றுநிலமாயிருந்த பாம்பிரதேசத்திற் கன்னியாஸ் திரிமடமும் மாதாகோவிலும் உருவாக்கப்பட்டது. 8ம் 10ம் வாய்க்காலில் உள்ள கிறீஸ்தவப் பிள்ளைகளும் ஜெயந்திநகர் குடியேற்றத்தில் இருந்த கிறிஸ்தவப் பிள்ளைகளும் இந்த ஆரம்பப் பாடசாலையிற் கல்வி கற்கத் தொடங்கினர்.

பாடசாலைகள் வீடுகளுக்குத் தூரமாக இருந்ததாலும் பிள்ளைகள் நடந்தே பாடசாலைகளுக்குச் சென்றனர். தூரவிடங்களிலிருந்து வருபவர்கள் பின்னர் துவிச்சக்கர வண்டிகளைப் பயன்படுத்தலாயினர்.

## ஆரம்பகாலச் சமூகநிறுவனங்கள்

ஆரம்பகாலச் சமூகநிறுவனங்களில் வாசிகசாலைகளின் தோற்றம் முக்கியம் பெறுகின்றது. வாலிப அபிவிருத்திச்சங்கம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்திற்கு திரு. கா. நாகலிங்கம் க. ஐயாத்துரை க. அருளம்பலம் போன்ற 8பேர் ஆரம்பகர்த்தாக் களாயிருந்தனர். அச்சங்கத்துக்கான 1ஏக்கர் நிலம் அனுமதிப்பத்திரத்துடன் பெறப்பட்டு ஒரு கொட்டிலில் உருவாக்கப்பெற்றது. வீரகேசரி நிருபராகக் கடமை யாற்றிய திரு. நாகலிங்கம் அவர்கள் இலவசமாக இப்பத்திரிகையினை வாசிகசாலைக்குக் கொடுத்தார். அக்காலத்தில் சுந்தரம், ஐயாத்துரை போன்றோரும் மற்றய பத்திரிகைகளை தினந்தோறும் பெற்றுக் கொடுத்தனர்.

பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஐக்கியநாணயசங்கம் என்பன பல்வேறு வகையிலான விவசாய சேவைகளை மக்களுக்கு வழங்கியிருந்தன. பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் மக்கள் பங்குபற்றத் தொடங்கியதும் திரு. ச. கணபதிப்பிள்ளை, திருமதி குணநாயகி நாகலிங்கம் ஆகியோர் தலைவர்களாக இருந்தனர். ஐக்கியநாணயசங்கம் விவசாயிகளுக்குக் கடனுதவிகள் வழங்குவதில் முக்கியத்துவம் பெற்றது. பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தலைமை அலுவலகத்திலிருந்து சங்கக்கடைகளுக்குக் சாமான்கள் அனுப்பப்பட்டன. சங்கங்கடை 8ம், 10ம் வாய்க்காலுக்கு மத்தியில் ஒன்றும் 10ம் வாய்க்கால் பாமடியின் ஒன்றுமாக அமைந்திருந்தன. சங்கக்கடை மனேச்சர் வாடிக்கையாளர்களுடன் நெருங்கிய பழக்கத்தினைக் கொண்டிருந்ததனால் திருமணப் புறோக்கர்களாகவும் குடும்பங்களின் நன்மை தீமைகளில் பங்குபற்றுனர்களாகவும் இடம்பெற்றிருந்தனர். பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களூடாக நெல்விற்பனை செய்யப்படுவது வழக்கம். நெல் அளப்பதில் பறையில் ஒரு நெல் அல்லது இரு நெல் வைத்து வெட்டுவதனால் இலாபத்தினை முகாமையாளர் பெற்றனர். இத்துடன் சப்பியின் அளவு கூடவாயிருந்தால் திரும்பவும் தூற்றித்தரும்படி கேட்பதனால் தனியார்களுக்கு விற்பனை செய்யச் சிலவிவசாயிகள் விரும்பியிருந்தனர்.

நெல்லுக்கு முற்பணம் கொடுக்கும் தனியார் உருத்திரபுரத்தில் இருந்தனர். அறுவடைக்கு முன் ஏற்படும பணககஸ்டத்தினைப் பயன்படுத்தும் இச்சுரண்டலாளர்கள் உருத்திரபுரவாசிகளாக இருந்தாலும் கிளிநொச்சியின் மில் முதலாளிகளின் முகவர்களாகச் செயலாற்றினர். அரிவிவெட்டுக்கு கடன் வழங்கும்பொழுது நெல் புசல் 10 ரூபாவாகவும்பசளைக்கு வழங்கும்பொழுது 9 ரூபாவாகவும் முற்பணம் வழங்கினர். அதேநேரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற் புசல் 12 ரூபாவாக இருந்தது. நெல்லினைக் களத்துக்குப் பறையுடன் சென்று அளந்தெடுத்துக் கொண்டு செல்பவர்கள் இவர்கள். முடிவில் விவசாயி அரைவகிறனையும் கால்வகிறனையும் வண்டியில் ஏற்றிச்செல்லும் பரிதாபநிலைமை காணப்பட்டது.

விவசாயிகளின் செழிப்பினைப் பயன்படுத்தி விவாக அந்தியகாலச் சங்கங்கள் உருத்திரபுரத்தில் தமதுகைவரிசையினைக் காட்டின. ஒவ்வொரு விவசாயியும் தமது பிள்ளைகளின் திருமணம் தமது அந்தமக்காலத்துக்காகச் செலுத்தப்பட்ட கட்டுப்பணங்கள் ஆயிரக்கணக்கிற் கையாடப்பட்டுவிட்டதனையும் அத்தகைய சங்கங்கள் திவாலாகி முகவர்கள் தலைமறைவாகிவிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்

ஆரம்பகாலத்தில் பெரியபரந்தன் குஞ்சுப்பரந்தனூடாக வான்போக்குவரத்து இடம்பெற்றது. இதிற் தனியார் வாகனங்களாக செல்லையா என்பவரது வான் முதன்மைபெற்றது. இதன் ஓட்டுனராக இராமலிங்கம் என்பவரும் இருந்தார். அதேபோல் சங்கங்கள் நடாத்திய சங்கவான் 10ம்வாய்க்கால் 8ம்வாய்க்கால் வரை வந்தது. சாவகச்சேரி யாழ்ப்பாணம் போக்குவரத்துக்கு ஆரம்பகாலங்களில் வான்களே பயன்படுத்தப்பட்டன. கேரதீவுப்பாதை திறக்கப்பட்டிருந்ததனால் மாடு ஆடுபோன்றன கொண்டுவரப்படுவதற்கு இப்பாதை பயன்படுத்தப்பட்டது.

கொழும்புக்கு ரயிற் பிரயாணம் செய்பவர்களும் கொழும்பிலிருந்து வருபவர்களும் பரந்தன் புகையிரத நிலையத்துக்கு வந்து நடந்தோ வானிலோ வரவேண்டியிருந்தது. உருத்திரபுரத்துக்கு 2மணிக்கு வான் வந்து உடனடியாகத் திரும்பிப் போகும்.

செய்திகளைப் பெற்றுக்கொள்ளும் பத்திரிகைகளும் பரந்தன் வழியாகவே வந்தன. கிளிநொச்சி நகரம் வளர்ச்சியடையத் தொடங்கியதும் அதுவரையில் கால்நடையாகக் கிளிநொச்சிக்குச் சென்றவர்கள் வண்டில் கட்டிக் கொண்டு செல்லத் தொடங்கினர். கணேசபுரம் கண்டிவீதிச்சந்தியே பிரதான வர்த்தக மையமாக இருந்தது. கணேசபுரம் 6ம் வாய்க்கால் வீதியே பிரதான வண்டில் பாதையாக அமைந்திருந்தது. ஜெயந்திநகர் உருவாக்கம் பெற்றதும் ஜெயந்திநகரூடாகப் போக்குவரத்தும் இடம்பெற்றது. கரடிப்போக்கு உருத்திரபுரம் பாதையூடான போக்குவரத்து பஸ்வண்டி, ராக்டர் என்பன முக்கியத்துவம் பெற்றதன் பின்பாக

சிறப்பான இடத்தினைப் பெறத் தொடங்கியது.

உட்பாதைகள் அகலம் குறைவானவையாகவும் மழைகாலத்தில் மண்ணரிப்புக்குட்படுத்தப்பட்டும் நீர்தேங்கியும் புதையும் தன்மைபெற்றும் இருந்ததனால் உட்பாதைப் போக்குவரத்து தவிர்க்கப்பட்டது.

## சமூக உறவுகளும் உருத்திரபுரமக்களும்

உருத்திரபுரம் ஐந்து குறுக்குத்தெருக்களாகவும் சவச்சேரிக்குறுக்குத்தெரு என்றும், 8ம் வாய்க்கால் 4குறுக்குத்தெருக்களும் வாய்க்கால்கரைக்குறுக்குத் தெருவுமாக ஐந்து குறுக்குத்தெருக்களும் ஐந்து ஆறுவீடுகளுக்கு ஒன்றாக இடைக்குறுக்குத் தெருக்களும் காணப்பட்டன.

ஒரு குறுக்குத்தெருவில் உள்ளவர்களுக்குரிய வயல்கள் ஒன்றாக அருகருகாக அமைந்திருந்ததனால் வயலுக்குநீர்பாய்ச்சல் வயல்வேலை கூட்டுவயல் செய்கை என்பவற்றில் பங்குபற்றக்கூடியதாக இருந்தது. குறிப்பாக இது ஐந்து அல்லது 6 விவசாயக் குடியானவர்களும் கூட்டுறவுத்தன்மை கொண்டிருந்தனர். மறுபுறமாக முன்னாகவும் பின்னாகவும் அமைந்த வீடுகளுக்குரிய வயல்கள் வேறுஇடங்களில் அமைந்திருந்ததனால் மற்றவர்களுடனும் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. சந்தைக்குச் செல்லும் பொழுதும் வரும் பொழுதும் வண்டிகளிற் சாமான் ஏற்றுதல் போன்றவற்றினால் அவர்களிடையே உறவுகள் காணப்பட்டன.

பள்ளிச்சிறுவர்கள், ஆடுமாடு மேய்க்கும் சிறுவர்கள் ஒன்றாகச் சேர்ந்து விளையாடுவதும் மற்றவர் வீடுகளில் சாப்பிடுவதும் போன்ற அம்சங்கள் பின்னர் இணைவானதொரு ஐக்கிய உருத்திரபுரத்துக்கு வழிவகுத்தது என்றே சொல்லலாம்.

தொழில் கூட்டு அடிப்படையில் அமைந்ததினால் சாதி சமய வேறுபாடுகள் அவ்வளவாகப் பேணப்பட வில்லை ஆயினும் யாழ்ப்பாணத்துடனிருந்த இறுக்கமான தொடர்பு காரணமாக அடிப்படையில் மாற்றம் ஏற்படப் பின்நின்றன. பின்னர் ஏற்பட்ட சாதிமதக் கலப்புத் திருமணங்களை ஏற்றுக்கொள்ளுவதில் குடியானவர் சிறிது தயக்கத்தினைக் காட்டவே செய்தனர்.

ஓரளவு குடும்பநண்பர்களின் பிள்ளைகளிடையே திருமண உறவுகள் பலப்படுத்தப்பட்டன. காதல் திருமணங்களாகவோ ஒழுங்குபடுத்தப்பட்ட திருமணங்களாகவோ காணப்பட்டன. காணிகளை ஒரு பிள்ளைக்குச் சீதனமாகக் கொடுக்கும் முறை ஆரம்பத்திலிருந்து அப்படிக் கொடுத்தபின்னர் தாங்கள் தமது சொந்த ஊர்களுக்கத் திரும்பிச் சென்றுவிடப் பெரும்பாலான குடியேற்றவாசிகள் விரும்பியிருந்தாலும் அவ்விதம் அவர்களால் செய்ய முடியவில்லை. காரணம் அவர்களுக்குப் பல பிள்ளைகளிருந்தமையாகும். இதனால் கிராமஅபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ள காணிகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர். பின்னர் காணிகள் இரண்டாகப் பகிர்ந்து சீதனம் கொடுக்கப்பட்டது.

## அரசியலில் ஏற்பட்ட ஈடுபாடு

ஆரம்பகாலங்களில் சாவகச்சேரியைச் சேர்ந்த குமாரசாமி குடியேற்றத்திட்டத்தில் முக்கியம் பெற்றதனால் பாராளுமன்றத் தேர்தலில் அவருக்குப் போதிய வாய்ப்புக் கிடைத்தன. அக்காலத்தில் தராசு, வீடு, திறப்பு, சயிக்கிள் போன்ற சின்னங்கள் முக்கியம் பெற்றிருந்தன. சின்னங்களின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடவைத்தே வெற்றிகள் நிர்ணயிக்கப்பட்டன.

கிராமசபைத் தேர்தல்களில் திரு பிளாக்கர் பொன்னம்பலமும் திரு. கா. நாகலிங்கமும் போட்டியிட்டனர். எட்டாம் வாய்க்காலில் அதிகம் செல்வாக்கை பிளாக்கர் பெற்றிருந்தாலும் திரு. கா நாகலிங்கமே வெற்றிபெற்று கிராமசபைத் தலைவரானார். பிளாக்கர் பழைய கமக்காரனாக இருந்து சிறியதொரு சாம்ராஜ்யத்தினை வைத்திருந்தார். ஆயினும் அவரது மகன் உருத்திரபுரம் குடியேற்றவாசியாகவே மாறிவிட்டமை பெரியதொரு மாற்றத்தினை ஏற்படுத்தியிருந்தது.

## புதிய தொழில்நுட்பங்களின் வருகை

துலாமூலம் நீர் இறைத்தமைக்குப் பதிலாக நீரிறைப்பு யந்திரங்கள் பயன்படுத்தப்பட்டமை துலாமிதிப்பவரின் வேலையினை ஒருவாறாகக் குறைத்தது. மாடுகளைக் கொண்டு உழும்பொழுது 5அல்லது ஆறுசோடி மாடுகள் தேவையான தன்மையினை ஒரு உழவுயந்திரம் சிறிது நேரத்தில் முடித்துவிட்டது. மண்ணெண்ணெய் மெசினிலிருந்து டேவிட் பிறவுண், போர்குசன் புதியமொடல்கள், உருத்திரபுரத்தில் அறிமுகமாயின. அத்துடன் லான்ட்மாஸ்டர் என்ற இருசில்லு யந்திரங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

ஆரம்பகாலங்களில் றேடியோக்கள் வட்டவடிவினதாகவும் பெரிய பற்றறியில் இயங்குவதாயும் இருந்தது. பின்னர் குறுண்டிக் என்ற வகையான றேடியோக்கள் கிளிநொச்சி மணியம் ஸ்ரோரில் இறக்குமதி செய்யப்பட்டது. அவற்றில் மண்ணெண்ணெய் விளக்கில் மின்சக்தியைப் பெற்றுப்பாடவைக்கும் றேடியோக்கள் பயன்படுத்தப் பட்டன. ரான்ஸிஸ்டர்கள் பாவனைக்கு வந்ததன் பின்பாக எல்லா வீடுகளிலும் ரேடியோக்கள் முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டன. புதியதொழில்நுட்பங்களைத் தமக்கு இசைவாக கொள்ளும் பாங்கு இளையதலை முறையினரிடையே மிகவும்பரவலாக அவதானிக்கப் படுவதாக இருந்தது.

எமது கிராமத்தின் இந்த ஆரம்பகால நிகழ்வுகளை நான் இங்கு நிஜமாக்குவதற்கு தமது அனுபவத்தை என்னுடன் பகிர்ந்து கொண்டவர்கள்

கணேசு கைலாயநாதன்
சபாரத்தினம் நல்லையா
கார்த்திகேசு கணபதிப்பிள்ளை
கார்த்திகேசு நாகலிங்கம்

# மீண்டும் நான் ஊர் போக வேண்டும்

நினைவுப் பூக்கள் மனதினில பூக்க
வேதனைக் கோடுகள் வெம்பியழ வைக்க
பசுமை நினைவுகள் பாடாய் படுத்த
ஊரின் நினைவுகள் உள்ளத்தைத் துளைக்க
ஊனுடம்பு உருக்குலைந்து போகும் முன் – மீண்டும்
நான் ஊர் போக வேண்டும்.

சின்னஞ் சிசுவாய் தாய்வயிறுதைத்து..
மெல்ல அடிவைத்து மண்தாயை முத்தமிட்டு
பள்ளிச் சிறுமியாய் பருவவயது வரை
என்னை வளர்த்து விட்ட
எனதூரை நான் பார்க்க – மீண்டும்
நான் உர் போகவேண்டும்.

துள்ளித் திரிந்து பாடிப் பறந்து
ஓடிப் பிடித்து ஒளித்து மறைந்து
நேரத்தைத் தொலைத்து விளையாடிய
எனதூரைப் நான் பார்க்க....... மீண்டும்
நான் ஊர் போக வேண்டும்

தூண்டில் போட்டு மீன் பிடித்து
துன்பமின்றி நீச்சலடித்து
தாவிப் பிடித்து தண்ணீரில் வீழ்ந்து
தாமரை மலர்களால் தன்னை மறைத்த
தண்ணீர் தடாகத்தை தரிசிக்க – மீண்டும்
நான் ஊர் போகவேண்டும்.

பாடும் குயிலுடன் பாட்டுப் பாடி
ஆடும் மயிலுடன் பரதம் ஆடி
தாவும் மந்தியின் சேஷ்டைகள் செய்து
கூடித் திரிந்த நாட்கள் எல்லாம்
குத்தீட்டியாய் என்னைக் கொல்லுது ஐயோ....
மீண்டும் நான் உர் போக வேண்டும்.

வெளி நாடு வந்து உறவுகள் தொலைத்து...
ஊமைக் காயமாய் உள்ளத்தில் அழுது
நோய்வாய்ப் பட்டு விதியை நொந்து
உடல் விட்டு உயிர் போகு முன்
மீண்டும் நான் ஊர் போக வேண்டும் ஐயா...
மீண்டும் நான் ஊர் போக வேண்டும்.

கவியாக்கம்
திருமதி. சுகுணா இராசலிங்கம்

# ஈழத் தாயே

**தாயே உன் பெயர்**
**தமிழ் என்று ஆனதினால்**
**தாங்கொனாத் துன்பத்தை – இன்று**
**தாங்கிக் கொள்கிறாயா?**

பெற்றுவிட்டாய் பிள்ளைகளை
பெவேண்டும் சுதந்திரம் என்று
பிரசவ வலி மறைய முன்பே
பிரிகின்றாய் பிள்ளைகளை இன்று

ஈழத்தாய் வேண்டுமென்று – நீ
ஈன்றவர்கள் படும்பாட்டை
ஈடு செய்ய வேண்டு மெனின்
ஈழத்தாயே நீ விடுதலை பெறவேண்டுமம்மா

உன்னை இங்க பங்க போட
உருவேறி நிற்பவர்களை
உயிருடன் விடமாட்டோம் – இது
உன்மீது ஆணையம்மா

வளமான உன் வாழ்வை
வளமிழந்து போவதற்று
வகை செய்வோரை – என்றும்
கருக்கொள்ள விடமாட்டோம்

தம்முயிரைத் துச்சமென்றும்
தாய் உயிரே உச்சமென்று
எண்ணமென்னும் ஏட்டில்
எழுதிச் சிதறுகின்றனர்

உனக்காக ஒரு உடலிருக்கு
உருக்குலைந்து போகும் போது
சிதறும் ஒவ்வொரு துகளும்
சீறும் சிறுத்தைக் குட்டிகளல்லவா!

உன் தவப் புதல்வர்கள்
உன்னைத் தம் தலையிலேந்தி
உரிமைக் கீதம் பாடும் நாள்
உனை எட்டிப் பார்க்குதம்மா.

ஈழம் உன் சொத்து
தமிழ் உன் நாமம்
தாயே உன் தாகம் – என்றும்
தமிழீழத் தாயகம்.

பகீரதி ராஜகதிர்வேல்
(இந்தியா)

# நன்றியுடன்
# நன்றிகள் கூறும் மருதம்

"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

எமது மருதம் கலை இரவினை கண்டு களிப்பதன் மூலம் எமக்கு பேராதரவு வழங்கும் உங்களுக்கு முதற்கண் நன்றியைக் கூறிக்கொள்கிறோம்.

கலை இரவு சிறப்புற நிகழ்ச்சிகள் தந்து உதவியோருக்கும், அவற்றில் பங்குபற்றியோருக்கும், எமக்கு எந் நேரத்திலும் விளம்பரம் தந்துதவும் வியாபார நிலையங்குளுக்கும்

எமக்கு எந்த நேரத்திலும் எல்லா வழிகளிலும் சொல்லால் ஆலோசனைகளையும், செயலால் சரியான வழிகளையும் காட்டி நடத்தி இன்று இந்த நிகழ்ச்சி வளர எம்மை நகர்த்திய அனைவருக்கும் எமது நன்றிகள்.


உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகம்
ஜூலை 15, 2000

நிஜங்களை நிழற்படங்களாகத் தருபவர்கள்

# Y2K PHOTO INC

**DIVISION OF**

## SHIVA PHOTOS



எவ்வகை நிகழ்வுகளையும்
நவீன தொழில்நுட்ப முறையில்
படமாக்கி உங்கள் கைகளில்
நிழலா நிஜமா என்று
நீங்கள் சந்தேகம் கொள்ளும்வகையில்
தரக்கூடியவர்கள்

- ½ Hour Photo Finishing
- Professional Photo Finishing
- Digital Imaging System

Weddings, Birthdays and
all other occasions

**S. SIVA** B.Sc.
Professional Photographer


**2480 EGLINTON AVENUE EAST, SCARBOROUGH**
**(Midland & Eglinton)**

**TEL: (416) 436-2222 (416) 281-2222**



# BEST SOLUTION DRIVER TRAINING
# பெஸ்ட் சொலுஷன் றைவர் றெயினிங்

- அரச அனுமதி பெற்ற சாரதிப் பயிற்சியாளர்
  Government approved Driving Instructor
- G1 G2 புதிய சட்ட விதிமுறைகளுக்கான பயிற்சி
  G1 and G2 Driver's Training according to the new laws
- சகல வயதுடைய ஆண், பெண் இருபாலாருக்கும்
  Programs for all ages (men and woman)
- அதிவிரைவில் வீதிப்பரீட்சை பெற்றுத்தரப்படும்
  Very early road test arrangements
- வீதிப்பரீட்சை நாளன்று பயிற்சியும், வாகன ஒழுங்கும்
  Car for your road test with a lesson on the same day
- 41% வாகன காப்புறுதி கழிவுக்கான சான்றிதழ் வழங்கப்படும்
  Insurance savings upto 41%
- G2 வீதிப்பரீட்சைக்கு கடுகதிப் பாதையில் விசேட பயிற்சி
  Freeway (highway) training for G2 road test
- விரும்பிய நேரத்தில் பயிற்சி
  Convenient times for training
- இரண்டு brake கொண்ட automatic cars
  Dual brake with automatic cars



Serving Cities:
Etobicoke (Steel & Kipling Area), Mississauga, Toronto
Scarborough, North York

**N.Mahalingam (Mahan)**
**Tel: (905) 272-3712**
**Cell: (416) 277-9094**

**FREE PICK-UP AND DROP-OFF**

Viveka - digi